# பவள விழா மலர்


# 2002

சரவணபவானந்த வித்தியாலயம்
கோப்பாய்
உயர்வு உள்ளல்
1926




## யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
## கோப்பாய்

M-29



# பவள விழா வாழ்த்துச் செய்தி

எமது கிராமத்தின் கண்ணாக விளங்குகின்ற சரவனபவானந்த வித்தியாலயம் பல தடைகளைத் தாண்டி வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் சென்று 75 ஆண்டுகளில் தனது பவள விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

மேலும் பெருவிருட்சமாக வளர்ந்து எமது கிராமத்தின் பாடசாலை சிறந்த நல்ல சேவையாற்றவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து விடைபெறுகின்றோம்.

கோப்பாய் வடக்கு
சனசமூக நிலைய நிர்வாகிகள்,
கோப்பாய்.

M-29

# பவளவிழா மலர்



JIKOPAY SARAVANA BAVANANTHA VID
DATE--------
LIBRARY

யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
கோப்பாய்

**1926 - 2001**

## பாடசாலைக் கீதம்

பரவியே நாம் துதிப்போம் - கோப்பாய்
சரவண பவானந்த வித்தியாலய மாதாவை
பரவியே நாம் துதிப்போம்.

கரமலடேளேந்தி கல்வி கலை ஞானம்
வரமருளி எமக்கு வாழ்வு தரும் வாணியை
(பரவியே)

சீலம் நிறைந்த சைவம் செந்தமிழ்ப் பண்பெல்லாம்
பாலர் எமக்கு ஊட்டி பரிந்தன்பாய் தருபவள்
ஞானம் புகழ்ஞான பண்டிதனார் தந்த
மூலக் கலைக் கோயில் தானுறை அன்னையை
(பரவியே)

தூய தமிழினொடு துலங்கிடும் விஞ்ஞானம்
நேயமுடன் கணிதம் ஆங்கிலம் விவசாயம்
தோயும் மன இயலும் திகழுடற் கல்வியோடு
ஆயகலைகளெல்லாம் அள்ளி அள்ளித் தருபவளே
(பரவியே)

அயர்வு இல்லாத எங்கள் அதிபரும் வாழி வாழி
நேயமுடன் கல்வி நல்கும் நல்லாசிரியர் வாழி
உயர்வு உள்ளல் என்னும் உன்னத நெறி வாழி
சரவணபவானந்த வித்தியாலயமும் வாழி
(பரவியே)

# எமது அதிபர்



திரு. நா. சண்முகரத்தினம் B.A, Dip-in-Ed, S.L.P.S-I

# அருளாசிச் செய்தி

அன்பு சார் பெருந்தகையரே:-

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் இன்று தனது எழுபத்தைந்தாவது பவள விழாவினை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். கோப்பாய் வாழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு எழுபத்தைந்து ஆண்டுகள் கல்விக்கான பணியை ஆற்றியமை எல்லோரையும் அகமகில வைக்கின்றது. சைவப் பண்பாடும், தமிழ்ப்பண்பாடும் நிறைவான பிரதேசம் இது. ஆரம்பக் கல்வி தொடக்கம் ஆசிரியக்கல்வி வரை பிரதேசத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மனிதப்பிறவியின் உயர்நிலையை அடைவதற்குக் கல்வி இன்றியமையாதது கல்வி இல்லாதவனுடைய வாழ்வு இருட்டறையில் நிற்பது போன்றது இதனை வள்ளுவரும்.

"கண்உடையார் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என்கின்றார்.

இந்நிலையை உணர்ந்தே பாட சாலைகள் ஒவ்வொன்றும், பாடசாலைகள் அனைத்தும் கல்வியினுடைய உயர்நிலையை அடையும் பொருட்டு மாணவர்களைக் கல்வியாளனாக்க முனைந்து கொண்டு இருக் கின்றன. மாணவர்கள் ஒழுக்கம் பண்பாடு கற்றதைக் கற்றபடி நின்று நடக்கும் பண்பினைக் கொண்டவர்களாக நடப்பதே கல்வியினுடைய பயனாகும். இந் நிலையை உணர்த்தும் வகையில் எழுபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றிய அதிபர், ஆசிரியர் ஆனைவரையும் வாழ்த்துகின்றோம். இப்பணியை நிறைவாகச் செய்து கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரிவாராக. பாடசாலை தொடர்ந்து கல்விப்பணி ஆற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாம் குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## ஆசியுரை


கோப்பாய் வடக்கில் வசிக்கின்ற ஊர்ப் பெரியோர்கள் சைவமும் தமிழும் வளர்க்க வேண்டும் என விரும்பிக் கோப்பாய் வடக்குக் கந்தசாமி கோயில் முன்மண்டபத்தில் "ஹிந்து போட்" இராசரத்தினம் தலைமையில் கூட்டம் கூடிக் கோப்பாய் வடக்கில் தமிழ்ப் பாடசாலை ஆரம்பிக்கவேண்டுமெனத் தீர்மானித்து திரு. நாகலிங்கம் ஆசிரியர் இல்லத்தில் பாடசாலை ஆரம்பித்தார்கள். பிற்பாடு வேம்படி பொன்னம்பலம் என்பவர் மையிலி ஓடை என்று குறிச்சியில் தனது சொந்தக்காணியை நன்கொடையாகக் கொடுத்தார் என அறிகிறோம். அதில் பாடசாலை 1926ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுத் தலைமை அதிபராக திரு.வே.சிதம்பரப்பிள்ளை அவர்கள் கடமையாற்றினார். பின்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து கல்வி கற்பித்தல் விளை யாட்டுப் போட்டி, கலைவிழாக்கள் யாவும் நடைபெற்று வருகின்றன. இந்தப் பாடசாலை யில் படித்த மாணவர்கள் பலதரப்பட்ட தொழில்களைப் பெற்று இலங்கையிலும் வெளிநாட்டிலும் சீரும் சிறப்பும் பெற்று நல்வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது இப்பாடசாலையில் அதிபராகத் திரு. சண்முகரத்தினம் அவர்கள் கடமையாற்றி வருகிறார். இவருடைய காலத்தில் இப்பாடசாலை வளர்ச்சியடைந்து வருகிறது. பவள விழாக் காணும் "சரவணபவன்" என்று பெயரைத்தாங்கி வருகின்ற இப் பாடசாலை அங்கு கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் மேன்மேலும் சிறப்புற்று ஓங்க வேண்டுமெனவும் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைந்து சிறப்புற்று ஓங்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல சித்திரவேல் பெருமானைப் பிராத்தித்து ஆசி கூறுகிறேன்.

நன்றி . வணக்கம்


பூரண கீதச்சந்திர குருக்கள்
கந்தசாமி கோவில்
பிரதம குரு

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.


பழைய மாணவர் சங்க செயற்குழு




பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு - 2001



தாச்சிக்குழு



வலைப்பந்துக்குழு - 2002



## செயலாளர்,
## வடக்கு ~ கிழக்கு மகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை; அவர்களின் ஆசிச்செய்தி.

ஒரு நிறுவனம் தனது எழுபத்தைந்து ஆண்டு காலப் பணியை நிறைவு செய்து மேலும் தனது பணியில் தன்னை நிறுவிக் கொள்வது என்பது நோக்கிய சாதாரணமான ஒரு கால நீட்சியை மட்டும் குறித்து நிற்பதல்ல. நிறைவுகளை நோக்கிய பணிகளின் தொடர்ச்சியைப் பேணுவதைக் குறிப்பது. ஒரு கல்வி சார் நிறுவனமான பாடசாலை பவளவிழாக் காண்பது, அது சார்ந்த கிராமத்தை அல்லது நகரத்தை மையமாக கொண்டியங்கிய கல்விப் பணியின் ஒரு சகாப்தத்தை பதிவு செய்து கொள்வதாக அமைகிறது.

அந்த வகையில், கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலை பவளவிழாக் காணும் 75 வருடகால நிறைவு யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது. இலங்கையிலே தனக்கென ஒரு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் உலகிற் களித்திருக்கும் நல்லதொரு பங்களிப்பாக இச் சரவணபவானந்த வித்தியாலயம் விளங்குகிறது. இக் கல்விச்சாலை தனது நிறைவான பணிகளை மேலும் முன்னெடுத்து நூற்றாண்டு விழாவை நோக்கி இனிதாகப் பயணிக்க எனது வாழ்த்துக்கள்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர் யாவரும் கூட்டுறவாக இயங்கிப் பவளவிழாவைக் கொண்டாடும் இவ்வேளை அது தொடர்பாக சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடுவது வரவேற்கத்தக்கது. இம்மலர் ஒரு வரலாற்று ஆவணமாக அமையும் என நம்புகிறேன். இம் மலர் சிறப்புற ஆசி கூறுவதோடு, இலங்கையின் முன்னணிக் கல்வி நிறுவனமாக சரவணபவானந்தா வித்தியாலயும் உருவாவதற்கு உறுதி கொண்டு உழைக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

க.சண்முகலிங்கம்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு.

## வலயக் கல்விப் பணிப்பாளர் வாழ்த்துகின்றார்

கோப்பாய்ப் பகுதியில் கடந்த 75 ஆண்டு காலமாகக் கல்விப் பணி ஆற்றிவருகின்ற நிறுவனமென்ற வகையில் அதன் சாதனைகள் போற்றப்படுகின்ற அந்த வேளையில், பல்வேறு இடர்கள் மத்தியிலும் இடைநிலைக் கல்வியை இலவசமாக ஊட்டுவதுடன் நின்றுவிடாது, இணை பாடவிதானச் செயற்பாடுகள், மாணவரின் ஏனைய செயற்பாடுகட்கும் அடித்தளமாக விளங்கும் இவ்வித்தியாலயம் தொடர்ந்தும் தன் சேவைகளை மாணவருலகிற்கு வழங்கிக் கற்பக விருட்சமாகத் தழைத்தோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்கட்டும்.

திருமதி. செ. மகாலிங்கம்.
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# கோட்டக் கல்வி அதிகாரி வாழ்த்துகின்றார்

சரவணபவானந்தா வித்தியாலயத்தின் எழுபத்தைந்தாவது பூர்த்தி விழாவைக் கொண்டாடும் நிகழ்வை அலங்கரிக்கும் இப்பவளவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நீண்ட கால வரலாறு கொண்டதாகவும், சைவத்தையும் தமிழையும் பேணி வளர்ப்பதாகவும் அமைந்த இப் பாடசாலை, சிறந்த முறையில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆகிய பணிகளை ஆற்றி வருகின்றது. நடுத்தரமான வளங்களுடன் திருப்தியான சேவையை வழங்கி வருதல் பாராட்டுக் குரியது. இப் பாடசாலை மேலும் பல வழிகளிலும் சிறப்புற வளர்ந்து மாணவரின் எதிர் காலத்திற்கு ஒளியூட்டும் ஒரு நிறுவனமாக மிளிர மனதார வாழ்த்துகின்றேன்.

R.சிவஞானசுந்தரம்  
கோட்டக் கல்வி அதிகாரி,  
கோப்பாய்.

# வாழ்த்துச் செய்தி

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" - வள்ளுவம்

தென்றல்கள் எம்மைத் தொட்டுச் செல்லாவிட்டாலும் இடை விடாமல் இடையூறுகள் வந்தாலும் நம் யாழ்பாணக் கல்விப் பாரம்பரியம் தொலைந்து விடக் கூடாது. நம்மை விட்டுத் தொலை தூரம் சென்று விடக் கூடாது என்ற நன்நோக்கோடு இயங்கி, இன்று பவளவிழாக் காணும் யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயப் பவள விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அமைகின்றேன்.


இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், பரீட்சைப் பெறுபேறுகள், சமூகத் தொடர்புகள் அனைத்தும் பாராட்டத் தக்கவை. அனைத்துப் பெருமைகளும் அதிபர் உட்பட அனைத்து அங்கத்தவர்களையும் சாரும். பாடசாலை ஒரு குடும்பம். அதற்கு இலக்கணமாகத் திகழும் பாடசாலைகளில் இப் பாடசாலையும் ஒன்று.

இப் பாடசாலைப் பணி சிறந்து, மேலும் பல விழாக்களைக் காண வாழ்த்துகிறேன்.


-நன்றி-

க.கேதீஸ்வரன்
பிரதேச செயலர்,
கோப்பாய்.

தமிழ் இலக்கிய மன்றம் - 2002




சமூகக் கல்வி மன்றம் - 2002



மாணவத் தலைவர்கள் - 2002



சுகாதார உடற்கல்வி மன்றம் - 2002



# சித்திர வேலவன் திருவருள் பெற்ற
# தெய்வீகத் திருத்தலம்
# கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை

"என்னை நன்கு இறைவன் படைத்தனன்
தன்னை நன்கு தமிழ் செய்யுமாறே"

சைவத் திருமந்திரத்தை உலகிற்கு வழங்கிய திருமூலர் இவ்வாறு கூறியுள்ளார். முத்தமிழுக்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்குபவன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். சிவனது நெற்றிக் கண்ணின் ஒளிப்பழம்பின் மூலம் முகிழ்ந்தவர் தமிழ்க் கடவுளாக விளங்கும் ஆறுமுகப் பெருமானாகிய அழகன் முருகன். இறைவன் தன்னை நன்கு படைத்ததன் மூலம் தமிழுக்கும், தமிழ் மூலம் தனக்கும் பணியாற்றுவிப்பதற்தே எனக் கூறித் தன் பிறவியின் அரிய கடமையையும் பெருமையையும் எடுத்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் தன் பிறவி மூலம் உலகிற்கு ஆற்ற வேண்டிய தேவையையே திருமூலர் தமது வாக்கின் மூலம் உறுதி செய்துள்ளார்.

அந்த வகையிலேயே வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் எம் பெருமானது பெயரிலேயே சரவணபவானந்த வித்தியாசாலை என்ற அறிவாலயத்தைக் கோவையம் பதியின் அறிவாளிகளாக விளங்கிய அமரர் நாகலிங்கம் அவர்கள் 1926ம் ஆண்டு தமது இல்லத்திலேயே நிறுவினார்கள்.

அந்த அறிவாலயம் கோப்பாய்க் கிராமத்திற்கு ஆற்றிய அறிவுப் பணி தெய்வீகமானது ஆலயங்களும், பாடசாலைகளும், வைத்திய சாலைகளும் தெய்வீக நிலையங்களாகவே கொள்ளப்பட வேண்டியவை. அந்த வகையில் வளர்ந்து உயர்ந்து நிற்கும் சரவண பவானந்த வித்தியாசாலை பவள விழாக் காண்பது கோப்பாய்க் கிராமத்தின் வாழ் நால் வெற்றி விழாவாக அமைகின்றது. பவள விழாவின் இம் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வையும் மனநிறைவையும் அடைகின்றோம்.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளிதி
னாராய்ந் தன்மையுடைய கற்பவே நீரொழியப்
பாலூன் குருகிற் றெளிந்து.

எனக் கூறும் நாலடியார் பாடலுக்கு அமைய அன்னப்பட்சிக்குப் நீரைப்பிரித்துப் பாலைப் பருகுவது போலக் கற்பதற்கு ஏற்பவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்பது எமது வாழ்வின் தலையாய கடமை. அதுவே வாழ்க்கையின் இலட்சியத்திற்கு உறுதி தர வல்லது. இதையே எமது மூதாதையர்கள் பின்பற்றி வாழ்ந்து சிறந்தனர். நலமும் அதைப்பின்பற்றிச் சரவணபவானந்த வித்தியாலையைப் பணிந்து வணங்கிப் போற்றி வளர்ந்து எமது சிறார்களின் நல்வாழ்விற்குரிய அறிவாலயமாகப் பேணவேண்டியது எம் ஒவ்வொருவரது கடமையாகும். அப்பாடசாலையின் சிறார்களுக்கு அதிபர் ஆசான்கள் அன்னம் பாலை உண்டது போல உயர்ந்தவற்றையும் நல்லவற்றையும் நுகர்வதற்கு வழிகாட்டிகளாக வாழ வேண்டும் என்றும் அதன் மூலம் கிராமம் பிரகாசமான வாழ்வைப் பெறவேண்டும் என்றும் பிரார்த்தித்து அமைகின்றேன்.

க. ஸ்ரீஸ்கந்தராஜா
தலைவர்,
ஆலய தரும பரிபாலனசபை,
வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்,
கோப்பாய்.

## கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில் பரிபாலன சபையினரின் பவள விழா வாழ்த்துச் செய்தி.

எமது சமூகத்தினரின் எதிர்கால நல்வாழ்விற்கு முழு நிறைவான கல்வி இன்றியமையாதது. ஏனெனில் கல்வியினால் உருவாக்கப்படும் மனிதவளமே ஒரு சமுதாயத்தின் பெறுமதி மிக்க சொத்தாகும். கல்வியை வளர்க்கும் கல்விச் சாலைகள் போற்றப்பட வேண்டியவை. இவ்வகையான கல்விச்சாலைகளை உருவாக்கியவர்கள் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

இந்த வகையில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகளில் எத்தனையோ கல்வியாளர்களை எமது சைவப் பாரம்பரியத்திற்கு அமைய உருவாக்கி இவ்வுலகத்திற்கு தந்துள்ளது.

இப்பாடசாலையின் ஸ்தாபகர்களையும் அதன் வளர்ச்சியில் பங்கு கொண்ட அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் வித்தியா பகுதியினர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இப்பாடசாலை எமது பெறுமதிமிக்க பாரிய சொத்தாகும். இச் சொத்தை பெரு விருட்சமாக வளரச் செய்வது நம் ஒவ்வொருவரினதும் பெரும் கடமையாகும்.

ஒவ்வொரு வருடமும் இவ் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புப் பணமாக ஒரு தொகையை வழங்கி வருகின்றோம்.

இவ்வித்தியாலயம் சகல வளங்களையும் பெற்றுச் சைவ பாரம்பரியத்திற்கு அமைய மிளிர எல்லாம் வல்ல கண்ணகைத்தாயை வேண்டி வாழ்த்தி விடைபெறுகின்றோம்.

இ. தெய்வேந்திரம்
தலைவர்,
ஆலய பரிபாலன சபை

# முன்னாள் பழைய மாணவர் சங்கச் செயலாளரின் செய்தி.

முருகனின் மறு பெயர்களில் சரவணபவனும் ஒன்று. முருகன் என்றால் அடிகள், அன்பர், தமிழின்பக்கடவுள் என்று பலபடக்கூறப்படுகிறது. கோப்பாய் வாழ்மக்கள் நல்ல தமிழறிவும் சைவப்பற்றும் மிக்கவர்கள். இதற்கு உந்து சக்தியாக விளங்குவது பவளவிழாக்காணும் சரவண பவானந்த வித்தியாலயம் என்று கூறலாம். இதனை ஆரம்பித்து வைத்த பெரியார்கள் என்றும் நினைவு கூரத்தக்கோராகவும் பாராட்டுக்கு உரியவர்களாகவும் உள்ளனர். இவ்வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி கற்று வாழ்வின் நற்பலன் பெற்றவர்களில் யானும் ஒருவன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அதே போல இங்கு கற்ற பலர் இலங்கையில் மட்டுமல்லாது வெளி நாடுகளிலும் உயர்பதவிகள் வகிப்பதோடு பல வளங்கொழிக்கும் தொழில்களிலும் ஈடுபட்டு வருவது வித்தியாலய வளர்ச்சிக்கும் அதன் செயற்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாகும்.

1926 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் பல சவால்களை எதிர்கொண்டு சைவமும் தமிழும் வளர சித்திரவேலவன், கற்புக்கரசி கண்ணகித்தாய் அருளாசிகளுடன் நல்ல மனித விழுமியங்கள் கொண்ட மக்களை உருவாக்கும் பணி தொடர, இவ்விழா வழி செய்யும். இதன் வரலாற்றைச் சற்று நோக்கும்போது, மறுமத எதிர்ப்பின் மத்தியிலும் சைவமும் தமிழும் வளர அயராது உழைத்த நம்முன்னோர்களுடன் அதிபர்களாகக் கடமையாற்றிய அமரர் வே.சிதம்பரப்பிள்ளை, திரு.மு.வைத்திலிங்கம், ஆயிரம் பிறைகண்டு இன்றும் பொதுச்சேவையில் முன்னின்று ழைத்துவரும் திரு. க.இ. குமாரசாமி ஆகியோர் பணி பாராட்டுக்குரியது.

மனிதனின் வாழ்க்கை அவரின் சேவையினாலேயே கணிக்கப்படுகிறது. நல்ல மனிதர்களாக யாவரும் போற்றுபவர்களாக வாழ்ந்திட, நல்ல பண்புகள், நல்லொழுக்கம் அவசியமானது. மனிதர்கள் இவற்றினைப் பெறக் கல்வியுடன் சேர்ந்த நல்லொழுக்கத்தைக் கற்பிப்பதில் கல்விக்கூடங்களே சிறப்பான சேவை செய்கின்றன. இன்றைய சமுதாயக்கட்டமைப்பில் உடைவு ஏற்படாதவாறு கவனமாக இளம் சிறார்களை வளர்த்தெடுப்பதில் கல்விச் சமூகம் பெரும் பங்காற்ற வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

பழைய மாணவர்சங்கச் செயலாளராகக் கடமை யாற்றிய காலத்தில் வன்னிப்பகுதியிலிருந்து வேண்டிய மரவகைகளைப் பெற்று வித்தியாலய மேற்குப்புற வட தெற்கு கட்டிடங்கள் அமைத்தல், நீர்த்தாங்கி அமைத்தல், நூலகக் கட்டிடம் அமைத்தல் போன்றவை இடம் பெற்றமை குறிப்பிட தக்கவையாகும். தொடர்ந்து பாடசாலை வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் ஒத்துழைப்பின் மூலம் இவ்வித்தியாலயம் பல துறைகளிலும் வளர்ச்சி காண வேண்டுமென இறையருள் கூடப் பிரார்த்தித்துப் பவள விழா சிறப்புற எனது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க சைவமும் தமிழும்!!

இ. இராசரத்தினம்,
முன்னாள் உப தபாலதிபர்,
முன்னாள் தலைவர்,பலானை கண்ணகை அம்மன்
கோவில் பரிபாலன சபை,
பிரஜைகள் குழு,இணக்க சபை.

# வாழ்த்துரை

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் 75ம் ஆண்டு நிறைவை யொட்டி வெளியிடப்படும் மலரில் இடம் பெற இவ் வாழ்த்துச் செய்தி அனுப்புவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். இவ்வித்தியாசாலையின் ஆரம்பக்கல்வியிலிருந்து எனத தந்தையும் தாயும் ஆசிரியர்களாகக் கடமையாற்றியதும் எனது ஆரம்பக்கல்வி தொடக்கம் 7ம் வகுப்பு வரை அங்கு கல்விபயின்றதும் என்னை இப் பாடசாலையுடன் நெருக்கமாக இணைத்து விட்டது. கடல் கடந்து அன்னியதேசத்தில் வசித்தாலும் இளமைக்காலத்துப் பள்ளிக்கூட நினைவுகள் மனதில் பசுமையாக உள்ளன.

இப் பாடசாலை பல பெரியார்களின் முயற்சியினால் திரு. நாகலிங்கம் ஆசிரியரின் வளவில் 1926ம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி அன்று ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆசிரியர்களுடன் இயங்கியது. பின்னர் 1928ம் ஆண்டு விஜய தசமி அன்று மயிலியோடை என்னும் காணியில் அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. ஊர் மக்களின் நன்கொடைகளாலும் பல பெரியார்களின் விடாமுயற்சியாலும் இப்பாடசாலை துரிதமாக வளர்ச்சி அடைந்தது. 1932ம் ஆண்டு S.S.C. (9ம் வகுப்பு) வகுப்பு வரை நடத்துவதற்கு அங்கீகாரம் பெற்று உயாதர பாடசாலையாகியது. 1930ம் ஆண்டு எனது தந்தையாகிய சின்னத்தம்பி விசுவலிங்கம் முதலாவது பயிற்சி பெற்ற ஆசிரியரானார் பின்னர் தாயார்

முதலாவது பயிற்சி பெற்ற பெண்ஆசிரியராகவும் நியமனம் பெற்றனர். தாயார் 1936ல் காலமானார். எனது தந்தையார்1966 வரை இப்பாடசாலையிலேயே தன்னுடைய முழுச்சேவைக்காலத்தையும் கழித்தார். பாடசாலையின் படிப்படியான வளர்ச்சியைப் பற்றி திரு. க. இ. குமாரசாமி அவர்கள் "கோப்பாய் வரலாறு- பாகம் 1ல்மிகத் தெளிவாக எழுதியுள்ளார். மேற்கூறிய விபரங்கள் பலவற்றை அவரின்நூல் வாயிலாக அறியச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இப் பாடசாலையில் எனது சகோதரர்கள், உறவினர்கள், தங்கள் ஆரம்பக்கல்வியைப் பெற்று மென்மேலும் படித்து நல்ல உயர்ந்த பதவிகள் வகிக்கின்றார்கள். ஆசிரியத் தொழிலை மேற்கொண்டவாகள் பலர் பழையமாணவாகள் சிலர் இப் பாடசாலையின் அதிபர்களாகவும் கடமையாற்றியுள்ளனர். இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஏனைய பெரியார்களுடன் சேர்ந்து என்தந்தையாற்றிய சேவைகளை எண்ணி நான் மிகவும் பெருமிதமடைகிறேன். 36 வருட சேவைக்குப்பின் அவர் இளைப்பாறியபோது அவரின் பழைய மாணவர்களும் ஊர் மக்களும், ஆசிரியர்களும் பாடசாலையில் திரண்டு அவருக்கு அளித்த பிரியாவிடை வைபவம் இன்றும் என் மனக்கண்முன் நிற்கிறது..


இப்பாடசாலை பல இன்னல்களுக்கடையிலும் ஒழுங்காக இயங்கி வருவது எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. அதிஷ்டவசமாகத் தொடர்ச்சியாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட அநுபவம் நிறைந்த தலைமையாசிரியர்களின் நிர்வாகத்திறன் ஆசிரியர்களின் கடமையுணர்ச்சிமிக்க சேவை, பெற்றோர்களின் விடாமுயற்சி, உதவிகள், அனுசரணைகள், பழைய மாணவர்களின் விழிப்புணர்ச்சி , ஆகியன உறுதுணையாக அமைந்து இப்பாடசாலை சைவசமயச் சூழலில் பாடசாலையை அமைத்த பெரியோர்களின் கனவு நனவாகும் வகையில் பலதுறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது. சைவவிருத்திச் சங்கம் நல்கிய ஊக்கமும் ஆதரவும் எமது அதிஷ்டமாகும். தொடர்ந்து பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், இப் பாடசாலையின் வளர்ச்சிக்குக் கை கொடுப்பார்கள்.

பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.


நன்றி

வி. சோமசேகரசுந்தரம்
கனடா


நவீன வசதிகளுடன் நூலகமும், கணனி அறையும் (உட்புறம்)




சிதம்பரப்பிள்ளை அரங்க தோற்றம்



உடற்பயிற்சிக்குழு



அதிபர், ஆசிரியர்கள் - 2002



## வாழ்த்துச் செய்தி

எனது ஆரம்பப் பாடசாலை விழாவெடுக்கும் தருணத்தில் பாராட்டுச் செய்தியை அனுப்புவதில் அக மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு பாடசாலை வயதில் 75 வருடங்கள் அதிகமான ஒன்று அன்று ஆனால் படிப்படியாக வீறுநடை பயின்று வளர்ச்சி கண்டுள்ளமை பாராட்டுக்குரியது. இதன் வளர்ச்சியும் மாணவர்களின் உயர்ச்சி நிலையும் நாம் எல்லோரும் கருத்தில் கொண்டு மேலும் உழைக்கவேண்டும். இப் பாடசாலையில் பலர் ஆரம்பப்பாடசாலையில் கல்வி பயின்று பின்பு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கற்று மேல்நிலை அடைந்தமை வெள்ளிடைமலை நான் கிறிஸ்தவக் கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் நல்ல மூலப்பொருள்களைக் கல்லூரி என்னும் தொழிற்சாலைக்கு கிடைக்கச் செய்தமைக்கு பாராட்டாமல் இருக்கமுடியாது.

கல்வி "நாகரிகத்தின் திறவு கோல்" கலாச்சாரத்தின் அளவு கோல் என்பதை யாவரும் அறிவர். இப்பாடசாலை நன்நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டது. இது தோன்றியிருக்காவிட்டால் பலர் கல்வி பெறும் வாய்ப்பை இழந்திருப்பார்கள் இப்பாடசாலை சைவ, தமிழ் மரபுகளையும் விழுமியங்களையும் பேணிக்காத்து வந்துள்ளது. தொடர்ந்தும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய நல்லொழுக்க பிரச்சனைகளை உருவாக்குவதோடு புரிந்துணர்வுள்ள ஆளுமைகளைத் தோற்றுவிப்பதும் பாடசாலையின் கடமையாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் இரு கண்களாக இருந்து தொடர்ந்தும் செயற்பட்டு வந்தால் தான் சமூகம் மேலும் நற்பயனை அடையலாம் இவ்விழாவை முக்கியமான மைக்கல்லாக கருதுகிறேன். 21ம் நூற்றாண்டு அறிவு வளர்ச்சியின் காலம் என அழைக்கப்படுகிறது.

ஞாபகம் என்னும் பாதையில் சென்று பார்க்கும் பொழுது பல நல்ல சம்பவங்கள் நமது மனக்கண்முன் தோன்றுகின்றன. ஒரு சிறு சமூகம்" என அழைக்கப்படுகிறது. சமுகத்தின் பல வளர்ச்சிக்குரிய பல நிகழ்ச்சிகள், வைபவங்கள் இடம் பெற்று, மக்களுக்குக் கோப்பாய் கிராமசபைத்தலைவராகவும், கோப்பாய் கொத்தணி அதிபராகவும் இருந்த காலத்தில் பல வைபவங்களில் பங்கு பற்றிப்

பாடசாலையின் விருத்திக்காகவும், கிராமத்தின் தேவை பற்றியும் கலந்துரையாட வாய்ப்புக்கள் கிடைத்தன.

அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர் ஆகியோரின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை. விபரமாக ஆசிச் செய்தியில் குறிப்பிடுவது பொருத்தமன்று.

ஆரம்பக் கல்வியை இங்கே மேற்கொண்டேன். இவ்வித்தியசாலை கல்வி சொல்ல வல்ல நல்வித்தைகளை விதைத்து நல்ல அத்திவாரத்தை இட்டுள்ளதை நான் என்றும் மறக்கமாட்டேன். தொடர்ந்து உதவி புரிவேன்.

கல்விக்கு நாம் கொடுத்த பணத்தை ஒரு முதலீடு எனலாம். இந்த முதலீடு பொருளியலில் கூறப்படுகின்ற குறைந்து செல்லும் விளைவு விதிக்கு (LAW OF DIMINISHING RETURNS) அப்பாற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

"நாங்கள் பெறுவதை வைத்து வாழ்த்துகிறோம்" ஆனால் கொடுப்பதனால் வாழ்க்கையை உருவாக்குகிறோம், எனப் பிரித்தானிய முன்னாள் பிரதமர் உவின்-சன் சேர்ச்சில் கூறியதை நினைவில் கொள்வது சாலவும் பொருந்தும். நான் விழாச் சபையில் கலந்து உதவி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்.

பண்டைய தமிழர் வாழ்வும் வாழ்க்கை முறையும் தத்துவமும் உண்மையும் பொதிந்தவை. அதனுள் மறைந்துள்ள தனித்துவம் மேலானது அதே போன்று புத்துணர்வு, புதிய சிந்தனை உருவாக வித்திடும். விளைவாக எதிர்காலம் இனிய நாட்களாக மிளிரவைக்கும் விழாவாக அமைய வேண்டுகிறேன். விழாச் சபைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


வாழ்க! வளர்க!! உன்பணி சிறக்க!!!

பூ.க. இராசரத்தினம்
முன்னாள் கிராம சபைத் தலைவர், கோப்பாய்
இளைப்பாறிய அதிபர், கோ.கி.க

மலர்க்குழு




பழைய மாணவர் சங்க செயற்குழு - 2000



## இந்துமா மன்றம்



## கணித விஞ்ஞான மன்றம் - 2002



# சபாபதி நாவலர் சனசமூக நிலையத்தின்
# வாழ்த்துரை

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை தனது பவள விழாவை இவ்வாண்டு கொண்டாடுவதை இட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

1926ம் ஆண்டில் அமரர் மு. நாகலிங்கம் அவர்களால், வடகோபடபாய் சித்திர வேலாயுத சுவாமி கோவில் அருகில் ஓர் திண்ணைப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை மயிலியோடையில் தனக்கென ஓர் கட்டிடத்தில் இவ் வளவு காலமும் சிறப்புற இயங்கி வருகிறது.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரையில் மாணவர்களைக் கல்வியிலும், விளையாட்டிலும், ஒழுக்க நெறியிலும் செல்ல நெறிப்படுத்தும் இப்பாடசாலை எமது கிராமத்திற்கு ஒரு வரப்பிரசாதமென்றே சொல்ல வேண்டும். கடமையுணர்வும், சேவைமனப்பாங்கும் கொண்ட அதிபர்களினதும், பாடசாலை நலன் புரிச்சங்கத்தினரதும், பழைய மாணவர் சங்கத்தினரதும் சேவைகள், இந்தப் பவள விழா ஆண்டில் நினைவு கூர வேண்டியவை. இவர்களது அயரா உழைப்பால், பல கட்டிடங்களையும், ஒரு திறந்த வெளி அரங்கையும் சிறந்ததோர் விளையாட்டு மைதானத்தையும் இப்பாடசாலை பெற்றுள்ளது.

பல கல்விமான்களையும், அரச அதிகாரி களையும், சமுக சேவையாளர்களையும் இப்பாடசாலை உருவாக் கியதை மறந்துவிட முடியாது.

பவள விழாக் கொண்டாடும் இப்பாடசாலை மேலும் பல வளங்களைப் பெற்று இன்னும் பலலாண்டுகள் கல்விப் பணி செய்யவேண்டும் என்பதில் நாம் அனைவரும் பங்கு கொண்டு உழைப்போமாக!

ஸ்ரீ சபாபதி நாவலர் சனசமுக நிலையத்தினர்
கோப்பாய் வடக்கு.

# பவளவிழா வாழ்த்து

ஊர் வாழ்வது உத்தமரால் உத்தமரை உருவாக்குவது உயிரினும் மேலான கல்வி. அந்தக் கல்வியை வழங்குவது பள்ளிக் கூடங்கள். பள்ளிக் கூடங்கள் பல இருப்பது ஊருக்குத் தனிச் சிறப்பு.

எம் ஊரவர்கள் பெரும் தவம் செய்தவர்கள். அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் சகல நிறுவனங்களும் எம் ஊரிலே இருப்பது ஓர் வரப்பிரசாதம்.


அந்த வகையில் எம் கிராமத்தில் இயற்கை எழில் குவிந்த அமைவிடத்தில் அமைந்து விளங்குவது "சரவணபவானந்த வித்தியாலயம்" . இவ் வித்தியாலயம் எத்தனையோ சான்றோர்களை உருவாக்கிய பெருமை மிக்க வரலாற்றினைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இங்கே அரிவரிக் கல்வியைக் கற்றவர் இப்போ ஆராய்வுக் கல்வியில் புலமை பெற்றுத் திகழ்கிறார்கள். தன்னகத்தில் வந்து கற்றவர்களுக்கெல்லாம் நல்ல ஆளுமையை நல்லொழுக்கத்தை, பண்பை, பணிவை, பரந்த மனப்பாங்கை ஊட்டி வளர்த்திருக்கிறது இவ் வித்தியாலயம் என்பதை எம் ஊர்மக்கள் அகங்களும் முகங்களும் கூறும்.

இப் பெருமையை எமக்கு வழங்கிய வித்தியாலயம் இன்று 75வது அகவையை அடைந்துள்ளது. அதனைப் பாராட்டி விழாவும் எடுத்துச் சிறப்பிக்கப்படுகிறது. பவளவிழாக் காணும் எமது வித்தியாலயத்தை நாமும் போற்றி வாழ்த்துகிறோம்.

ஸ்ரார் விளையாட்டுக் கழகமும்,<br>
அம்மன் கோவிலடி சனசமூக நிலையமும்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2000




## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2001





5ம் தர புலமைப்பரிசில் பரிட்சை சித்தி பெற்ற மாணவரும், வித்தியாலய அதிபர், ஆசிரியர்களும் இம் மாணவரைப் பயிற்றுவித்த ஆசிரியை திருமதி ச. செல்லத்துரை மத்தியில் காணப்படுகின்றார்.



5ம் தர புலமைப்பரிசில் பரிட்சை சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டும் விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த லயன். டாக்டர் வை.தியாகராஜா அவர்களை மாணவரொருவர் மாலை அணிவித்துக் கௌரவிக்கும் காட்சி

## வித்தியாலய மாதாவின் சார்பில் ஓர் வேண்டுகோள்

எம் அன்புக்குரிய பழைய மாணவர்களே !

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கிளை ஒன்றினைக் கொழும்பில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் இதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொள்வதற்குத் திருவாளர்கள் இ. இராசரத்தினம், சி.கா. திருச்செல்வம், பொ. விக்னேஸ்வரலிங்கம் ஆகியோருக்கு நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. இவர்களுக்குக் கொழும்பிலும் வெளியூர்களிலும் உள்ள எமது பாடசாலை பழைய மாணவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி, எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி புரியுமாறு அன்புடனும் பணிவுடனும் வேண்டுகின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்

திரு. இ. இராசரத்தினம்
18, பெனான் பேமாவத்தை,
கொழும்பு- 06.

திரு. கா. திருச்செல்வம்
88, வாசல் வீதி,
கொழும்பு - 13.

திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம்
35/8, யோசெப் ஒழுங்கை,
கொழும்பு - 04.
தொ.பே.இல: 074- 513629

## பவள விழாக் காணும் சரவணபவானந்த வித்தியாலயத்திற்கான பணிவன்பு மிக்க வேண்டுகோள்

எமது கோவையம் பதியில் வீற்றிருக்கும் "சரவணபவ" என்று அழைக்கப்படுகின்ற "ஸ்ரீ சித்திர வேலாயுதர் பெருமாளின்" திருவருளினால் அமரர் திரு நாகலிங்கம் அவர்களது இல்லத்தில் திண்ணைப் பள்ளியாக ஆரம்பித்துப் பின்னர் மையிலியோடை என்று அழைக்கப்படுகின்ற குறிச்சியில் நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்ட "சரவணபவானந்த வித்தியா சாலை" என்னும் அறிவுக் கூடம் தனது 75 ஆண்டுகளை நிறைவு செய்து 2001ஆம் ஆண்டிலே அதன் பவள விழாவினைக் கொண்டாடுவதற்குக் கிடைத்துள்ள இறைவன் திருவருளை எண்ணி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவதோடு இக் கல்விக் கூடம் ஆனது எமது கிராமத்துச் சிறுவர்களின் அறிவு மற்றும் ஆற்றல் வளர்ச்சிக்கு மேலும் பல்லாண்டுகள் நிலைத்து நிற்கத் துணை புரிய வேண்டும் என இப் பொன்னான நாளிலே அந்த "சரவண பவனிடமே வேண்டுகின்றேன்".

இப் பாடசாலையினது பவள விழாவினைக் கொண்டாட வேண்டும் என எண்ணி முயற்சிகளை மேற்கொண்ட குழுவில் அடியேனுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்கான உந்து சக்திகளாக விளங்கிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், மற்றும் நலன் விரும்பிகள் போற்றப்பட வேண்டியவர்கள். மிக முக்கியமாக அமரத்துவம் அடைந்த இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் மு. நல்லையா, ஆசிரியர் சீ.க. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரப்பட வேண்டிய வர்கள். மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் கோவைக்கிழார் க.இ.குமாரசாமி ஆசிரியர்கள், க.மார்க்கண்டு, பொ. சதானந்தம் ஆகியோர் இம் முயற்சியில் தம்மைப் பெரிதும் இணைத்து வந்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலே இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரு முயற்சி சம்பந்தமாகவும் அந்த முயற்சி வெற்றி பெறுவதற்கு உதவிய பெரு மகான்கள் பற்றியும் குறிப்பிடுதல் எனக்குரிய மிக இன்றியமையாத கடமையாகும்.

எமது பழைய மாணவர் சங்கமானது வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுவதற்கான ஓர் நிதியினை ஆரம்பித்தது. இந்த நிதி சேகரிப்புக்கு முதலாவது அன்பளிப்பினை எமது கிராமத்தின் பெருமைக்குரிய தொழில் அதிபரான திரு அ. சற்குணநாதன்

அவர்கள் வழங்கி ஆரம்பித்து வைத்தார். இதற்குப் பலரது நன்கொடைகள் கிடைக்கப் பெற்றன. இந்த நிதிக்கு உதவுமாறு வெளி நாட்டில் உள்ள அன்பர்களும் வேண்டப் பெற்றனர். எமது இந்த வேண்டுகோளுக்கு மதிப்புக் கொடுத்து தற்போது சுவிஸ்லாந்தில் வசித்து வருபவரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமான திரு.அ.காசிப்பிள்ளை அவர்கள் அந்த நாட்டிலே வசித்து வரும் எமது கிராமத்துப் பழைய மாணவர்கள் பலரிடம் நிதியைச் சேகரித்து ஒன்றரை இலட்சம் ரூபா வரையில் எமக்கு அனுப்பி வைத்தார். இந்த நிதியானது பழைய மாணவர்கள் சங்கக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு அதிலிருந்து கிடைத்த வட்டிப் பணத்தைக் கொண்டு வறிய மாணவர்களது கல்வித் தேவைக்கு உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.

மேலும் எமது பாடசாலைக்கு ஓர் விளையாட்டு மைதானம் இல்லாத பெரும் குறை தொடர்ந்து இருந்து வந்தது. பாடசாலைக்கென இருந்து வந்த சிறிய விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்க வேண்டும் என நிர்வாகத்தினால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதும் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்குரிய காணியைக் காணி உரிமைக்காரர்கள் விற்க முன்வராததினால் அம் முயற்சி கைகூடாமல் இருந்து வந்தது. ஆனால் எதிர்பாராத விதமாகக் காணி உரிமையாளர்கள் உரிய காணிகளை விற்பதற்கு முன்வந்த போது அதனை விலை கொடுத்து வாங்குவதற்கான பணம் பாடசாலை நிர்வாகத்திடம் இல்லாத காரணத்தினாலும் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது என்று கருதியதனாலும் பழைய மாணவர் சங்க நிர்வாகம் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கென வைத்திருந்த நிதியை முற்பணமாக வழங்கி உரிய காணியைக் கொள்வனவு செய்து பாடசாலைக்கான விளையாட்டு மைதானமும் அமைக்கப் பட்டுள்ளது. இவ்வாறான ஒரு விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டதில் இக் கல்வி மேம்பாட்டு நிதிக்கு அன்பளிப்பு வழங்கிய எங்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்பதில் நீங்கள் பெருமைப்பட இடமுண்டு.

அத்துடன் முற்பணமாக வழங்கப்பட்ட நிதியைத் திரும்பவும் சேகரித்து அதனை உரிய கணக்கிற்கு வைப்புச் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் உரிய நிதிக்கு அன்பளிப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இக் கல்வி மேம்பாட்டு நிதிக்கு மேலும் அன்பளிப்பு வழங்கி எமது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கு உதவுமாறு உங்கள் அனைவரையும் பலவிதத்திலும் பாதிப்புக்குட்பட்டுக் கல்வியை தொடர்ந்து கற்பதில் கஸ்டங்களை எதிர் நோக்கி உள்ள எமது எதிர்காலச் சந்ததியினர் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன். மேலும் வெளி நாடுகளில் வசித்து வரும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் திரு காசிப்பிள்ளை அவர்களை முன் உதாரணமாகக் கொண்டு எமது கிராமத்தின் பிள்ளைகளது கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வருமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

வணக்கம்

பொ.விக்னேஸ்வரலிங்கம்
முன்னாள் ப.மா.ச. செயலாளர்.

# அன்னைக்கோர் வாழ்த்து!

சரஸ்வதி கனகரத்தினம்.
(பழைய மாணவி)

**பல்லாண்டு வாழியவே!**

அகரமுதல எழுத்தெல்லாம் அறியவைத்து அன்புடனே
அத்திவாரம் இட்டுநன்றே ஆளாக்கி உயரவைத்து
அகிலமதில் அறிவறிந்த பலமக்கள் ஈன்றளித்த
அன்னையே ! ஆலயமே ! நின்னையே போற்றுதுமே!
பவளவிழா ஆண்டதனிற் பண்பாய்ப் பாடிநின்று
பார்புகழ விழாவெடுத்துப் பரவியே ஏத்திடுவோம்!
கோவையூர் வடபாலிற் கோதறவே நல்லகல்வி
குவலயம் கண்டிடவே கொடுத்துநீ நின்றனையால்.

சான்றோர் சாற்றிடும் சரவணன் சார்சூழல்
சால்புறும் திண்ணையதில் சமைந்தநல் லாலயமாய்
ஆன்றதனில் அறிவுமிகு மாசிரியர் பலர்பணியால்
அறியாமை இருள்நீங்கி அறிவொளியை யேற்றிவைத்தாய் !
அகிலமதில் எம்பதியும் அறிவினால் உயர்ந்திடவே
ஈண்டுமே நின்புகழை ஏத்தவும் இல்லைமொழி !
அன்றுநீ செய்தபணி அன்னையே உன்னடியில்
அமரராம் அதிபர்கள் ஆசான்கள் ஆற்றினரே !

நிலையான இடமொன்றில் நின்சேவை விழைந்தோரும்
நீள்திண்ணை தனைநீக்கி நீடுமனை புனைந்திடவே
நயமுடனே புலமதனை நன்மனதாய் நல்கிநின்ற
நம்மூரின் பெரியாரை நன்றியொடு போற்றிடுவோம்

பெரியார்கள் பொன்மனம்போல் பெரும்பணியும் பெருகியதே !
பேதமிலா அன்னைநீர் பெருவளர்ச்சி பெற்றிரே !
பெரும்பணியின் பயனதனைப் பெற்றுநின்ற எம்பதியும்
பெருமையொடு பாரினிலே பேரோங்கி நின்றதுவே !

நாகலிங்கப் பெரியார்முதல் நற்பணிகள் செய்யதிபர்
நல்லசிதம் பரப்பிள்ளை வைத்திலிங்கம் விசுவலிங்கம்
நல்லையா என்றுவரு மமரர்கள் அரும்பணியால்
மனமகிழ்ந்து நீபுரிந்த மாண்புமிகு சேவையினை
அன்றுமுதல் இன்றுவரை ஆதரித்தே ஆற்றிநிற்கும்
அன்புடை யதிபர்கள் ஆசான்கள் தொடர்ந்திடவே
அறிஞராம் நற்புதல்வர் அநேகரைப் பயந்திட்டு
அகமகிழ்ந் தவனியிலே ஆலமர மொப்பானாய் !

ஆலமரம் நீவிதைத்த அருமையாம் வித்தெல்லாம்
அவனியிலே பலதிக்கும் அழகாய்ப் பரந்திட்டு
அன்னையாம் உன்புகழை அறிவித்து நின்றிடவே !
அரும்பணிகள் ஆற்றிடவும் அவனி போற்றுதுமே !
எம்மூரில் எம்நாட்டில் எத்திக்கும் பிறநாட்டில்
பல்பணிகள் புரிந்திட்டே பார்புகழ நிற்பரால்
ஈன்றிட்ட பொழுதிலும் சான்றோர் புகழ்கேட்டு
இன்றுநீ பெரிதுவக்க நன்றுநாம் மகிழ்ந்திடுவோம் !

இன்றமிழும் இங்கிலீசும் இனியகலை பலதந்தும்
இன்னலின்றி இவ்வூரின் இளஞ்சிறார் இன்புறவே
அந்நாளில் அரும்பெயர்நீ அயர்ந்திட்டாய் அகிலமதில்
அருங்கவிகள் கலைஞர்கள் பலர்தந்து அகமகிழ்ந்தாய் !
இந்நாளில் இனிதேநாம் இங்கிதமாய்ப் போற்றிடவே
இதயமதில் நிலைத்திருக்கும் நினைவலைகள் நீபதித்தாய்
பவளவிழாக் கண்டுமகிழ் பார்புகழும் அன்னைநீ
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே !

## அந்தமிலாக் கல்விதனை அளித்திடும் சரவணபவானந்தத் தாயைச் செந்தமிழால் கவி பாடிப் பவள விழா சிறந்தோங்க வாழ்த்துவமே.

ஆக்கம் :- சீ.தி. அரசபிள்ளை,
உபதலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

**கணபதி வணக்கம்.**

துதிக்கையுடைய தூயவனைக் கணபதியை
துதிக்கையிலே துன்பமெலாம் போமென நம்பி
நிதிக் குணவை போலருள் நல்கும் நின்மலனை மனம்
பதித்து வணங்கியவன் மலர்பாதம் பணிந்திடுவோம்.

**சித்திர வேலவன் (சரவணபவ) வணக்கம்.**

சரவணனின் இன்னருளால் எம் முன்னோரமைத்த
சரவணபவானந்தத் தாயை வழுத்தி வாழ்த்த
சிரமதனில் கைகூப்பி சேவற் கொடியோனாம்
சித்திரவேற் பெருமானை செம்மையுடன் கருத்தில் வைப்பாம்
வேலினைக் கையிலேந்தும் வேழமுகன் தம்பியாம் பெருஞ்
சீலனின் பொற்பாதம் கவி சேமமுறக் காத்திடுமே.

சீர்பெருகு வடகோவையம்பதியின் கண்ணே
சிறந்த ஒரு கல்விக்கூடமின்மை கண்டு
ஆர்வலரும் அயலவரும் அறிவார்ந்த பெரியோரும்
அதிக பொருள் பணம் படைத்தோரும் மிக
ஆர்வமுடன் ஒன்றுகூடி ஆயிரத்துத் தொள்
ளாயிரத்து இருபத்தாறாம் ஆண்டதனில்
ஆராத உவகையுடனமைந்த சரவணபவா
னந்தத் தாயே உமை உளமகிழ வாழ்த்துகிறோம்.

போற்றரிய பொன் ஆசான் நாகலிங்கப்
பேர் பெற்ற பெரியார் தமதில்லமதில்
சாற்றரிய சரஸ்வதித் தாயை முன்னிருத்தி
சரவண பவானந்த வித்தியாலயத்தை

ஏற்றம்பெறு நன்நாளாம் விஜயதசமிதனில்
எழில்பெறு நல் திண்ணைப் பாடசாலையாய்
போற்றி செயுமயலவர் பெரியோர் ஆன்றோர்
புடைசூழ ஆரம்பித்தனனே கேளீர்.

பொன் படைத்த சின்னத்தம்பி பொன்னையாவும்
புகழ் பக்தி மேலோனாம் சின்னத்தம்பி மார்க்கண்டுவும்
மண்ணு புகழ் சீனியர் கந்தையாவும் மற்றோரும்
மனமுவந்து காணி நிலம் அன்பளிப்பாகவே
பொன்னரிய 'மயிலியோடை' எனும் பதியில்
பேர் மணக்க புகழ் மணக்க இந்து போர்ட்டும்
சான்றோளாம் சரவண பவானந்தத் தாயை
ஸ்தாபித்து மகிழ்ந்தனரே எம் முன்னோரும்.

செப்பரிய கலைகள் யாவும் கற்றுத் தேர்ந்த
சீராளன் சிதம்பரப்பிள்ளை யாசானும்
எப்போதும் எழில் கல்வி கவின் கலைகள் யாவும்
எடுத்தியம்பி எம்மவர்கு கல்வியூட்ட
தப்பேதுமில்லாத சரவணபவானந்தத் தாயின்
தகவுடைய தலைமையாசான் பதவியேற்று
இப்புவியில் எம் முன்னோர் கல்வி பெற
இனிய கல்வி கலைகள் யாவும் கற்பித்தானே.

பொங்குமெழிற் கல்விக்கூட வளர்ச்சிதனில்
பெரு விருப்புக் கொண்ட ஆசான் வைத்திலிங்கம்
தங்கு புகழ் விஸ்வலிங்கம் குமாரசாமி
தகைமையுள்ள சுந்தரசிங்கந்தானும்
சிங்கமெனும் நல்லையா நாகராசாவும்
திருமதி கனகராசா சதானந்தம் என்போர்
பங்கு கொண்டு மகிழ்வுடனே தலைமைப் பதவிதனை
பாங்குடனெயாற்றித் தாயை மகிழ்வித்தாரே.

சீர் பெறு பவானந்தப் பள்ளிதன்னில்
சிறப்புடனே கல்வி பெற்றுக் சித்தியெய்தி
பார் புகழும் பல அரச சேவை தன்னில்
பணியாற்றப் பேறுபெற்றோர் பலரேயம்மா
ஏர் பிடிக்கும் விவசாயப் பெருங்குடியோர் வாழும்
ஏற்றமிகு வடகோவைப் பதியின் கண்ணே
யார்க்குமினிதாம் கலை கல்வியூட்டும்
யாழினுமினிய தாய் சரவணபவானந்தாவே.

சலவணனின் பெயரதனில் மிளிரும் கல்விச்
சாலைதனை வளம்படுத்த என்றே தன்னை
அரவணைத்த சரவணபவானந்தத் தாயின்
அழகு மிகு தலைமைதனை அன்பாய் தாங்கியறியாமை
இருளகற்ற நண்ணியவன் நற்குணத்தோன் என்னும்
இனியவனாம் சண்மு ரத்தனமெனும் மேலோன்
பெருமைபெறு நல்லாசிரியப் பெருந்தகையரோடு
பேணுகின்றான் கல்விச் செல்வமதை பயிற்றுகின்றான்.

எம்மூர் சிறார்களுக்கு ஏற்றமிகு கல்விதனை
ஏட்டிலிருந்து இன்னரிய புத்தகங்கள் வரை
சம்பூரணமாய் கற்பிக்கும் சரவணபவானந்தச்
சாலைதனைப் போற்றிடுவோம் வளர்த்திடுவோம்
செம்பவளமென மின்னிச் சிறந்திலங்கச்
செய்திடுவோம் வித்தியாசாலை தன்னை
இம்மானிலத்தில் என்றென்றும் மேம்படவே
இன்பமுடன் வாழ்த்தி வணங்கிடுவோம்.

பவ்வியமாய் பவள விழா காணும் தாய்தனை
பணிவுடனே புகழ்ந்தேத்தி வாழ்த்திடுவோம்
இவ்வரிய நாளினிலே இனிதே போற்றி
எம் சிறார்க்கு இனிதே கல்வியூட்டும் தாயின்
செவ்விதழில் கல்விச் சிரிப்பென்றும் காணவேண்டி
செய்கருமம் யாவும் முன்னின்று முயன்று
பவ்வியமாய் சென்று சரவண பவானந்தத்தாயின்
பவள விழாக் கண்டுகளித்தே வாழ்த்திடுவோம்.

சரவணபவானந்தத்தாயே வாழி! வாழி!
சண்முகத் தலைமையாசான் வாழி!
சிரத்தையொடு கற்பிக்கும் ஆசிரிய குழாம் வாழி!
சீலமொடு பவளவிழா காணவென்று
பொறுப்புடனே செயலாற்றும் ப.மா.சங்கம் வாழி!
புரிந்து பல சேவை செய்யும் பாடசாலை அபி
விருத்திச் சங்கம் வாழி, மாணவர் பெற்றோர் வாழி!
வாழியவே சரவண பவானந்தத் தாயே வாழி! வாழி!

**குறிப்பு:** பவளவிழாக் காண ஆவலுடன் செயற்பட்ட ஒருவரின் உள்ளத்திலிருந்து வெளிவந்த கருத்துக்கள் இவை. அவை அச்சாகி வெளிவர முன் அன்னார் அமரராகி விட்டமை அனுதாபத்துக்குரியது.

# எங்கள் பணி .........


எங்கள் வித்தியாலய மாதாவுக்கு வயது எழுபத்தைந்து, பவள விழாவெடுக்க முனைந்தனர் அவள் மைந்தர்கள். சிறப்பு மலர் ஒன்றை அவள் பாதாரவிந்தங்களிற் சமர்ப்பிக்கவும் விழைந்தனர். அன்னையின் பொருளாதார நிலையில் இது இலகுவான பணியன்று என்றொரு தயக்கம். எனவே அந்த ஆசை நிறைவேறுமா என்று எம் மத்தியில் ஒரு ஏக்கம். இல்லை - அது நிறைவேறத்தான் வேண்டும் எனப் பிறந்தது ஒரு ஊக்கம். அதைத் தந்தவர்கள் அன்னையின் புதல்வரும், அன்பர்களும், நலன் விரும்பிகளுமேயாவார். உள்ளூரிலும் வெளியூரிலுமிருந்து உதவியும் ஒத்துழைப்பும் கிடைத்தன. யாம் அணுகிய பெரியார்களும் விடயதானங்களை மனமுவந்தளித்தனர். விளைவாக, இன்று அன்னையின் பாதத்தில் இந்த அழகிய மலரைச் சமர்ப்பித்துப் பணிந்து நிற்கின்றோம், உங்கள் கரங்களிலும் அவை தவழுகின்றன.

எமது கனவை நனவாக்க ஆக்கமும், ஊக்கமும் அளித்து நின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும், ஆசிகள், வாழ்த்துரைகள், சிறப்புக் கட்டுரைகள் வழங்கியுதவிய பெரியார்களுக்கும், இம்மலரை பதித்து உதவிய 'ஐங்கரன் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்தினருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள் என்றும் உரியன!

நன்றி

மலர்க்குழு

# மலர்க்குழு



திருவாளர் க.இ.குமாரசாமி

திருமதி ச.கனகரத்தினம்

திருமதி செ.சிவஞானரத்தினம்

திருமதி பே.இரத்தினசிங்கம்

திருவாளர் செ.செல்வரத்தினம்

திருவாளர் ஐ.சிவலோகநாதன்

# சரவணபவானந்த வித்தியாசாலையின் வரலாறு

கோப்பாய் பழம் பெரும் கிராமம் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாகலிங்க உபாத்தியாருடைய தகப்பன் முருகேசு உபாத்தியார் அவர்களால் நடாத்தப்பட்ட திண்ணைப் பாடசாலையில் எழுத்து, எண்நிகண்டு, சோதிடம் ஆகியன கற்பிக்கப்பட்டன. சி.எம்.எஸ் மிசனைச் சேர்ந்த சின்னாச்சி உபாத்தியாரால் நடாத்தப்பட்ட வகுப்பில் எழுத்து, வாசிப்பு, எண் என்பன கற்பிக்கப்பட்டன. குறித்த ஆசிரியர்களின் மறைவுக்குப் பின் இவை செயலிழந்தன. இதே காலப்பகுதியில் கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் புராணம், சைவ உபந்நியாசங்கள், கதாப்பிரசங்கங்கள் என்பன நடாத்தப் பெற்றன. வே.சிதம்பரப்பிள்ளை உபாத்தியாருடைய வீட்டிற்கு அருகிலுள்ள வேப்பமரத தடியில் கோலாட்டம், சீனடிசிலம்படி, நாடகம் என்பன கற்பிக்கும் நிலாப் பாடசாலை ஒன்றும் இருந்தது.

1855ம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் வந்த சி.எம்.எஸ் மிசனறிமாரால் கோப்பாய் தெற்கில் சென்மேரிஸ் தேவாலயமும் அருகில் எமது கிராமப் பிள்ளைகளுக்காக சி.எம்.எஸ் மிசனறி பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. அக்காலம் ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்தமையால் எமது பிள்ளைகள் சம்பளம் கொடுத்துப் படித்தனர். பின்னர் அதனருகில் ஐக்கிய போதனா ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் அதற்கு அண்மையில் ஆரம்ப பாடசாலையும் உதயமாகின. பின்னர் அவ்விடத்திலேயே ஓர் பெண்கள் விடுதிப் பாடசாலையும் ஆரம்பமாகி நடைபெற்றது. எமது ஊரில் அநேகர் சைவப் பற்றுள்ள மக்களாகையால் மிகச் சிலரே அவ்விடம் சென்று கல்வி பயின்றனர். எனினும் பெண்களின் கல்வி வீதம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. இக் காலத்தில் எமது கிராமத்தில் கல்வி வசதி குறைந்து காணப்பட்டதால் 5% மக்கள் வரையே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். குறைந்த வீதத்தினர் மாத்திரமே கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களாய் இருந்தனர்.

தனது குருநாதர் இருபாலை சேனாதிராஜா முதலியார் ஞாபகார்த்தமாக ஆறுமுகநாவலரால் கோப்பாய் தெற்கில் 19ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட நாவலர் பாடசாலை ஆசிரியராகவிருந்த சி.வல்லிபுர உபாத்தியாருடன் சில மாணவர்கள் சென்று அவ்விடம் கல்வி பயின்றனர்.

இக்காலப் பகுதியில் கோப்பாய் பெண்கள் பாடசாலை அதிபர் விட்னியம்மா, கட்சின்ஸ் அம்மா என்போர் ஞாயிற்றுக் கிழமை தோறும் எமது கிராமத்திற்கு வந்து அப்பிளானை ஒழுங்கை முகப்பில் நின்ற வேப்பமரத்தின் கீழ் கிறிஸ்தவப் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தினர். இதனை

அயலிலுள்ள மக்கள் ஆவலோடு சென்று கேட்டனர். இது அயலில் இருந்த கந்தபுராண படிப்புக்காரர் சின்னத்தம்பி மார்க்கண்டு, கதிரவேலு இளையதம்பி, இராமு இளைய தம்பி, வி.கந்தையா ஆகிய முன்னோருக்கு விரும்பமில்லாமல் இருந்தது. இந் நிகழ்வினை பொறுக்க முடியாத இம் மூவரும் மற்றும் அன்பர்களும், உரும்பிராய் இந்துக் கல்லூரி யில் மாலை நேர வகுப்புக்கள் நடாத்தி விட்டு வந்த மு.நாகலிங்கம் உபாத்தியாரிடம் தங்களது குறைகளைக் கூறினார்.அவரது பெரும் முயற்சியால் 1926 சித்திரை பூரணை அன்று சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் முன் சைவப் பெருமக்களின் பகிரங்கக் கூட்டம் ஒன்று நடந்தது. இதற்கு சைவ வித்தியா விருத்திச் சங்க காரியதரிசி சு.இராஜரட்ணம், வட்டுக்கோட்டை எம்.எஸ் இராசரத்தினம் ஆகிய நியாயவாதிகள் இருவரும் சமூகம் அளித்திருந்தனர். அக் கூட்டத்தில் எமது கிராமத்தில் ஓர் பாடசாலை இல்லாத குறை பற்றியும் கூறப்பட்டது. அவர்களது பெரும் முயற்சியால் நாகலிங்கம் உபாத்தியாருடைய இல்லத்தில் போடப்பட்ட 1000 சதுர அடி கொண்ட தற்காலிகக் கொண்டகையில் 1926ம் ஆண்டு புரட்டாதி விஜயதசமியன்று ஏடு தொடக்கத்துடன் சரவணபவானந்த வித்தியாலயம் உதயமானது.

இந் நேரத்தில் இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த வேதாரணியக் குருக்கள் தலமையாசிரியராகவும் க.இளையதம்பி, செல்வி வைரமுத்து செல்லம்மா என்போர் ஆசிரியர்களாகவும் இருந்தனர். 1926-11-11 இல் இருபாலை இரத்தின சபாபதிக் குருக்கள் தலைமை ஆசிரியராகவும் கொண்டு ஆறு உதவி ஆசிரியர்களுடன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக இப் பாடசாலை வளர்ந்து வந்தது. இக் காலத்தில் எமது ஊர்ச் சைவ மக்கள் வீறு நடை போடத் தொடங்கினர்.

இக்காலப் பகுதியில் மயிலியோடை முருகர் கந்தர், சின்னத்தம்பி மார்க்கண்டுவும், அவர்களது சகோதரர் பொன்னையாவும் நன்கொடையாக அளித்த காணியில் வித்தியாலயக் கட்டடம் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் திரு.சு.இராசரத்தினம் அவர்களால் 1928ம் ஆண்டு விஜயதசமி அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆரம்பத்தில் தெற்கு மண்டபம், வடக்கு மண்டபம் ஆகியவை அமைக்கப்பட்ட போது ஊர்ப் பொது மக்கள் மாட்டு வண்டி மூலம் மண், கல் என்பவற்றை ஏற்றி வந்து உதவியும் வேண்டிய மரங்களைக் கொடுத்து உதவியும் ஒத்துழைப்பு வழங்கினர். கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று அனைத்து வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டன. சைவ வித்தியா விருத்திச் சங்கம் தேவையான ஆசிரியர்களையும் தளபாடங்களையும் தந்து உதவியது. இக்காலப் பகுதியில் அதிபர் இரத்தினசபாபதிக் குருக்கள் பலரது வேண்டுகோளின் பெயரில் அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்துக்கு மாற்றலாகிச் செல்ல 1928.09.01ல் வே.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் ஆனார்.

அக்காலக் கல்விச் சட்டங்களுக்கு அமையப் பயிற்றப்பட்ட உதவி ஆசிரியர் நியமனம் கருதிக் கோப்பாய் சி.விசுவலிங்கம் நியமனம் ஆனார். முன் என்றுமில்லாதவாறு மாணவர் தொகை அதிகரிக்கப் பெண் பிள்ளைகளின் வரவு வீதமும் அதிகரித்தது. பயிற்றப்பட்ட ஆசிரியர் தேவை நோக்கிக் கிறீஸ்தவ பாடசாலையிலிருந்து செல்வி சின்னாச்சிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை மதம் மாற்றப்பட்டு இப் பாடசாலையின் முதலாவது பயிற்சி பெற்ற உதவியாசிரியரானார். பாடசாலை நாளும் பொழுதும் வளர்ந்தது. எஸ்.எஸ்.சி (9ம் வகுப்பு) வரை இருந்தது. 1932ல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகரிக்கப் பெற்றது.

## எமது பாடசாலை அதிபர் வரிசையில் ....

### திரு. வே. சிதம்பரப்பிள்ளை

இவர் 1928.09.01 இப் பாடசாலை தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். கோப்பாயிலிருந்து வேம்படி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர். கல்வியங்காடு மிசன் பாடசாலையில் தலைமையாசிரியராக விருந்த இவர் ஊர்மக்களின் வேண்டுகோள்களின் படியே இப்ப ாடசாலையில் தலைமையாசிரியரானார். மிசனறி காலத்தின் பயிற்சிக்கும் நியமனத்திற்கும் சமயம் கட்டாயமாகக் கொள்ளப்பட்டது. அயற் கிராமங்களிலிருந்து பலர் இங்கு கல்வி கற்று ஆசிரியர்களானார்கள்.

### ஆசிரியமணி ம. வைத்திலிங்கம்

இவர் உடுப்பிட்டியைச் சேந்தவர். இவர் தெல்லிப்பளை ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுத் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பேராசிரியராக விளங்கினார். 1938ல் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் காலம் பாடசாலை வரலாற்றில் பொற்காலம் ஆகும். மாணவர் தொகை கூடியதால் இதன் வடக்குப் புறமாக இருந்த காணி கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைக் கட்டடம் விஸ்தரிக்கப்பட்டது. டாக்டர் சி.பொன்னையா அவர்கள் கிழக்குப் புறக் கட்டடம் கட்ட உதவினார். இவர் ஆசிரியர் பணியில் முழுநேரத்தையும் செலவிட்ட பெருமகனார். ஆசிரியப் பணியுடன் தொழிற்சங்க சேவையிலும் ஈடுபட்டு வலிகிழக்கு தமிழாசிரியர் சங்கத் தலைவராகவும், வட இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவராகவும் விளங்கினார். இதனால் அகில இலங்கை முழுவதும் இவரை அறியக் கூடியதாக இருந்தது. பன்னவேலை கட்டாய பாடமாகக் கற்பிக்கப் பட்டது. நாகலிங்கம் அம்பலவாணர் நன்கொடையாயக் கொடுத்த காணியைப் பெற்று கட்டடம் கட்டிப் பன்னவேலை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது விஞ்ஞான அறையாகப் பயன்படுத்தப்படும் கட்டடத்தின் ஒரு பகுதி அக்காலத்தில் ஆசிரியர்களாயிருந்த திரு.மா.கணபதிப்பிள்ளை, திரு. பொ.சதானந்தம் ஆகியோரின் அயராத முயற்சியினால் அடித்தளமிடப்பட்டது. இவரின் காலத்திலேயே தற்போதுள்ள கிணறும் அமைக்கப்பட்டது.

### திரு. சி. விசுவலிங்கம்

இவர் சிரேஷ்ட உதவி ஆசிரியராக இருந்து 1962.07.16 தொடக்கம் தலைமை ஆசிரியராகப் பதவி பெற்று 1964.07.19 வரை கடமையாற்றினார். இவரே இப் பாடசாலையின் பயிற்சி பெற்ற முதலாவது உதவி ஆசிரியராவார். இவரது மனைவி சின்னாச்சிப் பிள்ளையவர்களும் கூடவே கடமையாற்றி வந்தார்.

### திரு. கு. நல்லதம்பி

இவர் பயிற்சி பெற்ற ஆசிரியர். காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்டவர். ஆசிரிய சங்க சேவையில் ஈடுபாடுடையவர். தமது கிராமத்தில் நியமனம் கிடைத்ததால் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

### திரு. ஆ. சின்னத்துரை

இவர் இடைக்காட்டைச் சேந்தவர். முன்பு திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பேராசிரியராக இருந்தவர். இவர் காலத்தில் எஸ்.எஸ்.சி சித்தி வீதம் கூடியது. மாலை நேர வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தியதால் சித்தி வீதம் கூடியது. மாலை வரை தமது கடமையை முழு மனதோடு செய்தார்.

### திரு. க. இ. குமாரசாமி

இவர் 1968.01.01ல் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். வடக்கு கிழக்கு கட்டடம் முற்றாகத் திருத்தம் செய்துள்ளார்.

இவர் காலத்தில் பாடசாலை அதிபர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டது. சிதம்பரப்பிள்ளை அரங்கு அமைத்து வருடந் தோறும் பெற்றோர் தின விழா நடைபெற்றது. விளையாட்டுப் போட்டி நடாத்துவதற்காக வடக்குக் காணியை ஒதுக்கினார். ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திடம் அவர்களின் மைதானத்தை நீண்ட காலக் குத்தகைக்குப் பெற்றார். ஆசிரியர் சங்கச் சேவையில் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளராகவும், வலி கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராக வும் வடக்குக் கிழக்கு ஆசிரியர் சங்கத் தனாதிகாரியாகவும் பிரதான நிர்வாகியாகவும் விளங்கினார். பல வருடம் சேவையாற்றியவர். சிங்கள தமிழ் சுயபாஷா முன்னணியில் இருந்து ஆசிரியர் சம சம்பளக் கோரிக் கையை நிறைவேற்றினார். இலங்கை கூட்டுறவுச் சங்கச் சேவையாளரில் ஒருவரா கக் காணப்பட்டார். இப்படியாகச் சேவை யாற்றிய இவர் 1970.12.31ல் ஓய்வு பெற்றார்.

**திரு. சி. சுந்தரசிங்கம்**

சைவப்புலவரான இவர் குருமணி சிதம்பரப்பிள்ளையின் மகன். இவர் காலத்தில் விஞ்ஞான அறை, பாலர் படிப்பறை என்பன கட்டப் பெற்றன. மேற்குப் பக்கத்தில் அமைந்த தெற்கு மண்டபம் அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கிய போதும் நிதி வசதி பற்றாக் குறையால் அவ் வேலையை மேற்கொள்ள இயலாதிருந்தது. அப்போது ஆசிரியர் திரு.பொ.சதானந்தம் அவர்கள் முன் வந்து பெருமளவு முற்பணம் கொடுத்து உதவியமையும் திரு.சீ.க.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களும், மற்றும் ஆசிரியர்களும் முற்பணம் கொடுத்தும் உதவியமையும் அப்போது கோப்பாய் வடக்கு உப அஞ்சல் அதிபராக இருந்த திரு.இ.இராசரத்தினம் மரங்கள் ஒழுங்கு செய்து கொடுத்து உதவியமையும் குறிப்பிடத்தக்கவையாகும். இவரின் தாராள உதவிகளால் மண்டபமும் முன்பக்க விறாந்தையும் கட்டி முடிக்கப் பட்டன. விவசாயம் கட்டாய பாடம் ஆகை யால் விவசாயம் செய்வதற்கான நிலம் இவர் காலத்தில் விலைக்கு வாங்கப்பட்டது. மாணவர் தொகை கூடுதலாக இருந்தது. விவசாய நிலத்திற்குப் பாதுகாப்பாக வடக்கு புற மதில் அமைக்கப்பட்டது.

**திரு. க. மார்க்கண்டு**

இவர் இப்பாடசாலையின் பழைய மாணவரும் சிரேஷ்ட உதவியாசிரியராகவும் இருந்ததோடு ஆங்கில பாடத்தில் பல மாணவர்களைச் சித்தியடையச் செய்தார். தலைமை ஆசிரியர் ஓய்வு பெற்ற போது சிலகாலம் பாடசாலையை தலைமை வகித்து நடாத்தினார்.

**திரு. மு. நல்லையா**

இவர் காலத்தில் மகாவித்தியாலயம் ஆக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டது. தெற்கு மண்டபம் மறுசீரமைக்கப்பட்டது. 1927ல் அத்திவாரம் நாட்டிய மண்டபத்தில் நினைவுக்கல் பதிக்கவும் சு. இராசரத்தினம் படம் திரை நீக்கம் செய்யவும் தீர்மானிக் கப்பட்டது.

இவர் காலத்தில் நூல் நிலையம் ஒன்று அமைக்கும் முயற்சி ஆரம்பிக்கப் பட்டது. இதனை அமைப்பதற்கு பொறியிய லாளர் திரு கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா என்ற பழைய மாணவர் அவர்கள் ரூ.5000/= கொடுத்து உதவியமை குறிப்பிடத்தக்கது. இந் நூல் நிலையத்தை விஸ்தரிப்பதற்கு நிதி உதவிகளை இன்றும் பாடசாலை எதிர் பாத்திருக்கிறது.

இவர் காலத்தில் மாணவர் தொகை கூடுதலாக இருந்தது. போர்க்காலச் சூழ்நிலை யில் வெளியேறி வடக்கே சென்ற போது வைரவிழா சம்பந்தமான கோவைகளைப் பெற்று வீட்டில் பத்திரமாக வைத்துத் திரும்பும் போது துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி அகால மரணமானார். இவரது

மறைவு பாடசாலைக்குப் பெரிய இழப்பாக இருந்தது. இவரது ஞாபகார்த்த விழா பாடசாலையில் கொண்டாடப்பட்டது.

**திரு. அ. நாகராசா**

இவர் நாவலர் வித்தியாலயத்தில் இருந்து மாற்றம் பெற்று சில மாதங்கள் இப்பாடசாலையில் கடமையாற்றினார்.

**திரு. பொ. சதானந்தம்**

இவர் பாடசாலையின் உள்ளூர் முகாமையாளராக இருந்த சி.பொன்னையா வின் மகன். இவரது காலத்தில் கிணறு ஆழமாக்கப்பட்டுத் தண்ணீர்த் தொட்டியும் கட்டப்பட்டது. இவர் விவசாய டிப்ளோமாப் பட்டம் பெற்றவராக இருந்தார். வடக்குப் புறமாக இருந்த விளையாட்டிடம் விவசாய நிலமாக்கப்பட்டது. இவரால் விவசாயக் கழகம் நிறுவப்பட்டது. இவர் முன்பு விவசாய ஆசிரியராகக் கடமையாற்றிய போது விவ சாய நிலத்துக்குப் பாதுகாப்பாக வடக்குப் புறச் சுற்று மதிலை அமைப்பதற்கு திரு.சீ.க.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்க ளோடு பாடுபட்டார். இச் சுற்று மதில் சுந்தரசிங்கம் அவர்கள் அதிபராக இருந்த போது கட்டி முடிக்கப்பட்டது. இவர் காலத தில் நிலத்தில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வடக்குப் பக்க இரும்புக் கேற்றும் போடப்பட்டது. மதில் அமைக்கும் வேலைக் குச் கொழும்பு வர்த்தகர் திரு.வர்ணகுலசிங கம் அவர்கள் அப்போது 2000/= உதவி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. திரு.நடராசா ஆசிரியர் அவர்களின் மகன் குகன் என்ப வரின் அன்பளிப்பு நிதி உதவியால் குழாய் நீர் விநியோகம் அமைக்கப்பட்டது.

**திரு. ச. நவரத்தினம்**

சிரேஷ்ட உதவியாசிரியராக நீண்ட காலம் இருந்தவர். இவர் 1991.06.25ல் தலைமையாசிரியரானார். அத்துடன் சாரணக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பொறுப்பா சிரியராகச் சிறந்த பணியாற்றி பாராட்டுக்க ளையும் பெற்றவர்.

**திருமதி ச. கனகராசா**

இவர் 1991.01.19 ல் முதலாம் தர அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் மண்டபம் தனித்தனி வகுப்பறைகள் ஆக்கப்பட்டன. இதனால் கற்றல் கற்பித்தல் வேலைகள் வகுப்புக்களில் இலகுவாக நடைபெற்றன. இதனால் க.பொ.த சா/த மாணவர், 5ம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களின் பெறுபேறுகள் சிறப்பாக காணப்பட்டன.

**திரு. நா. சண்முகரத்தினம்**

தற்போதைய அதிபராக உள்ள இவரின் காலத்திலேயே பிரதான மண்டபம் புணரமைக்கப்பட்டது. வெளிநாட்டு உதவி நிறுவனங்களிடமிருந்தும் அரசாங்கத்திடமி ருந்தும் காலத்திற்குக் காலம் பெற்ற நிதியுதவிகளைக் கொண்டு ஆரம்ப பிரிவு புனரமைக்கப்பட்டு முன்பிருந்த சுற்று மதில் களும் பூர்த்தியாக்கப்பட்டன. மற்றும் சகல வசதிகளையும் கொண்ட மலசல கூடங்களும் அமைக்கப்பட்டன. பாடசாலைக்கு நீண்ட காலத் தேவையாயிருந்த விளையாட்டு மைதானத்திற்கு வேண்டிய உதவிகள் யாவும் செய்யப்பட்டன. பாடசாலையின் மேற்கு வளவில் இன்றைய நவீன கல்வி முறைக்கு ஏற்றதான கணனி அறையும் அமைக்கப் பட்டது. இவர் 02.05.1993 தொடக்கம் அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

இவ்வாறு பல்வேறு அதிபர்களின் பதவிக் காலத்தில் வித்தியாலயம் பல வகையாலும் வளர்ச்சி பெற்று வந்து இன்று இந்த அதிபர் அவர்களின் காலத்தில் பவளவிழாக் காணுகின்றது. இப் பவளவிழா ஆண்டின் குறிப்பிடத்தக்க மிக முக்கிய அம்சம் வித்தியாலயத்துக்கென நிரந்தரமான தொரு விளையாட்டு மைதானம் அமைந்து ள்ளமை ஆகும். இச் செயற்பாடு தற்போதைய

அதிபரினதும், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியோரின் அயராத முயற்சியால் அடையப் பெற்ற மாபெரும் சாதனையே என்று குறிப்பிடப்பட்டால் அது மிகையாகாது. இந்த வித்தியாலய வரலாற்றில், பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய இவ் விளையாட்டு மைதானம் பற்றியும் இந்த அறிக்கையில் விபரமாகக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

**விளையாட்டு மைதானம்:**

பாடசாலை ஆரம்பித்த காலம் தொட்டுச் சென்ற நூற்றாண்டின் இறுதி வரை பாடசாலைக்கு விளையாட்டிடம் இல்லாக் குறை இருந்து வந்தது. வருடந்தோறும் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுக்கள் ஆரம்பத்தில் வடக்குப் புறமாக உள்ள ஆனைவிழுந்தான் என்ற காணியில் நடைபெற்றன. உரிய காணியின் உறுதி எடுக்கப்பட்டு மு.பாலசுந்தரம் அவர்களின் தலையீட்டினால் குறித்த நிலம் தனியார் மயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து சற்றுத் தூரமாய் உள்ள வண்ணாங்குண்டுக் காணியில் விளையாட்டுக்கள் நடைபெற்றன. இதுவும் கைவிட நேர்ந்த போது சிதம்பர புண்ணியத்துக்குச் சொந்தமாயும் கோப்பாய் சிகரெட் புகையிலைச் சங்கத்திற்குச் சொந்தமான காணியில் விளையாட்டிடம் கொண்டு வரப்பட்டது.

பாடசாலை வளவின் வடக்குப் புறமாக உள்ள நிலம் விளையாட்டுக்காக வாங்கப்பட்ட போதிலும் வித்தியாபகுதியாரின் கல்வித் திட்டத்தின் கீழ் விவசாய பாடம் கட்டாய பாடமாக்கப்பட்ட போது அந்நிலம் விவசாய நிலமாகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் புகையிலைச் சங்கத்திற்கு சொந்தமான காணியில் விளையாட்டிடம் கொண்டு வரப்பட்டது. இதற்கு 12 அடி அகலமுள்ள பாதையும் விடப்பட்டது. குறித்த நிலம் வித்தியாபகுதியாரதும் அரசாங்கத்தினதும் அனுமதியுடன் 30 வருட காலம் குத்தகைக்கு ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திடம் பாவனைக்குப் பெறப்பட்டது. எனினும் இவ் விளையாட்டிடத்தில் பாரிய தடங்கல் ஏற்பட்ட போது பாடசாலை அதிபரதும் அபிவிருத்திச் சங்கத்தினரதும் துணிகரமான முயற்சியால் சென்ற நூற்றாண்டின் இறுதிவரை விளையாட்டிடம் பாவிக்கப்பட்டு வந்தது.

2001ல் விளையாட்டுக்கள் பாடசாலைக்கு வடகிழக்கு புறமாகவுள்ள புதிதாக மைதானத்துக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் நடைபெற்றன. $5\frac{3}{4}$ பரப்பு விஸ்தீரணம் கொண்ட இக்காணி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியுதவியுடனும் பாடசாலைப் பழைய மாணவர் சங்க நிதியுதவியுடனும் சுமார் 150,000/= ரூபாவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டது. குறித்த விளையாட்டிடத்தை மேலும் விஸ்தரித்துச் சற்சதுரமாக வடிவமைப்பதற்கு திருவாளர் செ.சிவலிங்கராசாவுக்கு சொந்தமான காணியைச் ச.நவரத்தினம் (வீரகேசு) அவர்களின் ஒத்துழைப்பின் பெயரில் பாடசாலை பெற்றுக் கொண்டது. மேற்கொண்டு அதனையும் விஸ்தரிப்பதற்காகத் தெற்குப் புறமாகவுள்ள செ.தெய்வேந்திரம் அவர்களுக்குச் சொந்தமான காணி சுமார் 100,000/= ரூபாவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டது. எமது ஊர்ப்பெரியாரும் பழையமாணவரும் முன்னாள் ஆசிரியருமான திரு.க.மார்க்கண்டு அவர்கள் குறித்த 4 பரப்பினைத் தம்முடைய தந்தை யாரின் பெயரில் அன்பளிப்பாகப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சி தொடர்கிறது. இவ் விளையாட்டு மைதானக்காணி எல்லைக்கு மதில் கட்டவும் வேண்டிய திருத்தங்களைச் செய்யவும் உரிய மதிப்பீட்டுத் திட்டத்துடன் வித்தியா பகுதியினருக்கு மனு அனுப் பப்பட்டது. மேலும் இன்றைய நிலையில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் மூலம் மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

பல்வேறு தரப்பினரின் தாராள உதவிகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு வளங்களையும் பெற்று இன்று பவளவிழா ஆண்டில் மிளிரும் எமது வித்தியாலயம் கோப்பாய் வடக்கு மக்களுக்கு ஒரு ஒளிவிளக்காக அமைந்து பயன் தருகிறது. கோப்பாய் வடக்கின் பல்வேறு சமூகப்பணிகளுக்கெல்லாம் இவ் வித்தியாலயம் பகுதி நிலைக்களனாகவும், தூண்டுகோலாகவும் அமைந்து சமூகத்திற்கும் தன்னாலியன்ற பங்களிப்பை வழங்கி வருகின்றது. இவ் வித்தியாலயத்துக்கு மேலும் ஒளிமயமான எதிர்காலம் உண்டென நம்புவோம், அதற்காக எல்லாம் வல்ல பரம் பொருளை இறைஞ்சுவோம்!.

## அதிபர்கள் காலம்:-

| | | |
|---|---|---|
| 01. | திரு.வேதாரணியக் குருக்கள் | 1926.09.01 - 1926.12.31 |
| 02. | திரு.S.இரத்தினசபாபதிக்குருக்கள் | 1927.01.01 - 1928.09.01 |
| 03. | குருமணி வே. சிதம்பரப்பிள்ளை | 1928.09.02 - 1938.09.30 |
| 04. | ஆசிரியமணி ம.வைத்திலிங்கம் | 1938.10.01 - 1962.07.16 |
| 05. | திரு.சு.விசுவலிங்கம் | 1962.07.16 - 1964.07.19 |
| 06. | திரு.கு.நல்லதம்பி | 6 மாதம் |
| 07. | திரு.ஆ.சின்னத்துரை | 1964.07.20 - 1968.01.09 |
| 08. | திரு.க.இ.குமாரசாமி | 1968.01.10 - 1970.12.31 |
| 09. | திரு.சி.சுந்தரசிங்கம் | 1971.01.01 - 1979.01.07 |
| 10. | திரு.க.மார்க்கண்டு | 1979.01.08 - 1979.05.01 |
| 11. | திரு.மு.நல்லையா | 1979.05.02 - 1987.11.10 |
| 12. | திரு.A.நாகராசா | 1988.01.01 - 1988.11.02 |
| 13. | திரு.பொ.சதானந்தம் | 1988.11.03 - 1991.06.24 |
| 14. | திரு.ச.நவரத்தினம் | 1991.06.25 - 1991.11.18 |
| 15. | திருமதி ச.கனகராசா | 1991.11.19 - 1993.05.01 |
| 16. | திரு.ந.சண்முகரத்தினம் | 1993.05.02 - |

# பவள விழாச் சஞ்சிகைக்கான அதிபர் அறிக்கை

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் 1926ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டு தனது வளர்சிப்படியில் வளர்ந்து வருகிறது. திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல அறி ஞர்களின் உதவியோடு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வழிகாட்டலில் தன்ன கத்தே பல கட்டடங்களை உள்ளடக்கி ஒரு கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டு வளரத் தொடங்கியது. பல தொண்டர்கள் தமது ஊர் மாணவர்கள் கற்றுக் கல்வியில் சிறக்க வேண்டும் என்பதற்காகக் காணிகளை நன் கொடையாக ஈந்ததினால் கிழக்குக் கட்டடம், வடக்குக் கட்டடங்கள் தோன்றி ஆரம்ப பிரிவு முதல் க. பொ. த. சாதாரண தரவகுப்புக்கள் வரை உயர்ந்து கல்வியைப் பரப்பியது. திரு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பெயரில் கலையரங்கும் கல்விக் கூடத்தை மிளிரச் செய்தது.

மேற்குப்புறத்தில் உள்ள காணி களும் அன்பளிப்புச் செய்யப் பெற்றதால் ஆரம்ப பிரிவுக் கட்டடங்கள் கட்டிமுடிக்கப் பெற்று திரு.மு.நல்லையா அதிபர் காலத்தில் பூரண வளாச்சிப் பாதையில் சென்றது. க.பொ.த. தரத்தின் பெறுபேறுகள் சிறந்து காணப்பட்டதால் பல இடங்களில் இருந்தும் மாணவர்கள் இவ் வித்தியாலயத்திற்கு வருகை தந்து கல்வியைப் பெற்றனர். பாட சாலை இலச்சனை, பாடசாலைக்கொடி, பாடசாலைக்கீதம் என்பன திருத்திய மைக்கப்பட்டன . வடக்குப் பக்கத்தில் உள்ள விவசாய நிலமும் விலைக்கு வாங்கப் பெற்று நாற் புறமும் மதில் அமைக்கப் பெற்றது. சரவணபவானந்தாத் தாய் மிளிரத் தொடங் கினாள். மாணவர் தண்ணீர் பெறுவதற்குத் தண்ணீர்த் தாங்கியும் மோட்டர் வைக்கும் அறையும் கட்டப் பெற்றன. மாணவர் வரவும் கூடியது, அவள் தம் புகழும் ஓங்கியது. வருடா வருடம் நடை பெறும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் சித்தி வீதம் அதிகரித்தது. க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர் சித்தியடையும் தொகையும் கூடியது.

கோப்பாய் வாழ் பெற்றோர்கள் விவசாயத்தை முக்கியமாகக் கைக் கொண்ட தால் வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் நிலை ஆரம்ப காலத்தில் காணப்படவில்லை. பெற்றோர் தங்கள் பாடசாலைப் பற்றுடன் சிறந்த கல்வியைத் தமது பிள்ளைகளுக்கு வழங்கினர். பிற இடங்களிலிருந்தும் விவசாய நிலங்களைப் பெற்றுத் திகழ்ந்தனர் விவசா யத்தையே தம் முக்கிய வருவாய் தரும் துறையாகக் கைக் கொண்டு இருந்தனர். காலப் போக்கில் நாட்டின் சூழ்நிலையின் காரணமாக இடம் பெயர்வுகள், நாட்டை விட்டு இளைஞர்கள் வெளிநாடு செல்லல், போன்ற காரணங்களால் பாடசாலையின் வளர்ச்சி சற்றுப் பாதிக்கப்பட்டது. இடம் பெயர்வால் தமக்குள்ள காணிகளில் விவசாயத்தை மேற் கொண்டு சொந்த இடத்தை விட்டுக் கிளிநொச்சியிலும்

வவுனியாவிலும் நிரந்தர குடியேற்றத்தை மேற்கொண்டதால் மாணவர் தொகை குறைவடையத் தொடங்கியது

இடப் பெயர்வின் பின் 1998ல் பிரதான மண்டபம் திருத்தம் செய்யப்பட்டது. அரசாங்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாலரை லட்சம் ரூபா செலவில் இம் மண்டபம் பூரண திருத்தத்தை மேற் கொண்டு கூரை நில வேலைகள் செய்யப்பட்டது. பாடசாலையின் முழுக் கட்டடங்களும் திருத்தம் செய்யப் பெற்று அழகு பெற்றன.

ஆரம்ப பிரிவின் முற் பக்க மதில், தெற்குப் பக்க மதில்கள் என்பனவும் கட்டிமுடிக்கப் பெற்றன. ஆரம்பக் கல்வியே மிகவும் பிரதானம் என்பதற்கு அமையவும் புதிய கல்வியின் சீர்திருத்தத்தின் படி தரம் 1 தரம் 2 கட்டடங்கள் ஒரு லட்சம் ரூபா வரையில் செலவு செய்து திருத்தியமைக்கப் பெற்றன. மாணவர் பாவனைக்கு ஊஞ்சல் ஏணி என்பனவும் அமைக்கப் பெற்றன.

மாணவர்கள் விளையாடுவதற்கு விளையாட்டு மைதானம் இன்றிப் பல வருடங்களாக அல்லல் உற்றனர். “ஸ்ரார்” விளையாடடுக் கழக விளையாட்டு மைதானத்தையே பயன்படுத்தித் தமது உடற்கல்வியைப் பெற்றனர். காலை மணி அடித்ததும் நடந்து கால் மைல் தூரம் சென்று காலை உடற்பயிற்சியைச் செய்தனர். இதனால் நேரம் வீண்விரயம் ஆயிற்று. காலை முதற் பாட வேளை போக்குவரத்தில் செலவிடப்பட்டது இந் நிலையை உணர்ந்த எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலையின் அருகில் உள்ள ஐந்துமுக்கால் பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து திருத்தி மாணவர் பயன்பாட்டுக்கு, மாணவர் உடற் கல்விக்கு, மாணவர் விளையாட்டுத் துறைக்கு உதவியது. நீண்ட நாட்களாக இருந்து வந்த, விளையாட்டு மைதானம் இல்லாத குறை, நிவர்த்தி அடைந்தது. 2001ம் ஆண்டு இல்ல மெய்வல்லுனர் போட்டி புதிய விளையாட்டுத் திடலில் நடாத்தப் பெற்றுப் பெற்றோரின் சந்தோசத்தைப் பெற்றது.

அத்திடலில் வடக்குப் பக்கமாக உள்ள 2 பரப்புக் காணியை திரு சிவலிங்கராசா குடும்பத்தினர் இலவசமாகத் தந்து உதவினர். அவர்களின் அன்பளிப்பின் காரணமாக விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டது. திரு.சிவலிங்கராசா திரு.நவரத்தினம் அவர்களை எமது மாணவர்களும் பெற்றோர்களும் என்றும் நினைவு கூருவதற்குக் கடமைப் பட்டுள்ளோம்.

G.T.Z தாபனத்தாலும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினராலும் மாணவர்கள் அன்றாட பாவனைக்கென இரு (ஆண், பெண்) மலசல கூடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. மாணவர்கள் சுகாதாரத்தைப் பேணும் வகையில் இரண்டு மலசல கூடங்களும் மகத்தான சேவைக்குரியவை என்பதை நாம் அனைவரும் கண்டு மகிழ்கிறோம்.

பரிசளிப்பு விழாவுக் கெனவும் இல்ல மெய்வல்லுனர் போட்டி நடாத்துவதற்கெனவும் தலா 30,000 ரூபாவை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நிரந்தர வைப்பிலிட்டு வட்டிப் பணத்தில் அவற்றை மேற்கொண்டு வந்ததாயினும் விளையாட்டு மைதானக் கொள்வனவிற்கு எமக்குப் பணம் தேவைப்பட்டதன் காரணமாக அப் பணத்தைப் பெற்று விளையாட்டு மைதானம் கொள்வனவு செய்ததால் தற்போது இல்ல மெய்வல்லுனர் போட்டிகளையும் பரிசளிப்பு விழாக்களையும் நடாத்துவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் பணமில்லாத நிலையில் இருக்கின்றோம். இன்றைய பரிசளிப்பு விழாவிற்குப் பாடசாலைப் பழைய மாணவர் சங்கம் நிதி வழங்கியதால் நடாத்துகிறோம்.

கணணி மயப்படுத்தப்பட்ட இக்கால கட்டத்தில் எமது மாணவர்கள் கணணிக் கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கிலும் உலகத் தோடு ஒத்த கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும் இரண்டு கணணிகளைத் தந்து உதவுமாறு கோரியிருந்தோம். அவற்றிற்கான கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மாணவர் கணனிக் கல்வியை பெறுவதற்குக் கூடிய விரைவில் ஆக்க பூர்வமான செயற்பாடுகள் இடம் பெறும்.

மாணவர்கள் உலகத் தோடும் ஒத்தவர்களாகவும், உலகத்தோடு ஒத்த கல்வியைப் பெறுவதற்காகவும் நூலகம் மிக அவசியம் தேவை என்பதை உணர்ந்து நூலகம் ஒன்று கணணிப் பயிற்சி அறையுடன் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இம் முயற்சி எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத் தினரால் தொடங்கப் பெற்று ஒரு நூலகம் கட்டிமுடிக்கப் பெற்றிருந்தது யாவரும் அறிந்ததே. இருந்த போதிலும் கூட அதனை நிர்வகிக்கும் பொறுப்பு வாய்ந்த ஒருவர் இல்லாத குறையை நீக்கும் பொருட்டு நூலகர் ஒருவர் கல்வித் திணைக்களத்தால் நியமிக் கப்பட்டுள்ளார். அவரின் உதவியுடன் மாணவர் நூல்களைப் பெறுவதும் விநியோ கிப்பதும் இலகு வாக்கப்பட்டு, மாணவர் பயன்பாட்டிற்கு உதவக் கூடியதாக இருக் கிறது.

பாடசாலை ஒரு காவ லாளி இல்லாத குறையை நீண்ட காலமாக அனுபவித்து வந்தது. அக்குறை 1995ம் ஆண்டு முதல் ஒரு நிரந்தர காவலாளியை நியமித்ததன் மூலம் நீக்கப் பெற்றது. அடிக் கடி களவுகள் இடம் பெறுவதை தீர்க்கும் முகமாக நிரந்தரக் காவலாளி நியமிக்கப் பட்டுள்ளார். நிர்வாக வேலைகளுக்கு உதவியாக்கற் பொருட்டு பாடசாலைத் தொழிலாளி ஒருவர் நிரந்தர நியமனம் பெற்று 1998 முதல் கடமையாற்றுகிறார்.

பழைய மாணவர் சங்கம் எமது மாணவரின் உடற்கல்வி தேவை யையும் செயற்பாட்டிற்கான விரிவாக்கத் தினையும் தன் மனத்தின் கண் பதித்து 25.12.2001ம் திகதி 4 பரப்பு காணியை கொள்வனவு செய்து அன்பளிப்பாக மாணவர் களுக்கு வழங்கியது. இப் பணியானது பல பெரியோரது முயற்சியினால் ஆக்கப் பெற்ற பெரும் பணி யாகும். நீண்ட நாட்களாக வசதியான விசாலமான ஒரு விளையாட்டு மைதானம்இல்லாத ஒரு குறையைப் பழைய மாணவர் சங்கம் நிறைவேற்றியதை இட்டுப் பெற்றோர்கள் மன நிறைவு கண்டுள்ளனர். இப் பாடசாலை வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாட்டிற்கு அதன் முன்னைய செயலாளர் திரு.பொ. விக்னேஸ்வரலிங்கம் அவர்களின் கடும் உழைப்பே காரணமாகும். பழைய மாணவர் சங்கத்தின் நிதிப் பற்றாக் குறையைப் போக்க நிதி சேகரிப்பதற்காக திரு.பொ.விக்னேஸ்வர லிங்கம் அவர்கள் மாணவர் நலன் புரி நிதியம் ஆரம்பித்து வருடா வருடம் 10,000 ரூபா பெறுமதியான கற்கை உபகரணங்கள் வறிய மாணவர்களுக்கு வழங்கி உதவி உள்ளனர். அத்தொண்டினைப் பழைய மாணவர் சங்கம் தொடர்ந்தும் ஆற்றி வருவது சிறப்பான செயற்பாடாகும்.

எமது மாணவரின் மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில், பல மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

**தமிழ் மன்றம்**

பாடசாலையின் அனை த்து வகுப்பு மாணவர்களும் ஒழுக்கங்கள் செயற்பாடுகள் திறன்களை வெளிக் காட்டும் முகமாகத் தமிழ் மன்றம் அமைக்கப் பெற்றது. தமிழ் மன்றத்தின் அங்கத்தவர்களாக மாணவர் விளங்குகின்றனர். இத்தமிழ் மன்றப் பொதுக் கூட்டம் வருட ஆரம்பத்தில் நடாத்தப் பெற்று நிர்வாகக் குழு தெரிவு செய்யப்படும். இந் நிர்வாகக் குழுவின் தலைவர் ஒவ்வொரு கூட்ட முடிவிலும் தெரிவு செய்யப்படுவார்.

அத்தோடு எல்லா மாணவர்களும் தலைவராக இருந்து செயற்பட வேண்டும் என்பதால் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு தலைவர் தெரிவு இடம் பெறும். மாணவர் தலைமைத் துவம் பேணும் நோக்குடன் செயற்படுத்தப் படுகின்றது. பாடம் பாட்டுடன் சேர்ந்த செயற் பாடுகளையும் கணிப்பீட்டுடன் அமைந்த விவாத பட்டி மன்றங்களும் முன்னெடுத்துச் செயற்படுகின்றன. தமிழ்த் தினப் போட்டி சம்பந்தமான கட்டுரை கவிதை நாடகப் போட்டிகளை இம் மன்றம் நடாத்தி முடிப் பதைப் பணியாகக் கொண்டது. சஞ்சிகை வெளியீட்டுடன் மட்டுமல்லாது சுற்றுலாக் களையும் இம் மன்றம் மேற்கொண்டு நடாத்துகிறது. இம் மன்றத்தின் காப்பா ளராகத் திருமதி ஞா.திலகராசா விளங்கு கின்றார்.

**விஞ்ஞான கணித மன்றம்**

விஞ்ஞான கணித மன் றம் வருடாவருடம் அங்கத்தவர்களினைத் தெரிவு செய்யும். தரம் 5லிருந்து க.பொ.த. சாதாரண தரம் வரையிலான மாணவர்கள் அங்கத் தவர்கள் ஆவர். மாணவர்களின் விஞ்ஞான கணித ஆய்வுகளை மேம்படுத்தும் நோக்கில் மாதம் ஒரு முறை இம் மன்றம் கூடிச் செயற் படுகின்றது. திருமதி க.பாலச்சந்திரா, திருமதி ஜெ.கிருஷ்ணகுமார், திருமதி இ.பழனித்துரை ஆகிய ஆசிரியர்கள் மன்றத்தின் காப்பாளர் களாக விளங்குகின்றனர். வினாடி வினாப் போட்டிகள் நாடகங்கள் விவாதங்கள் போன்ற வற்றின் மூலம் மாணவர் செயற்திறனை அதிகரிக்கச் செய்வதோடு மட்டுமன்றிப் புதிய மாணவரின் செயற்பாடு களிற்கும் இம் மன்றம் உதவுகிறது. கோட்ட வலய மட்டப் போட்டி களுக்கு மாணவர்களை ஊக்கப்படுத்து வதும் இம் மன்றத்தின் கடமையாகும். கண்காட்சிகளை நடாத்துவதோடு சஞ்சிகை களை, மாணவர் ஆக்கங்களை வெளியி டுவதும் இம் மன்றத்தின் கடப்பாடாகும். சுற்றுலாக்களையும் மேற்கொண்டு அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றது.

**சமுகக் கல்வி மன்றம்**

இம் மன்றம் சமுகக் கல்விப் போட்டிகளையும் ஆக்கங்களையும் நடாத்து கின்றது. "இன்று ஒரு தகவல்" எனும் பொது அறிவு நிகழ்வை ஒவ்வொரு நாளும் நடத்தும் மூலம் மாணவர்களுக்கு வழங்குகின்றது. இம்மன்றம் திரு.சோ. தவநடராசா ஆசிரியரைப் போசகராகக் கொண்டது. வருடாவருடம் கண்காட்சிகளை நடாத்துவதும் இம் மன்றம் ஆகும். பொது அறிவுப் போட்டிகளை மாணவர்களிடையே நடாத்திப் பரிசில்களை வழங்கிப் புதிய விடயங்களை மாணவர் அறியவும் கற்கவும் அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றது.

**சுகாதார மன்றம்**

இம் மன்றத்தின் போசகராக கோப்பா ய்ப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் விளங்கு கின்றார். தரம் 09,10, 11ம் வகுப்பு இம் மன்றத்தின் அங்கத்தவர்கள் ஆவர். மாதாந் தம் இரு வியாழக்கிழமைகளில் இம் மன்றத்தின் செயற்பாடுகள் இடம் பெறும். திரு.கு.ஜெகதீஸ்வரன், திருமதி வ.வசந்த குமாரன், செல்வி கு.விஜிதா போன்ற ஆசிரி யர்கள் இதனை வழிகாட்டுபவர்கள் ஆவர். மாணவரின் மலசல கூட வசதிகளைப் பேணு வதும் மாணவர் சுகாதாரப் பழக்க வழக்கங் களை கடைப் பிடிக்க உதவுவதும் இம் மன்றத்தின் பணியாக விளங்குகின்றது.

**விவசாயக் கழகம்**

இக் கழகம் மாணவரின் விவசாய அறிவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இதன் காப்பா ளராக திரு கு. ஜெகதீஸ்வரன் ஆசிரியர் அவர்கள் விளங்குகிறார். தரம் 09 10 11ம் வகுப்பு மாணவர்கள் இக் கழக அங்கத்த வர்கள் ஆவர். விவசாய அறிவுப் போட்டியை மாணவர்களிடையே நடாத்துவதோடு பரிசில் களையும் வழங்கி உற்சாகப்படுத்துகின்றது.

போட்டிப் பரீட்சை செய்கை மூலம் மாணவரின் விவசாய அறிவை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

**இந்துமா மன்றம்**

இந்துமா மன்றம் சைவச் சிறார்களின் சைவப் பண்பு மிளிர அரும் செயலாற்றுகின்றது. நாளாந்தம் காலை ஆராதனையில் மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் செயற்படுகின்றது. நாயன்மார்கள் குருபூசைகளையும், மேம்பாட்டுச் செயற்திட்டங்களையும் செய்து மாணவர் சைவச் சூழலை வளர்க்கின்றது. செல்வி கு.விஜிதா ஆசிரியை இதன் போசகராக விளங்கி, நாளாந்த செயற்திட்டங்களைச் செய்து மாணவர்களுக்கு வழங்குகிறார். சமய அறிவுப் போட்டிகளை மாணவர்களிடையே நடாத்துதல் பரிசில்களை வழங்குதல் வெள்ளிக் கிழமை சிவபுராண பூசை போன்றவைகளை நடாத்தி வருகிறது. சைவ பரிபாலன சபை விவேகானந்தா சபையினரின் பரீட்சை களை நடத்தி முடிப்பது இம் மன்றத்தின் சேவையாகும். நவராத்திரி பூசை சிவராத்திரி விரதம் குருபூசைகளை ஒழுங்காகவும் வகுப்பு ரீதியாகவும் வருடா வருடம் நடாத்தி வருகிறது. வெள்ளிக் கிழமை வார வகுப்பு ரீதியாக பூசைகளைச் சைவ மணம் பரப்பி நடத்தி வருகின்றது.

**வணிக மன்றம்**

இம் மன்றம் வாங்கி விற்றல் நடவடிக்கைகளை மாணவர் செயல் மூலம் கற்கும் நோக்கில் ஆரம்பிக்கப் பட்டது. தரம் 09,10,11ம் வகுப்பு மாணவர்களை அங்கத்தவர்களாக உடையது. வணிகப் போட்டிகளையும் சஞ்சிகை ஆக்கங்களையும் செயற்பாடாக கொண்டு விளங்குகிறது. இம் மன்றத்தின் காப்பாளராக திருமதி ஜெ.சிவானந்தன் ஆசிரியை விளங்குகின்றார். மாணவர் இடைவேளை நேரத்தில் உணவுவகைகளைப் பெறவும் உபகரணங்களைப் பெறவும் தனது கடமையைச் செய்து வருகின்றது.

**ஆசிரியர் கழகம்**

பாடசாலையின் ஆசிரியர்களின் நலன் கருதி நலன் விருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. ஆசிரியர்கள் அனைவரும் இதன் அங்கத்தவர்கள் ஆவர். மாணவர் களுக்கான பரிசில்களையும் வருடா வருடம் வழங்கி ஊக்குவிக்கின்றது. பாடசாலைக்கு தேவையான அவசிய தேவைகளை பூர்த்தி செய்து ஆசிரியர் உறவைப் பேணி வருகின்றது.

**கல்விச் செயற்பாடுகள்:**

இறுதியாக எமது வித்தியாலய மாதாவின் கல்விச் செயற்பாடுகள் பற்றி சுருக்கமான விபரம் ஒன்று தருவது பொருத்தமெனக் கருதுகிறேன். எமது அன்னையின் பிள்ளைகளான மாணவச் செல்வங்களின் ஆரம்பக் கல்வி, இடை நிலைக் கல்வி ஆகிய இரு பகுதிகளும் எமது ஆசிரியர்களின் பெரும் அக்கறையினாலும், அளப்பரும் அயரா முயற்சியினாலும் சிறந்து காணப் படுகின்றன. இப் பகுதியில் ஆரம்ப இடைநிலைக் கல்விச் சேவையை இணைத்து ஒருங்கே வழங்கும் ஒரேயொரு பாடசாலை என்ற வகையில் நாமும் உயர்ந்த சேவை மனப்பான்மையுடனும், பெரும் பொறுப்புடனும் கூட்டாகப் பணியாற்றி வருவதால் வருடா வருடம் ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக மாணவர் சித்தி பெறுவதுடன், க.பொ.த சாதாரணதரப் பரீட்சையிலும் அதிகமான மாணவர் உயர் வகுப்புக்குத் தகுதி பெற்றுச் சித்தியடைந்து வருகின்றனர். கணிதம், தமிழ், சமூகக்கல்வி, சங்கீதம் ஆகிய பாடங்களில் அதி விசேட சித்திகளையும் எமது மாணவர் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்க அம்சமாகும். பொருளாதார ரீதியில் பெருமளவு வசதி கொண்ட மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடி விட, எம்மை நாடி வரும் நடுத்தர வசதி, குறைந்த வசதி கொண்ட மாணவர்களையே நாம் கற்பித்துச் சிறப்படைய வைக்கிறோம். எமது அத்திவாரத்தில் உயர்ந்து க.பொ. த தகுதி பெற்று, மூன்றாம் நிலைக் கல்விக்காக

வேறுபாடசாலைகளை நோக்கிச் சென்ற பல மாணவர் இன்று பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டும், பட்டதாரி களாக வெளியேறிப் பல்வேறு பணிகள் புரிந்து கொண்டும் இருக்கின்றமை எமது வித்தியாலய அன்னைக்குப் பெருமை தேடித் தருகின்றது.

1995ம் ஆண்டின் பாரிய இடம் பெயர்வு எம்மையும் ஏனையோரைப் போலப் பெரிதும் பாதித்தது. மீளக் குடியேற்றம் நிகழ்ந்தும், எமது மாணவர் பெரும் பாலானோர் இருக்க வீடுகளின்றியும், விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழ வழியின்றியும் மிகுந்த இடர்ப்பாடு அடைந்தனர். எனினும், அவர்களின் கல்வியார்வம் குன்றிவிடவில்லை என்பதற்கு அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சான்றாக அமைந்தன. 1995 முதல் 2000 வரையிலான முடிவுகளை நோக்கும் போது இது புலனாகும்.

**க. பொ. த (சாதாரண) பரீட்சை**

| | | |
|---|---|---|
| 1995 | - | 10 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குச் தகுதி பெற்றுச் சித்தி |
| 1996 | - | 07 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குச் தகுதி பெற்றுச் சித்தி |
| 1997 | - | 17 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குச் தகுதி பெற்றுச் சித்தி |
| 1998 | - | 07 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குச் தகுதி பெற்றுச் சித்தி |
| 1999 | - | 11 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குச் தகுதி பெற்றுச் சித்தி |
| 2000 | - | 09 மாணவர்கள் உயர்தர வகுப்புக்குச் தகுதி பெற்றுச் சித்தி |

**5ம் தரம் - புலமைப்பரிசில் பரீட்சை**

| | | |
|---|---|---|
| 1995 | - | 04 மாணவர் சித்தி |
| 1996 | - | 01 மாணவர் சித்தி |
| 1997 | - | 08 மாணவர் சித்தி |
| 1998 | - | 01 மாணவர் சித்தி |
| 1999 | - | 03 மாணவர் சித்தி |
| 2000 | - | 04 மாணவர் சித்தி |
| 2001 | - | 03 மாணவர் சித்தி |

இவ்வாறு எமது மாணவர் நல்ல முறையில் பாடசாலை அன்னைக்குப் பெருமை சேர்ப்பதையிட்டு அவர்களை நாம் பாராட்ட வேண்டும். எமது ஆசிரியர்களும் அவர்களின் பெருமுயற்சிகளுக்காகப் பாராட்டப்பட வேண்டியவர்கள். அத்துடன் வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவையும் இம் மாணவரை ஊக்குவித்துப் பாராட்டுகளும் பரிசில்களும் வழங்கி உதவி செய்வதால் அவர்களும் எமது பெருநன்றிக்குரியவர்கள்.

கல்விச் செயற்பாடுகள் தவிர இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் எமது முன்னேற்றமும் சாதனைகளும் குறிப்பிடத் தக்கவை. கோட்ட மட்ட, வலய மட்ட மெய்வல்லுனர், வலை பந்து, கரப்பந்தாட்டம், கிறிக்கெட், தமிழ்த்திறன், ஆங்கிலம் ஆகிய போட்டிகளில் எல்லாம் எம் மாணவர் பங்குபற்றித் திறமைகளைக் காண்பித்து வருகின்றனர். எம்மிடமுள்ள ஆசிரிய மாணவ வளங்கள் அனைத்தும் பூரணமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பவள விழா ஆண்டினையொட்டி, வித்தியாலயம் பெருவிழா எடுக்க முனைந்ததால், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரிடமும் ஒரு புதுஉத்வேகம் பிறந்துள்ளமை வரவேற்கத் தக்க நல்ல சகுனமாகும். இந்த உத்வேகம் எமது வித்தியாலய மாதாவை மேலும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் என உறுதியுடன் நம்புவோம். எல்லாம் வல்ல சரவணபவனாரின் நல்லருளும் துணைநிற்கும் என்பது உறுதி.

சிறப்புக் கட்டுரைகள்

# இந்து சமயமும் தமிழிலக்கியமும்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
**உயர்பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்ததாக அறிய முடிகின்றது. ஆனால் மனித இனத்தைப் பற்றி ஆராய்பவர் இக் கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்குவர். சமய உணர்வு என்பது பல்வேறு வகைகளில் இன்று உலகெங்கும் காணப்படுகின்றது. மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் "றிலிஜன்" (Religion) என்னும் சொல் இதனை விளக்கி நிற்கின்றது. நெறி அல்லது வழி என்ற பொருளில் பல சமயங்கள் கருதப்பட்டு வந்துள்ளன. தமிழ் நூல்களிலும் திருநெறி, செந்நெறி என்னும் சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. பொதுவாக சமயம் என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கும் மேற்பட்டதாகவுள்ள ஆற்றல் அல்லாது ஆற்றலுக்கு உள்ள தொடர்பு பற்றியதாக பலராலும் கருதப்படுகின்றது.

இந்து சமயம் என்பது இந்திய நாட்டிலுள்ள மக்களின் சமயமாக கொள்ளப்படும் சிந்து நதிக்கரையில் வாழ்ந்தவர்களைக் குறிக்கும். ஹிந்து என்ற பாரசீக சொல்லைத் கிரேக்கர் "இந்து" என வழங்க அவர் வழக்கைப் பின்பற்றி அனைவரும் வழங்கலாயினர். இந்திய நாட்டில் வாழ்ந்தவர்களது சமயம் என்று கொள்வதால் "இந்து சமயம்" என்ற தொடர் பலவேறு மதங்களை அடக்கிய ஒரு சொல்லாக விளங்குகின்றது. "இந்து" என்ற சொல் இமயம் முதல் குமரிவரையுள்ள பாரத கண்டத்திலிருந்த நாகரீகத்தை குறிப்பதேயன்றி சமயம் ஒன்றைக் குறிப்பதல்ல எனப் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஒரு சமயத்தின் பெயர் குறிப்பிடபடும்போது அதன் கடவுள் பற்றியோ அன்றேல் தலமையாசிரியர் பற்றியோ குறிப்பிடப்படுவது வழக்கமாகும். சைவம் வைணவம் எனும் சமயப் பெயர்கள் அவ்வவ் சமயக் கடவுட் பெயரால் வழங்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ மதமும் முகம்மதிய மதமும் அவ்வச்சமயத் தலைவர்களின் பெயரால் வந்துள்ளன. புத்தமும் ஜைனமும்கூட அவ்வாறே வந்துள்ளன. வேதநெறி, வேதாந்தம், ஸ்மார்த்தபம் என்பன முறையே வேதம், வேதாந்த சாஸ்திரம், ஸ்மிருதி எனும் சொற்களின் வழிவந்தன. ஆனால் இந்து என்ற சொல் மேற்குறித்த எந்த வகையிலும் வந்ததாகத் தெரியவில்லை. அதனால் இந்து என்பது குறிப்பிட்ட ஒரு மதத்தன் பெயராக அமையாது இந்தியாவில் தோன்றிய சகல மதங்களையும் குறித்தது. இந்து சமயங்களுள் புத்தசமயம், சமணசமயம், மீமாம்சை, நிரீச்வர சாஸ்திர சமயம், மாயாவாத சமயம், வைணவ சமயம், சைவ சமயம் என்பன சிறந்த சமயங்களாகும். இச் சமயங்களைப் பற்றிய கருத்துக்கள் காலத்துக்கு காலம்

தோன்றிய தமிழிலக்கியங்களிலே காணப் படுகின்றன. இலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்பின் அடிப்படையாகக் கொண்டு அவற்றை ஆராய்வதன் மூலம் இக் கருத்துக் கள் பற்றிய விரிவானதும் விளக்கமானதும் ஆகிய தகவல்களை நாமறிந்து கொள்ள முடியும்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தோன்றிய தமிழ் இலக்கியங் கள் என்று நம்மிடையே நிலவுகின்றன. இவ் இலக்கியங்கள் அனைத்தையும் தனித்தனி கற்று அவை கூறும் சமயக் கருத்துக்களை நாம் அறிந்து கொள்வது மிகவும் கஷ்டமான காரியம். அதனால் அவ்விலக்கியங்களின் கருத்துக்கள் சிறப்புற்றிருந்த காலங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான காலப் பாகுபாட்டின் அடிப்படையில் தமிழ் இலக்கியங்கள் கூறும் சமயக் கருத்துக்களை அறிவது இலகுவானதாகும். தமிழிலக்கிய வர லாற்றை ஆய்வாளர் பலர் தத்தமது நோக்கிற் கும் போக்கிற்குமேற்பப் பாகுபாடு செய்து ள்ளனர். சி. வை. தாமோதரம்பிள்ளை தொடக்கம் பேராசிரியர் கா. சிவத்தம்பி வரை பலரும் இலக்கியவரலாற்று காலப்பகுப்பினை எமக் களித்துள்ளனர். ஆனால் அவற்றில் சமயக் கருத்துக்களை எமக்கு காட்டக் கூடிய பாகுபாடுகளை நாம் உணர்ந்து அவ்வக் கால இலக்கியங்களை அவ்வக் கால சூழ்நிலை களின் அடிப்படையில் வைத்து நோக்கிச் சமயக் கருத்துக்கள் பற்றிய தெளிவினைப் பெற வேண்டும். இக் கட்டுரையில் சமயக் கருத்துக்களை கூறும் இலக்கியங்களைப் பகுத்துக் காட்டுவதற்காக் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் காலப் பாகுபாடே அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் சிந்த னையை அடிப்படையாகக் கொண்டு சங்க காலம் எனப் பலராலும் வழங்கப்படும் காலப் பிரிவினை இயற்கை நெறிக் காலம் எனக் கொள்ளலாம். இக்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள் அக்காலத்துச் சமய நெறிக்கேற்பக் கூறப்பட் டுள்ளன. சங்க நூல்களில் இருந்து தமிழ் மக்களுடைய பண்டைச் சமய வாழ்வு பற்றிய குறிப்புக்களை அறிய முடியும். தென்னாட்டில் நிலவிய சமயம் தனித்துவமான பண்போ டிருந்தது.

பிற்காலங்களிலேயே ஆரிய சமய கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் அவற்றில் புகுந்தன. எனினும் பலகாலமாக சிறப்பியல்பு கொண்ட ஒரு சமய நெறியை சங்க கால மக்கள் கைக்கொண்டிருந்ததைச் சங்கப் பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது. சங்க நூல்களிலே விட்டுணு, இந்திரன் முதலிய ஆரியத் தெய்வங்கள் பற்றிய செய்திகளும் இடையிடையேயுண்டு. அத்து டன் தமிழருக்கே சிறப்பான முருகன், கொற் றவை போன்ற தெய்வங்களின் வழிபாட்டு முறைகளும் கூறப்படுகின்றன. வெறியாட்டு நடுகல் வழிபாடு என்பனவும் இக்காலத்தில் நிலவின. சங்க கால இறுதியிலே யாகங்கள் செய்தல், பலியிடுதல் முதலிய வைதீக வழிபாட்டு முறைகளும் கைக்கொள்ளப் பட்டன. இக்காலச் சமயநிலை பற்றிய விரி வான தகவல்கள் பேராசிரியர் சு. வித்தியா னந்தன் எழுதிய "தமிழர் சால்பு" என்ற நூலில் கூறுப்பட்டுள்ளன. திருமால் முதலிய தெய்வங்கள் முருகனை காண்டல் காரண மாகத் திருப்பரங்குன்றம் அடைந்தனர் என்று பரிபாடல் கூறுகின்றது. இந்திரன் முதலி யோரை முருகன் வென்றான் என 5 ஆம் பரிபாடல் கூறுகின்றது.

அடுத்து அறநெறி நூல் கள் அதிகமாக எழுந்த காலமாகிய சங்கமருவிய காலத்தை அறநெறிக் காலம் எனப்பாகுபாடு செய்யலாம். இக்காலத்

தெழுந்த தமிழ் இலக்கியங்கள் இந்துசமயக் கருத்துக்களைத் தந்துள்ளன. சமயக் கொள்கைளின் தத்துவக் கருத்துக்களும் பல வாறு கூறப்பட்டுள்ளன. மணிமேகலையில் சமயங்களின் தத்துவக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. அளவை வாதம், சைவ வாதம், பிரம வாதம், வைணவ வாதம், வேத வாதம், ஆசீவக வாதம், நிகண்ட வாதம், சாங்கிய வாதம், வைசேடிக வாதம், பூத வாதம் என்ற பத்து இந்து சமயங்களையும் பூதவாதத்தையும் பற்றிய கருத்துக்கள் மணிமேகலையில் உண்டு. சிலப்பதிகாரத்தில் சமண சமயக் கொள்கைகள் கூறப்படுகி ன்றன. ஆனால் இளங்கோ சமயப் பொதுமை யுடையவராகக் காணப்படுகின்றார். மணி மேகலை பௌத்த சமயப் பிரசாரத்தையே முக்கிய நோக்காக கொண்டமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையிலும், வேட்டுவ வரியிலும், தமிழர் வழிபாட்டு முறை கள் கூறப்படுகின்றன. மணிமேகலையில் கடைசி மூன்று காதைகளும் அந் நாளிலே தமிழ் நாட்டில் நிலவிய சமய தத்துவங்கள் விரிவாகத் கூறுகின்றன. சமயக் கணக்கர்தந் திறங்கேட்ட காதை என்றே ஒரு காதை அமைந்துள்ளது. இதனால் மணிமேகலை பிற சமயங்களை இகழும் தன்மை உடையதாக அமைந்துள்ளது. பாரத நாட்டில் தோன்றிய சமயங்கள் மட்டுமன்றி புகுந்த சமயங்களின் செல்வாக்கையும் திருக்குறளில் காணமுடி கின்றது. ஏனைய அறநூல்களும் ஒழுங்காக வாழ்பவர் இறந்த பின்பு அடையும் கதி அல்லது மறுபிறப்பிற் சிறப்பானது என்று கூறுகின்றன. இக் காலத்திற் சமயப் பிரசார மாகவே இது அமைந்தது. இந்திய சமயங்கள் எல்லாவற்றிலும் ஊழின் வலிமை வற்புறுத் தப்பட்ட போதும் சமணம், பௌத்தம், ஆசீவ கம் முதலிய சமயங்களிலே அவை அதி முக் கியத்துவம் பெற்றிருந்தன. என்பதை அற நூல்கள் தெளிவுபடுத்தின..

சமயநெறிக் காலம் என்று கொள்ளத்தக்க காலமாக ஒரு காலப்பகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் உண்டு. அதுவே பல்லவர் காலமாகும். இக் காலத்தில் தமிழ் நாட்டில் சைவ வைதிக சமயங்கள் மறு மலர்ச்சி அடைந்தன. பழைய வைதீக நெறி க்கும் சைவ வைணவ நெறிகளுக்குமிடையே சில வேறுபாடுகள் இருப்பதை இக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் உணர்த்தின. வேத மும் வேதமோதும் பிராமணரும் பழைய படி முக்கியத்துவம் பெறுகின்றனர். வேத வேள்வி யாகிய அக்கினி காரியம் அருகி மறைய ஆகமத்திற் கூறப்பட்ட விக்கிரக வழிபாடு கோவில்களிலே இடம்பெறத் தொடங் கியது. வைதீக சமயத்தினர் தமிழ் நாட்டுப் பழைய தெய்வங்கள் வழிபாட்டு முறைகள் என்பவற்றைத் தமது வழிபாட்டு முறைக ளோடும் தெய்வங்களோடும் இணைந்தனர். வைதீக சமயம் பழந்தமிழர் சமயம், பௌரா ணிக சமயம் என்று மூன்றும் கலந்த நிலையில் உருவான பக்திமார்க்கம் சமண பௌத்த மதங்களை வலியிழக்கச் செய்தது. பக்தி மார்க்கம் உணர்ச்சியை அடிப்ப டையாகக் கொண்டு புராணக் கதைகளைக் சாதகமாகப் பயன்படுத்தயது. இது சைவ சமயம் வெற்றி பெற ஏதுவாயிற்று. சமணம் போற்றிய புலாலுண்ணாமை, கொல்லாமை போன்ற சமயக் கொள்கைகள் சைவசமயத் திலிடம் பெற்றன. இந்தியச் சமயங்களில் ஒன்றினது கொள்கைகளின் செல்வாக்கு மற்றொன்றில் இடம் பெறுவது வரலாற்றை நோக்கும் போது அறியக் கூடியது. நாயன்மார் களும் ஆழ்வார்களும் பாடிய பாடல்கள் இதனை உணர்த்துகின்றன. அடியார்களை வணங்கும் மரபு ஒன்று ஆரம்பமாகின்றது. சுந்தரருடைய திருத்தொண்டத் தொகை தொண்டர் துதியை ஆரம்பித்து வைக்கின் றது. சோழர் காலத்தில் சேக்கிழார் பெரிய புராணமாக அது விரிகின்றது.

சைவ தேவார திருவாசகங்கள் தமிழ் நாட்டு பதிகளையும், அவற்றில் கோவில் கொண்டிருக்கும் சிவனையும், அவன் உருவங்களையும் நாள் வழிபாடு- விழா வழிபாடுகளையும், சமயக் கோட்பாடுகளையும் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. வைணவ நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களில் தேவார திருவாசகங்களைப் போன்று ஆழ்வார்கள் திருமாலைப் பாடினர்.

திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரங்கள் சிவபெருமான் ஒருவரையே கடவுளாக கூறுகின்றன. சிவனுடைய பல வடிவங்களையும், பல பெயர்களையும், அவன் அடியார்களுக்குச் செய்த பல்வேறு அருட் செயல்களையும், பலவேறு திருவிளையாடல் களையும், அவன் எழுந்தருளியிருககும் பல பதிகளையும், அவன் இயல்புகளையும் எடுத்துரைக்கின்றன. தமிழர்களுடைய உருவ வழிபாடு பற்றிய கருத்துக்களையும் சமயக் கோட்பாடுகளையும் தெளிவாக விளக்க முயல்கின்றன.

கோவில்வழிபாடு பற்றிய கருத்துக்களையும் ஏனைய வழிபாட்டு முறைகளையும் கூறி அவற்றின் பயன்களையும் விளக்குகின்றன. கடவுட் கோட்பாடுகளும் சம்பந்தரது தேவாரங்களில் விளக்கப்பட்டுள்ளன. அதேபோன்ற அப்பர் பாடல்களும் சமயக் கருத்துக்களை அறிவதற்குதவுகின்றன. அப்பர் காலத்தில் வடநாட்டிலேயிருந்து பல சமயங்கள் தமிழ் நாட்டிற் புகுந்தன. வடமொழி வேத சமயங்களுள் ஒன்றான மீமாம்சை சமயமும் வேத கேள்விகளை மறுக்கும் சமண சமயமும் சிறந்திருந்தன. இவ்விரண்டு சமயங்களும் கடவுள் உண்டு என்ற நம்பிக்கை இல்லாதவை. அவை ஒழுக்கங்களால் வீடு பேறடையலாம் என்ற கொள்கையுடையவை. அப்பர் இச்சமயக் கொள்கைகளைத் தமது பதிகங்களில் இகழ்ந்து பாடுகின்றார். சாங்கிய சமயம், வைணவ சமயம் போன்ற சமயங்களின் கொள்கைகளையும் அப்பர் மறுத்துள்ளார்

சுந்தரர் காலத்தில் வேத சமயப் பார்ப்பனர்கள் சைவ சமயம் புகுந்தனர். சமண சமயத்தாரும் புத்த சமயத்தாரும் பெருகி வாழவில்லை; அருகியே வாழ்ந்தனர். இதனால் இவரது பாடல்களில் பிறசமயக் கருத்துக்களின் பிரதிபலிப்பு அருகியே காணப்படுகிறது. மாணிக்கவாசகரது பாடல் களிலும் இதே பண்பினையே காணமுடிகின்றது. வழிபாட்டு முறைகளைப் பற்றிக் கூறுகின்றார், அப்பருக்கும் சம்பந்தருக்கும் சைவத்தைத் தமிழ் நாட்டில் நிலைநிறுத்த வேண்டியிருந்தது. ஆனால் சுந்தரருக்கும் மாணிக் கவாசருக்கும் அந் நிலை இருக்கவில்லை. மாணிக்கவாசகர் காலத்தில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. சுந்தரரும் மாணிக்கவாசரும் இசையிலும் கவனம் செலுத்தினர். நாட்டுப்பாடல் இசையத் தமது பாடல்களிற் பயன்படுத்தனர்.

நாயன்மார்களுக்கு அடுத்த படியாகக் திருமூலர் சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தியதால் சிறப்புப் பெறுகின்றார். இவரது திருமந்திரம் சைவாக மங்களின் சாரமாக அமைந்துள்ளது. சித்தாந்த சைவ மார்க்கத்தையும், யோகத் தையும் விளங்குவதற்காகத் தமிழில் எழுந்த நூல்கள் போலமைந்துள் ளது. அறநெறியையும் சைவ நெறியையும் இணைத்துக் காட்டுவது. சிவனது படைத்தல், காத்தல், அழித்தல்,அருளல், மறைத்தல் என்னும் ஐந் தொழில்களும் விஞ்ஞான கலர், பிரள யாகலர், சகலர், எனும் மூவகை ஆன்மாக்களும் எடுத்துக் கூறப்படுகின்றன. சைவத்தின் பல்வேறு பிரிவுகளான சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்கிக சைவம், கருமசுத்த சைவம் எனப் பல குறிப்பிடப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம்

என்பனவும் சன்மார்க்கியம், சக மார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என்பனவும் விளக்கப்படுகின்றன. சமாதி நிலை விளக்கப்பட்டு சிவானந்த நடனம், சுந்தர நடனம், பொன்னம்பல நடனம், ஆசாரிய நடனம் போன்ற இறைவன் நடனங்கள் விளக்கப்பட்டுள்ளன. சாக்த மதத்தோடு தொடர்புடைய விடயங்களும் கூறப்ப ட்டுள்ளன.

யோகநெறி விரிவாக விளக்கப்படுகின்றது. திருமூலர் யோக நெறிக்கும் பதஞ்சலி குறித்த யோக நெறிக்கும் வேறுபாடு உண்டு. சமயத்தைத் தெளிவாகக் கொண்டு வாழ்வோருக்கு அரிய விளக்கம் தரும் நூலாகத் திருமந்திரம் அமைகின்றது.

வைணவ சமய எழுச்சிக்குக் காரணமான பன்னிரண்டு ஆழ்வார்களும் பாடிய பாடல்களும் பல சமயக் கருத்துக்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றன. திருமழிசை ஆழ்வார் வைணவத்திற்கும் பௌத்தத்திற்கும் பாலமாக அமைந்தவர். பிற மதங்களிலே அதிக காழ்ப்புக் கொண்ட வராகச் சமணம், பௌத்தம், சைவம் என்ப வற்றை இகழ்ந்து கூறுகின்றார். தொண்டரடிப் பொடியாழ்வாரும் இதததகையவரே. பெரியாழ்வார் பாண்டியன் சபையிலே சமய வாதம் புரிந்த ணைவத்தை வெற்றி பெறச் செய்தவர். புராண இதிகாசக் கதைகள் சைவ மறுமலர்ச்சிக்கு தழுவியது போல வைணவ சமய மறுமலர்ச்சிக்குப் பாகவத புராணக் கதைகளும், பாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் கதைகளும் உதவியதை ஆழ்வார்களது பாடல்கள் உணர்த்துகின்றன. அவதாரப் பெருமைகள் பேசப்படுகின்றன.

பிற்கால இலக்கியங்களிலும் சமயக் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. நாயக்கர் காலப்பகுதிகளிலும், ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும், இருபதாம் நூற்றாண்டிலும் எழுந்த தமிழ் இலக்கியங்கள் அவ்வக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் கருத்துக்களைப் பிரதிபலித்துள்ளன. எனினும் முந்திய காலங்களைப் போல விரிவான முறையிற் பிரதிபலித்தன என்று கூறுமுடியாது. இந்து சமயம் பற்றிய கருத்துக்களைத் தமிழ் இலக்கியங்கள் கூறும் போது நேரடியாகவும், மறை முகமாகவும் உத்தி வடிவிலும் காலத்துக்கு ஏற்ற வகையில் கூறியுள்ளன. தல புராணங்களிலும், வசைப் பாடல்களிலும், புதுக்கவிதைகளிலும் இப் பண்பாகவே கருத்துக்கள் அமைகின்றன.

இச் சமய கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களில் கூறப்படாதிருந்த தால் பல விடயங்களை நாம் அறிந்து கொள்ள முடியாது போயிருக்கும். ஒரு காலத்திலக்கியம் தன் காலச் சமய நிலையினாலும் பாதிக்கப்படும் என்பதற்குத் தமிழ் இலக்கியங்களே நல்ல சான்றுகளாக உள்ளன. சமயக் கருத்துக்கள் பற்றிய விளக்கங்களையும் வரலாற்யு ரீதியான வளர்ச்சி நிலை மாற்றங்களையும் தமிழ் இலக்கியங்கள் சிறந்த முறையில் எமுத்துக்காட்டி இருக்கின்றன. இலக்கியத்தில் சமயக் கருத்துக்களின் தாக்கத்தையும் நாம் காண முடிகின்றது. சங்க காலத்தைவிடப் பல்லவர் காலத்தில் சமயத்தின் தன்மைகளால் தமிழிலக்கியத்தின் போக்கும் வளர்ச்சியும் மாற்றம் பெற்றுள்ளன. பிரசாரமாகக் கூட இலக்கியங்கள் எழுந்துள்ளன. சமயநிலைப் பேற்றை வற்புறுத்துவதற்காகவும் சில இலக்கிஙய்கள் எழுந்துள்ளன.

இதனால் இந்து சமயக் கருத்துக்களைப் பற்றி அறிவதற்குத் தமிழ் இலக்கியங்கள் பேருதவி புரிந்து நிற்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயம் முக்கிய பங்கினை வகிப்பது போல் இந்து சமய வரலாற்றில் தமிழ் இலக்கியங்கள் பெரும் பங்கினை வகித்து வருகின்றன.

# அடிச்சொற்கள் (Roots) சில குறிப்புக்கள்

கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா

தமிழையும் தமிழுக்கினமான திராவிட மொழிகளையும் ஒட்டுநிலை மிக்க மொழிகள் என மொழியியல் அறிஞர்கள் கூறுவர். ஒட்டு நிலை என்பது சொற்கள் பல உறுப்புக்கள் பெற்று ஆக்கம் பெறுவதையும் பின் அவற்றைப் பகுத்துப் பார்க்கின்றபோது ஒட்டு நிலையில் இடம்பெற்ற உறுப்புக்கள் யாவும் சிதைவு பெறாது நிற்பதையுமே கருதிநிற்கின்றது. தமிழில் பெருவழக்குச் சொற்கள் பல உறுப்புக்களைப் பெற்று ஒட்டுநிலைமூலம் ஆக்கம் பெறுவதேயாகும். உதாரணமாக, அடித்தனன் என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் அடித் த் அன் அன் என ஐந்து உறுப்புக் களைப் பெற்று இச் சொல் ஆக்கம் பெற்றிருப்பதைக் காணலாம். இவ் வைந்து உறுப்புக்களையும் இலக்கண ஆசிரியர்கள் முறையே பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி என அழைப்பர். நன்னூலார் தமிழ்ச் சொற்கள் எவ்வெவ் உறுப்புக் களைப் பெற்று ஆக்கம் பெறுகின்றன என்பது பற்றி பின்வருமாறு விளக்குகின்றார்.

"பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்"
(நன். 133)

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் முதலிய உறுப்புக்களில் சிலவற்றையோ பலவற்றையோ தேவைக்கேற்றவாறு ஒன்றுசேர வைக்கும் போது சொற்கள் ஆக்கம் பெறுகின்றன, எனும் கருத்தினையே மேற்காட்டிய நூற்பா தருகிறது. ஆகவே தமிழில் சொற்கள் பெரும்பாலும் பல உறுப்புக்களைப் பெற்று ஒட்டுநிலை மூலமே ஆக்கம் பெறுகின்றன என்பது புலனாகின்றது.

ஒட்டுநிலையில் இடம் பெறும் உறுப்புக்களில் ஒன்றே அடிச் சொல்லாகும். சொல்லின் முதலுறுப்பாக இடம் பெற்றுப் பொருளுணர்த்தும் குறைந்த அளவுடைய வேர்ச் சொல்லே அடிச்சொல் என இதற்கு வரைவிலக்கணம் கூறிக்கொள்ளலாம். சொல்லின் முதலுறுப்பாக அடிச்சொற்கள் இடம் பெறுவது போல நன்னூலார் கூறும் பகுதி என்பதும் சொல்லின் முதலுறுப்பாகவே இடம்பெறுகிறது. எனவே இவை இரண்டும் வெவ்வேறான பொருளுடையனவா? அல்லது ஒத்த பொருள் கொண்டனவா என்பது விளக்கப்பட வேண்டியதாகும். அடிச் சொல்லும் நன்னூலார் கூறும் பகுதியும் பெரும் பாலும் ஒத்து நடக்கக்கூடியவையாகும், அரிதான சந்தர்ப்பங்களில் மட்டும் சிறிது மாறுபடக் கூடியவை. இதை டாக்டர் மு.வரதராஜன் வேர்கள் தரும் விளக்கத்தினின்றும் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

பகுதி என்பது பெரும்பாலும் அடிச சொல்
லோடு ஒத்துவரும். சிறுபான்மை வேறுபடும். பெரு
கிற்று என்பதில் பெருகு பகுதி என்பர். ஆனால்
பெர் அல்லது பெரு என்பதே அடிச் சொல்லாகும்.
உண்டான் என்பதில் உண் என்பதே பகுதியும் அடிச்
சொல்லுமாகும்.

(மொ.நூ.ப. 121)

மு.வ. வின் மேற்கண்ட விளக்கம் அடிச் சொல்லுக்கும் பகுதிக்குமிடையே பெரியளவிலான வேறுபாடுகள் எதுவும் இல்லை என்பதையும் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டும் சிறியளவான வேறுபாட்டினைப் பெறுகின்றன என்பதையும் விளக்குவுதாக உள்ளது.

தற்கால மொழியியலாளர் இதனை அடிச் சொல் என்றும், அடிச்சொல் உருபன் என்றும், பகதி உருபன் என்றும் பலவாறு பெயரிட்டு அழைக்கின்றனர். சொல்லுக்குரிய அடிப்படையான பொருளைத் தன்னகத்தே பொதிந்து வைத்திருக்கும் காரணம் பற்றியோ அன்றி சொற்கள் இவற்றை அடியாகக் கொண்டு பிறக்கும் காரணம் பற்றியோ இதற்கு அடிச்சொல்லென்ற பெயரிட்டிருக்கலாம். பிரெஞ்சுநாட்டு வெந்தாரியே (vendreys) என்னும் மொழியியலறிஞர் சொல்லுக்குரிய அடிப்படையான பொருளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் காரணம் பற்றியே அடிச்சொற்களை பொருட்கூறுகள் (Semantemes) எனப் பெயரிட்டு அழைக்கின்றார். சொல்லின் முதலுறுப்பாக அடிச்சொற்கள் இடம் பெற்று இயங்குவதனால் இவற்றை முதனிலை என அழைப்பது பொருந்தக் கூடுமாயினும் முதனிலை என்பது பிறிதோரிடத்தில் வேறோர் பொருளில் வழங்குவது கவனிக்கத் தக்கது. இதனால் முதனிலை என அழைப்பது பெருமளவில் பொருந்தாது எனலாம்.

திராவிட மொழிகளைப் போல இந்தோ ஐரோப்பிய மொழிகளிலும் அடிச் சொற்களோடு பிற உறுப்புக்கள் இணைந்து சொற்கள் ஆக்கம் பெறும் வழக்கக் கூறுகள் உண்டாயினும் அம்மொழிகளில் அடிச் சொற்களையும் பிற உறுப்புக்களையும் தனித்தனியே பிரித்தறிதல் பெருமளவில் முடியாது. இவை பிரிக்கமுடியாதவாறு ஒன்றிக் கலந்துவிடுகின்றன. திராவிட மொழிகளில் இவற்றைப் பிரித்தறிதல் எளிது. இது பற்றியே இந்தோ ஐரோப்பிய மொழிகளை உட்பிணைப்பு நிலைமிக்கவை என்றும் திராவிட மொழிகளை ஒட்டுநிலை மிக்கவை என்றும் மொழியியலாளர் கூறகின்றனர். மேலும் திராவிட மொழிகளில் வழங்கும் அடிச் சொற்கள் பேச்சு வழக்கு இலக்கிய வழக்கு ஆகிய இரண்டிலும் வழங்குபவையாகும். இவை இலக்கண நூலார் படைப்பன்று. ஆனால் இந்தோ ஐரோப்பிய மொழிகளை உட்பிணைப்பு நிலை மிக்கவை என்றும் திராவிட மொழிகளை ஒட்டுநிலை மிக்கவை என்றும் மொழியியலாளர் கூறுகின்றனர். மேலும் திராவிடமொழிகளில் வழங்கம் அடிச் சொற்கள் பேச்சு வழக்கு இலக்கிய வழக்கு ஆகிய இரண்டிலும் வழங்குபவையாகும். இவை இலக்கண நூலார் படைப்பன்று. ஆனால் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் அடிச் சொற்கள் பேச்சு மொழியில் வழங்காதவை எனவும் இவை இலக்கண நூலார் படைப்பே அல்லாமல் வழக்கிலுள்ள சொற்கள் அல்ல எனவும் யெஸ்பர்ஸன் என்னும் மொழி ஆய்வாளர் கூறுகிறார்.

**அடிச் சொற்களின் பண்புகள்**

அடிச் சொற்களுள் பெயர்க்கும் வினைக்கும் பொதுவானவையாக

காணப்படிலும் சிறுபான்மை வெவ்வேறான அடிச்சொற்களும் தமிழில் வழக்கிலுள்ளன. வினைச்சொற்களில் வழங்கும் பெரும்பாலான சொற்கள் யாவும் ஏவலொருமையாக நடக்கக் கூடியவை. இது வினைச்சொற்களில் வழங்கும் அடிச் சொற்களுக்குரிய ஒரு பண்பாகும். அடுத்து அடிச் சொற்களுக்குரிய இன்னொரு பண்பு இவற்றைப் பிரித்தால் இவை பொருளைத் தரா. பொருளுணர்த்தும் குறைந்தளவுடைய வேர்ச் சொற்களையே அடிச் சொற்கள் என கொள்ளப்படுகிறது. எனவே பொருளுணர்த்துதல் இதன் ஒரு பிரதான அம்சமாகும். ஆகவே இவற்றைப் பகுத்தறிய முடியாது. பகுக்கப் பட்டால் பொருள் சிதைந்து விடும். நன்னூலார் கூறும் பகுதி என்பது இதனுடன் பெருமளவு பொருந்தக் கூடியது என்பது முன்னோரிடத்தில் சுட்டப்பட்டது. பகுதி என்றால் என்னவென்பது நன்னூலார் விளக்கும் போது ,

தத்தம்
பகாப் பதங்களே பகுதியாகும்.

(ந.சூ. 134)

என்கின்றார். நன்னூலார் கூறம் பகுதி பகுக்கப்பட முடியாதது என்பது போல அடிச் சொற்களும் பகுக்கப்பட முடியாதவையாகும். மேலும் சொல்லாக்க உறுப்புக்களில் சொல்லுக்குரிய அடிப்படையான பொருளை இவையே தம்மகத்தே பொதித்து வைத்திருக்கின்றன. இவற்றை மூலதனமாகக் கொண்டே சொற்களுக்குரிய பொருள் பிறக்கின்றது எனலாம். எனவே சொல்லுக்குரிய அடிப்படையான பொருளைக் கொண்டிருத்தல் இவற்றுக்குரிய இன்னொரு பண்பாகும். வினைச் சொற்களில் வழங்கும் அடிச் சொற்கள் வேறு ஒட்டு உறுப்புக்களைப் பெறாது தனித்து நின்று பொருளுணர்த்தக் கூடிய ஆற்றல் வாய்ந்தவை. உதாரணம் நட, வா, போ, என்பன. இவ்வாறு தனித்து நின்று பொருளுணர்த்துதல் வினையடிகளுக்குரிய ஒரு பண்பாகும். மேலும் வினைச் சொற்களில் வழங்கும் அடிச் சொற்கள் காலங்காட்டும் உறுப்புக்களைப் பெறாது காலத்தை உணர்த்தக் கூடிய ஆற்றல் வாய்ந்தவையகும். உதாரணம்: ஓடு, பாடு என்பவற்றை எடுத்துக்கொண்டால் இவை எதிர்காலத்தை உணர்த்துவதையும் காலங்காட்டும் உறுப்புக்களைப் பெறாதிருத்தலையும் காணலாம்மேற்கண்டவாறு பல பண்புகளைத் தம்மகத்தே கொண்டு அடிச் சொற்கள் இயங்கி வருகின்றன.

**அடிச் சொற்களும் சொல்லாக்கமும்**

சொல்லாக்கத்தில் அடிச் சொற்கள் மிக இன்றியமையாத முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சொல்லாக்க உறுப்புக்களில் ஏனையவை இடம் பெறாது சொல்லாக்கம் நடைபெற முடியும். ஆனால் அடிச் சொற்கள் இல்லாது எவ்வித சொற்களும் ஆக்கம் பெற முடியாது. சொல்லென்றால் என்ன வென்று விளக்கும் போது நன்னூலார் நூற்றி இருபத்தெட்டாவது சூத்திரத்தில், ''எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் சொல்லாம்'' என்கிறார். நூற்றைம்பத்தேழாவது சூத்திரத்தில் தொல்காப்பியர் ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்பார். இவ்விரு இலக்கணகாரரதும் விளக்கங்களில் இருந்து ஓரெழுத்தினாலோ பல எழுத்துக்களினாலோ ஆகி ஒரு பொருளை உணர்த்தும் போது அது சொல்லாகும் என்ற முடிவினை நாம் பெறலாம். தமிழிற் பெயரடிகளும் வினையடிகளும் தனித்து நின்று சொல்லாக இயங்கக் கூடியன. உதாரணம்: தலை,நட என்பன. இவை முன் கூறப்பட்டது போலச் சொல்லுக்குரிய இலக்கணங்களைக் கொண்டவை. இவை ஏனைய சொல்லாக்க உறுப்புக்களையும் பெறவில்லை என்பது அவதானிக்கத்தக்கது. இதே போல் ஏனைய சொல்லாக்க உறுப்புக்கள் எவையும் தனித்து நின்று சொல்லாக இயங்கக்கூடிய

ஆற்றல் அற்றவை. தனித்து நின்று சொல்லாக இயங்கக்கூடிய ஆற்றல் அடிச் சொற்களுக்கு மட்டுமே உண்டு. பொன்னனன் என்ற பெயர்ச் சொல்லை எடுத்துக் கொண்டால் இதில் அடிச் சொல்லும் விகுதியும் மட்டுமே இடம் பெறுகிறது. ஏனைய சொல்லாக்க உறுப்புக்கள் எவையும் இடம் பெறவில்லை. மேற்கண்ட விளக்கங்களிலிருந்து சொல்லாக்கத்தில் அடிச் சொல் பெறும் இடம் எத்தகையது என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

தமிழில் பல வகையான சொற்கள் அடிச் சொற்களாக இயங்குகின்றன. நன்னூலார் தெரிநிலை வினைச் சொற்களில் வழங்கும் பகுதிகளை ஒரு சூத்திரத்தின் வாயிலாக வகுத்துக் கூறுகிறார்.

நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி நுண்பொருந் திருத்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே எ∴கென்
றெய்திய விருபான் மூன்றா மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

(ந.சூ.137)

நன்னூலார் கூறும் இவ் விருபத்துமூன்று வாய்ப் பாடுகளும் தெரிநிலை வினைச் சொற்களில் வழங்கும் பகுதிகளாகக் கூறப்பட்டிருக்கின்ற போதும் இவ் வாய்ப்பாடுகள் யாவும் வினையடிச் சொற்களாக வழங்குவதற்கும் பெருமளவில் தகுதியுடையனவாகும். இவற்றுள் சில தற்காலத்தில் வழக்கிழந்தவையாக இருப்பினும் பல இன்றும் பெருவழக்கில் உள்ளவையாகும். தற்காலத்தில் வழங்கும் வினைச் சொற்கள் யாவும் இவற்றையே அடிச்சொற்களாகக் கொண்டு இயங்குகின்றன. எனவே நன்னூலார் கூறிய தெரிநிலை வினைப்பகுதிகள் வினையடிச் சொற்களாய் இயங்கிச் சொல்லாக்கத்துக்கு உதவுகின்றன என்பது பெறப்படும்.

சிலபோது உரிச்சொற்களும் அடிச்சொற்களாகி சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன. உதாரணமாக கூர்ந்தான் என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இதில் கூர் என்பது உரிச்சொல்லாகும். இங்கே அடிச்சொல்லாக நிற்பதும் கூர் என்பதேயாகும். எனவே உரிச்சொற்களும் அடிச்சொற்களாக நடக்கக் கூடியவை என்பது பெறப்படும். மேலும் உரிச் சொற்கள் அடிச்சொற்களாக நடக்கக் கூடியவை என்பதனைத் தொல்காப்பிய சொல்லதி காரத்துக்கு உரைவகுத்தவர்களுள் ஒருவரான தெய்வச்சிலையார் தனது உரையில் சுட்டிக்காட்டுகின்றார். அவர் கூறுவதாவது:

எழுத்ததிகாரத்துள் இதனைச் குறைச்சொற் கிளவி
என்று ஓதினமையால் வடநூலாசிரியர் தாது என்று
குறிப்பிட்ட சொற்களே இவை என்று கொள்ளப்படும்.
அவையும் குறைச்சொல் ஆதலான்."

(தொ.சொ.தெ.உ.ப.. 263)

தெய்வச்சிலையாரின் இக் கூற்றும் உரிச்சொற்கள் அடிச்சொற்களாக இயங்கக்கூடியவை என்பதனை வலியுறுத்துவதாக உள்ளது. மேலும் உரிச்சொற்கள் அடிச்சொற்களாக இயங்கக்கூடியவை என்பதற்கான காரணங்களை மொழியியல் என்ற நூலில் பேராசிரியர் சீனிவாசன் குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்கண்ட கூற்றுக்களில் இருந்து

உரிச்சொற்கள் அடிச்சொற்களாக இயங்கக்கூடியவை என்பது புலனாகின்றது.

சிலபோது இடைச்சொற்களும் அடிச்சொற்களாகிச் சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன. உதாரணமாக அதனை என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இதை அதுஐ எனப் பிரிக்கலாம். இதில் அது என்பதே அடிச்சொல்லாகும். அது என்பது ஏழாம் வேற்றுமைக்குரிய ஒரு உருபு ஆகும். இதுபோலவே கண்ணன் என்ற சொல்லை எடுத்துக்கொண்டாலும் கண் என்பது இதன் அடிச்சொல்லாகும். கண் என்பது ஏழாம் வேற்றுமைக்குரிய ஒரு உருபுமாகும். வேற்றுமை உருபுகள் யாவும் இடைச்சொற்களாக நடக்கக்கூடியவை என்பது இலக்கணகாரர் கருத்தாகும். நன்னூலார் இடைச்சொற்கள் பற்றிக் கூறும்போது இதை தெளிவாக விளக்குகின்றார்.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

(ந.சூ. 420)

எனவே சிலபோது இடைச்சொற்களும் உரிச்சொற்கள் போல அடிச்சொற்களாகி சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன எனக் கருதுவது தவறாகாது.

வினைச் சொற்களுக்கு புறம்பாக அடிச்சொற்கள் வழக்கிலிருப்பது போல பெயர்ச் சொற்களும் புறம்பாக சிறியளவான அடிச்சொற்கள் வழக்கிலுள்ளன. உதாரணம்: செவி, கல், மண் முதலியன. இவற்றைப் பெயரடிகள் என அழைக்கலாம். இப்பெயரடிகள் தனித்து நின்று சொல்லாக் இயங்குவதோடு சொல்லாக்கத்திற்கும் உதவிவருபவையாகும். எனவே பெயரடிகளும் அடிச் சொற்களாகிய சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன என்பன பெறப்படும்.

சில சந்தர்ப்பங்களிலே இரு அடிச்சொற்கள் ஐ, முதலான இடைச்சொற்களை ஏற்று சொல்லாக்கத்திற்கு உதவுகின்றன. உதாரணம்: கல்லைப் பார்த்தான். கல், பார் என்பவை இங்கே அடிச்சொற்களாகும். இவையிரண்டும் ஐ உருபை ஏற்று கல்லைப் பார்த்தான் என ஒரு சொல் போல அமைந்துள்ளது.

இரு அடிச் சொற்களுக்கு மத்தியில் வரவேண்டிய உருபு மறைந்து வரும்போது தொகைநிலைத் தொடர் மொழிகள் ஆக்கம் பெறுகின்றன. இந்தவகையில் தொகைநிலைத் தொடர் மொழிகள் ஆக்கத்திற்கும் அடிச்சொற்கள் உதவுகின்றன எனலாம். இவ்வாறு தொடர்ந்து ஆராயும் போது எல்லாவகையான ஆக்கங்களிலும் அடிச் சொற்கள் முக்கிய உறுப்பாக இடம்பெற்றுச் சொல்லாக்கத்திலே முக்கிய இடத்தை வகித்துவருவதை அவதானிக்கலாம்.

# இந்து சமயக் கல்வியின் தாற்பரியம்

திருமதி. சுகந்தினி சிறீமுரளிதரன்
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

எல்லாப் பிறப்பினுள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்புமிக்கது. உயிர்களெனப் படுபவை ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள் ளன. ஆனால் ஆறறிவும் நிறையப் பெற்றவர் கள் மானிடர்களே. இந்த ஆறாம் அறிவானது சிந்தித்துத் துணிந்து செயலாற்றும் பகுத்தறி வாகும். இதன் காரணமாகவே வள்ளுவரும்

"சென்ற விடத்தால் செலவிடாது தீ தொரீஇ
நன்றின் பாலுய்ப்பது அறிவு"

எனக் குறிப்பிடுகின்றார். நன்று, தீது, அநீதி எனப் பகுத்தறியும் ஆற்றல் மனிதன் ஒருவனுக்கே உண்டு. இத்தகைய சிறப்பாற்றலை மேலும் வளர்த் துக் கொள்ள மனிதன் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும். கல்வி மக்களது அறிவு வளர்ச்சிக்கு உதவும் கல்வியாகும். உலக வாழ்க்கைக்கு கல்விப் பொருள், செல்வப் பொருள், ஆகிய இரண்டும் வேண்டப் படுவதாயினும் செல்வப் பொருள் கூத்தாட்டும் அவைக் குழாம் போன்று வந்த இடம் தெரியாமற் சென்றுவிடும். ஆனால் கல்விப் பொருளோ ஏழு பிறப்பிலும் தொடரும் தகை மையது. இதனை

"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடையது"

எனக் குறிப்பிடுகின்றார் பொய்யா மொழிப்புலவர்.

ஒழுக்க நெறியைப் புகட்டி அந்நெறிப் படி நிற்கச் செய்யும் கல்வியே சமயக்கல்வி. சமயக் கல்வியானது தனிப்பட்ட நபரின் வாழ்க்கையையும் அதே நேரத்தில் நாட்டின் சமூகங்களின் ஒழுக்க கலாசாரத்தையும் உரு வாக்கும் ஒரு பலம் வாய்ந்த கருவியாக விளங்குகின்றது. இந்து சமயம் சார்ந்த வாழ்வு இவ்வுலகில் எதிர்ப்படும் பிரச்சினை களை மனத்துணிவுடனும் ஆண்மையுடனும் உறுதியுடனும் வீரத்துடனும் அணுகும் மனப் பக்குவத்தை அளிப்பதாக உள்ளது. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று அப்பரை துணிவுடன் சொல்லவைத்தது சமய வாழ்க்கையின் விளைவே எனலாம். சமய வாழ்வு பலத்தையும் விடுதலையையும் அளிக்கின்றது. வாழும் நாள் அளவிட்டுக் கூறமுடியாதாயினும் வாழும்வரை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும்.

ஆறுமுகநாவலரும் " இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இன்ன காலத்தில் இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்" என்று குறிப்பி டுவது குறிப்பிடத்தக்கது. மேலும் எல்லா நலனுக்கும் இருப்பிடம் இறைவனே அவனை அறிவுத் தெளிவினால் தூயமனத்தால் நினைக்க, வணங்க எல்லா நலனும் வந்தெய் தும். நல்லெண்ணங்களினால் இதயம் நிறைந் திருப்பின் வாக்கிலிருந்து நல்லினிய

சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு கைராசியான
புடவைக்கடல்

# ஸ்ரீ மாட்டீ





122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

கண்கவர் டிசைன்களில் சாறி வகைகள், காஞ்சிபுரம் பட்டு
சாறிவகைகள், பட்டு வேட்டிகள், ஆண், பெண் றெடிமேட்
ஆடைகளுக்கு

# த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்






42,44 பெரிகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2935

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட ஸ்பெசல் ஐஸ்கிறீம்,
சொக்லெட் ஐஸ்கிறீம், ஜெலி ஐஸ்கிறீம், லட்டு, மஸ்கட்,
ஸ்பெசல் பீடா வகைகளுக்கு

# லிங்கன் கிறீம் ஹவுஸ்






**119, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ரீவி, அன்ரனா,றேடியோ,பிளாஸ்ரிக் கதிரை,
**C.I.C விவசாய கிருமி நாசினி**
வகைகளுக்கு விரையுங்கள்

# கஜமுகா ரேட் சென்ரர்



**281, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.**

மொழிகளே பிறக்கும். "உள்ளத்தினில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்ற கூற்று இவ்வுண்மையை தெளிவாகப் புலப்படுத்தும். ஆகவே "எண்ணங்களைத் தூய்மை பெறச் செய்தல் வேண்டும் இதற்கு அவசியமானது சமயசன்மார்க்கமே. இதனைக் கல்வியின் மூலமே குறிப்பாக சமயக் கல்வியினூடாகவே உண்டாக்கிக் கொள்ள வேண்டும்" என்று விபுலானந்த அடிகளும் உரைத்துள்ளமை சமயக் கல்வியின் தாற்பரியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

நல்லொழுக்கத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுப்பதே கல்வியின் நோக்கம் என்பது நாவலரின் திட்டவட்டமான முடிவாகும்.

"கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாம்" என நாவலர் கூறுவதை நோக்கும் போது ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு கல்வி துணை நிற்கின்றது என்பதை விளங்கிக் கொள்ள முடியும். கல்வி கற்ற காரணத்தினால் நன்மை, தீமை என்பவற்றினை ஆராய்ந்து நன்மையைக் கடைப் பிடிப்பதால் அது ஒழுக்கத்திற்கு வழி வகுக்கின்றது. கல்வியை இளமை தொட்டு மரண பரியந்தம் வரை விடாமற் கற்க வேண்டும். மனிதன் கல்வியிற் பிறந்து, கல்வியினால் வாழ்ந்து, கல்வியினை ஒரு வாழ்க்கைப் பழக்கமாக கொள்ளவேண்டும் என்று நாவலர் குறிப்பிடுகின்றார். கல்வியினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் காட்டி கல்வியின் அவசியத்தை பல அறிஞர்கள் வலியுறுத்துவதைக் காண முடிகின்றது. சாந்துணையும் கல்வி அல்லது வாழ்நாள் முழுவதும் கல்வி கற்க வேண்டும் என்பதை வள்ளுவர்

"யாதானும் நாடாமல் ஊராமால்
என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு"

என வாழ் நாள் முழுவதும் கல்வி என்ற கோட்பாட்டினை முன் வைக்கின்றார்.

"சமயமே குழந்தையை நல்லவனாக உருவாக்குவதில் அதிக பங்கைச் செலுத்துகின்றது. குழந்தையின் சமய நம்பிக்கைக்குத் தீங்கு வரக்கூடிய வகையில் கல்வி அமையுமானால் கல்வியின் பயன் அற்று விடும்" என்று ஆணித்தரமாக நாவலர் குறிப்பிடுகின்றார். இக் கருத்துக்களில் இருந்து பிறவி எனும் பெருங்கடலில் மூழ்கி விடாது துணை நின்று கரைசேர வல்லதாகிய சமயக் கல்வியை மக்கள் அனைவரும் கற்க வேண்டும் என்பதை உணரமுடிகின்றது.

ஒரு பறவையானது வானிற் பறந்து செல்லுவதற்குச் சிறகுகள் எங்ஙனம் தேவைப்படுகின்றதோ அதே போன்று மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு மெய்ஞானமும் விஞ்ஞானமும் வேண்டப்படுகின்றது எனலாம். மனித வாழ்க்கையை புதுப்பிக்கச் செய்யும் பணியில் சமயம் ஏற்கும் பகுதி விஞ்ஞானம் ஏற்கும் பகுதியை விட முக்கியத்துவத்தில் எவ்வாற்றானும் குறைந்ததன்று. பொதுவாக விஞ்ஞானக் கல்வியினால் மனித முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதையும் சமயக் கல்வியினால் அமைதியும் அன்பும் செழிக்கும் என்பதையும் பல அறிஞர்கள் காலத்துக்கு காலம் சுட்டி வருகின்றனர். இன்று விஞ்ஞானக் கல்வியினால் உயர்நிலை எய்தியுள்ள பல நாடுகளிலுள்ள மக்கள் இந்தியாவின் ஆன்மீகக் கல்வியைப் பெற்று அமைதி பெற விரும்புவதை அவதானிக்க முடிகின்றது. தனிப்பட்ட மனிதன் ஒருவனுக்கு உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றும் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் அதன் வளர்ச்சிப் பொருள் தேவையே உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றால் உடல் மிடுக்காக வைக்கப்படுகின்றது. விஞ்ஞானம் திறனாய்வு ஆகியவற்றால் மனம் விளக்க முறுகின்றது. கலை, இலக்கியம், தத்துவம், மதம் ஆகியவற்றால் ஆன்மா ஒளிபெறுகின்றது. மனித இனத்தில் ஆன்மா வளர்ச்சியடையத் தேவையாயின் மிகவும் இன்ப மூட்டும் சக்திகளின் செயலாற்றலினாலே தான் அது நடத்தப்பட வேண்டும் எனத் தத்துவ மேதை இராதாகிருஷ்ணன் ஆன்மவளர்ச்சியில் சமயத்தின் முக்கியத்துவம் அறிவியலிலும் குறைந்ததன்று என்பதை தெளிவுபடுத்துகின்றார்.



SARAVANA ... DATE

இன்று நாட்டில் அமைதி யில்லை என்று கூறுகிறோம். உண்மையில் மனிதனின் அகத்தில்தான்அமைதியில்லை. மனிதனிடம் மன அமைதி இல்லாத போது உலகம் முழுவதும் அமைதியில்லை என்று கூறுகிறான்'' என்று பகவான் சத்தியசாயிபாபா கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது. ஒவ்வொரு மனிதன் மனத்திலும் அமைதி ஏற்படும் போது தான் உலகத்திலும் நிரந்தர அமைதி ஏற்படு கின்றது. இதற்கு ஆத்மீகக் கல்வி துணை நிற்கின்றது. கல்வியமைப்பிலே சமய ஆன் மீகக் கூறுகள் முக்கிய இடம் பெறவேண்டும் என்று விவேகானந்தர் வலியு றுத்துகின்றார். நமக்குத் தேவைப்படும் கல்வி நல்லொழுக் கத்தை உருவாக்கக் கூடியதாகவும், உள் ளத்திலே ஆற்றலை அதிகப்படுத்தக் கூடிய தாகவும், நமது வாழ்க்கையை நாம் அமைத் துக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையை அளிப்பதாகவும் அமைய வேண்டுமாயின் சமய ஆன்மீக அடிப்படைக் கல்விக்கு இன்றி யமையாதது எனலாம். சுருங்கக் கூறின் உண் மைக் கல்விக்கு சமயம் அடிப்படையாக அமைந்திருப்பது அவசியம். சுவாமி விவேகா னந்தரின் அறை கூவலாகிய ''எழுந்திரு விழித்திரு'' என்ற சொல்லாட்சிகள் ஆத்மீகம் பற்றிய உண்மை நிலையைக் குறிப்பி டுகின்றன. எழுந்திரு என்ற அறை கூவல் மனிதன் தனது உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான அழைப்பாகும் இது கல்விச் சார்பான இலட்சியமாகும். கல்வி யானது மனிதன் உறங்கும் ஆற்றல்களை விழித்தெழச் செய்யவும் செயற்படச் செய்ய வும் உதவுகின்றது. சைவ சமயக் குரவரான மாணிக்கவாச சுவாமிகளின் திருப்பள்ளி யெழுச்சியின் உள்ளடக்கமும் இதுவேயாகும்.

இன்றைய உலகில் இளைஞர்களிடையே காணப்படும் போட்டிக் கும், பொறாமைக்கும், அமைதியின்மைக்கும் முக்கிய காரணம் ஒழுக்கமின்மையே எனத் துணிந்து கூறலாம். இளைஞர்களிடையே நல்லொழுக்கம் காணப்படும் பொழுதுதான் அவர்கள் சமூகநலன், சமூகவளர்ச்சி என்பன பற்றிச் சிந்திக்க முற்படுகிறார்கள். எனவே மாணவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர் களாக வாழுவதற்கு ஏற்றாற்போல ஒவ்வொரு நாட்டுக் கல்விக் கொள்கையும் சமயக் கல்வியைக் கொண்டமைந்திருத்தல் வேண் டும். சமயக் கல்வி கற்பிக்கப்படாத நாடுக ளில் ஒழுக்கக் கல்வி போதிக்கப்படுவதன் காரணம் மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கேயாம். மனிதனின் உயிரிலும் மேலாக ஒழுக்கத்தை மதித்தல் வேண்டும் என்பதனைத் திருவள்ளுவரும்,

''ஒழுக்கம் விழுப்பம் தரலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

என்று கூறியுள்ளமை நோக்கத்தக்கது. ஒவ்வொருவருக்கும் வாழ்க் கையில் விழுப்பம் தரும் செல்வம் கல்வியும் ஒழுக்கமும் ஆகும். அதனைச் சிறந்த தர்மமாகப் போற்ற வேண்டும். ஸ்ரீ அரவிந்தரும் தேசியக் கல்விக் கொள்கையை வகுக்கும் பொழுது சமயக்கல்வி, ஒழுக்கக்கல்வி ஆகி யவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். ''ஒழுக்க சமயக் கல்வி முழுமையாக கல்வித்திட்டத்தில் இடம் பெறவேண்டும். இத்தகய கல்வி குழந்தையின் இளம் பருவ த்திலிருந்து தொடங்கப் பெறவேண்டும்'' ஆகவே உயர்ந்த உள்ளத்திற்கு இளமை யிலிருந்தே பயிற்சி தருவதே கல்வியின் இறுதி இலட்சியம் என்று வகுத்த அரவிந்தர் ஒழுக்கத்தின் அடிப்படையில், சமயத்தின் அடிப்படையில் அமைந்த கல்வித் திட்டத்தி னாலேயே இவற்றை அடையமுடியும் என்கி ன்றார். கல்வி கேள்வி இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்ய மாட் டார்கள் என்பது ''கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'' என்றும் ''கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரையூரிற் பாண்டிக் கொடு முடி நற்றவர்'' என்றும் கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக் கரையில்லா கருணை மாகடலை மற்றவர் அறியா மாணிக்க மலையை'' என்று வரும் திருவாக்குகளினால் அறிய முடிகி ன்றது.

உண்மைக் கல்வி என்பது மனிதனது உள்ளத்திற்கும் அறிவாற்றலுக்கும் ஆலோசனை நெறிப்படுத்துதல் என்பவற்றினை வழங்கித் தூய சாத்வீக இன்பத்தை ஈட்டுவதற்கு அழைத்துச் செல்லும் கருவியாகும். இக் கல்வியினை மாணாக்கருக்கு வழங்குவதில் குரு ஒரு முக்கிய இடத்தினை வகிக்கின்றார். குரு என்ற பெயர் "அறியாமையை நீக்குபவர்" என்ற பொருளைத் தரும். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் திருவருள்தான் என்ற கருத்தினைத் திருவருட்பயன் எடுத்துக் கூறும்.

"அறியாமை உள்நின்(று) அளித்ததே
காணும்
குறி ஆகி நீங்காதகோ"

ஆத்ம ஞானம் தானாக விளங்க மாட்டாது. அதை விளங்கச் செய்வதற்கு ஞானாசாரியன் வேண்டும். ஆன்ம ஞானத்தை அடைவதற்கு ஞானாசாரியன் இன்றியமையாதவன். "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற நிலையில் குரு இந்துப் பாரம்பரியத்தில் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். அறியாமையில் சிக்குண்டு அல்லல் படும் ஆன்மாக்களுக்கு உரிய வழி காட்டுவதற்கு இறைவனின் திருவருளே குருவாக தோன்றுகின்ற தென்றமைக் கேற்ப சில குறைகளையும், சில நிறைகளையும் பெற்றிருப்பவர் எனவே, ஒவ்வொரு மாணவருக்கும் அவருக்கேற்ற வகையில் உரிய அறிவுரையும் உபதேசமும் தேவைப்படும் அவ்வாறு அவரவர் தன்மைக் கேற்பத் தேவையானவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கி அவர்தம் குறைகளைக் களைந்து நிறைவு பெறச் செய்யும் வகையில் அறிவு ஆற்றல் வளரத்துணை புரிவதே குருவின் சிறப்பான பணியாக அமைகின்றது. மாணவரை ஒரு நோயாளி ஆகவும் குருவை நோய் தீர்க்கும் மருத்துவராகவும் உவமித்து மாணவரின் தேவைகளை ஆசிரியரே தெரிந்து கொள்ளவும் அதற்கு வேண்டியன செய்யவும் வல்லவர் என்றும் கருத்து திருவருட்பயனில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"அகத்துறு நோய்க் குள்ளினர் அன்றி
அதனைச்
சகத்தவரும் காண்பவரோ தான்"

அதாவது அறியாமையில் சிக்குண்டு அவதியுறும் ஆன்மாக்களுக்கு ஆதரவளித்துப் கடைத்தேற்றத் துணை செய்யக் கூடிய ஆற்றல் குரு ஒருவருக்கே உண்டு. என்ற கருத்து திருவருட்பயனில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இத்துணை சிறப்பு மிக்க குருவானவர் சமயக் கல்வியை புகட்டுவதன் மூலமாகத் தனிப்பட்ட நபரின் வாழ்க்கையையும், அதே நேரத்தில் நாட்டிலுள்ள சமூகங்களின் ஒழுக்க் கலாசாரத்தையும் உருவாக்கக் கூடியதாக உள்ளது. எல்லா ஆசிரியர்களும் சமயக் கல்வியைக் கற்பிக்கலாம் என்ற நிலை மாறிப் பயிற்றப்பட்ட சமய ஆசிரியர்களே சமயத்தைக் கற்பிக்கும் போது மாணவர்கள் மேலும் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை ஆனாலும் சமயத்தை பாடசாலைகளில் கற்பதாலோ அன்றி ஒழுக்கத்தை போதிப்பதாலோ மாத்திரம் மாணாக்கரை சமூகவயப் படுத்த முடியாது மாணவர்களுடைய ஆளுமை வளர்ச்சியில் பெற்றோர் உறவினர் அவர்கள் வதியும் சமூகத்தில் வாழ்வோர் ஆகிய அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளும் போது தான் மாணவர்கள் மேன்மை அடைவர் எனலாம்.

பல்வேறு தாற்பரியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சமயக் கல்வியினை நாம் போற்றிப் பாதுகாப்பது மட்டுமனிறி, அதனை நடைமுறைப் படுத்துவதன் ஊடாகவும் உலக அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்திச் சமூக சீரழிவுகளையும் தடுத்து அதனூடாக நல்லதொரு உலகை உருவாக்க வழிசெய்யும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க உலகெல்லாம்.

# இலங்கைத் தீவின் அரசியல் வரலாறு சில மீள் சிந்தனைகள்.

திரு. பா. தனபாலன்
உபபீடாதிபதி (கல்வி)
யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.

இரு சுதேசமொழிகளை பேசுகின்ற இரு முக்கிய இனங்களான சிங்களவர்களும், தமிழர்களும் ஏனையோரும் வாழ்கின்ற பிரதேசமாக இலங்கைத் தீவு உள்ளது. வரலாற்று ரீதியாக நோக்குகின்ற போது பாரம்பரியமாக சிங்களவர்களும், தமிழர்களும் குறித்த பிரதேசங்களில் மிக ஆதிகாலத்திலிருந்து வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்கள் தமது பிரதேசங்களை ஆட்சி செய்கின்ற ஆட்பலத்தையும் கொண்டிருந்தனர். அதற்கான வரலாற்றுத் தொல்லியல் சான்றுகள் உள்ளன.

அனுராத புரகாலத்திலிருந்து 16ம் நூற்றாண்டு வரை அரசியல் மாற்றங்களும், வரலாற்று ரீதியிலான முக்கிய நிகழ்வுகளும் சமூக அசைவியக்க செயற்றொடர்களும் பிரதேச அரச ஆட்சியமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் நிலை குலைவுகள் ஏற்படவில்லை. கால ஓட்டத்துடன் அரசாட்சி நிலை பெறத் தொடங்கியது. யாழ்பாண இராச்சியம், கோட்டை இராச்சியம், கண்டி இராட்சியம் என்ற சுதேச அரசர்களைக் கொண்ட மூன்று நாடுகளாக 16ம் நூற்றாண்டில் இலங்கைத்தீவு இருந்தது.

**யாழ்ப்பாண இராச்சியம்:-**

ஆதிகாலத்தில் நாகர்கள் என அழைக்கப்பட்ட தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த இலங்கைத்தீவின் வடகிழக்குப் பிரதேசம் யாழ்ப்பாண இராச்சியம் என அழைக்கப்பட்டது. ஒரு தனித்துவமான குடியரசு பிரதேசமாகப் பலவேறு வராற்றுத் தொல்லியல் ஆதாரங்களைத் தாங்கிய இன் நாடு கி.பி. 13ம் நூற்றாண்டில் பொலநறுவை அரசின் வீழ்ச்சி, இராசதானிகள் தென்மேற்குப் புறம் இடம் பெயர சிங்கநகரை மையமாக கொண்டு மேலும் எழுச்சியடையத் தொடங்கியது.

ஆரியச் சக்கரவர்த்திகளின் தலைமையிலே மேலும் வலுவுற்ற யாழ்ப்பாண இராச்சிய அரசு கி.பி. 1919ல் போர் முனையில் போர்த்துக்கேயரால் வீழ்ச்சியுறும் வரை மிகுந்த செல்வாக்குள்ள அரசாக இருந்தது. இது பற்றி வரலாற்றாய்வாளர் K.M.D. சில்வா பின்வருமாறு கூறுகின்றார்.

"14ம் நூற்றாண்டில் மிகப்பலம் வாய்ந்த அரசாக யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது. இலங்கைத் தீவின் மேற்கே புத்தளம் வரை கிழக்கே அம்பாறை ஈறாக பரந்திருந்தது" என்கிறார். போர்த்துக்கேயர் இவ் அரசின் எச்சங்களை, ஆலயங்களை எல்லாம் அழித்தாலும், சிதைத்தாலும் அவர்களால் யாழ்ப்பாண அரசின் தமிழ் பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் அழிக்க முடியவில்லை.

போர்த்துக்கேயரிடம் இருந்து 1658ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஒல்லாந்த

முதலாவது தேசாதிபதியான வான்கூவன்ஸ் யாழ்ப்பாண இராச்சியத்தின் பெருமைகளை பல தடவை கூறி உள்ளான். யாழ்ப்பாண நகரம் கோட்டைப்பகுதியை அண்டி போர்த்துக்கேயராலும் பின்னர் வந்த ஒல்லாந்தராலும் விஸ்தீகரிக்கப்பட்டது. எனினும் நல்லூர் இக் காலப்பகுதியில் தனது முக்கியத்துவத்தை இழந்து விடவில்லை. இன்றும் யாழ்ப்பாண இராச்சியத்தின் பல வரலாற்று எச்சங்களை நல்லூர் தலைநகரம் கொண்டு விளங்குகின்றது. கோப்பாய் பிரதேசத்தின் ஊடாக செல்லும் இராச வீதி பல தொல்லியல் வரலாறுகளை இன்றும் சுட்டி நிற்கின்றது. இது தொடர்பான ஆய்வுகளும் புதிய செயற் திட்டங்களும் வெளியீடுகளும் இன்று தேவையாக உள்ளன.

இலங்கைத்தீவில் மலையக இராச்சியத்தை தவிர ஏனைய இரு இராச்சியங்களும் போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் ஆட்சி செய்யப்பட்டு சீர்குலைக்கப்பட்டன. 1796ல் ஒல்லாந்தரிடம் இருந்து ஆங்கிலேயர் இப் பிரதேசங்களை கைப்பற்றி 1915ம் ஆண்டு கண்டி இராச்சியம் உட்பட இலங்கைத்தீவு ஆங்கிலேயர் வசமானது. இத் தருணத்தில் அந்நிய ஐரோப்பியர்களுக்கு எதிராக மக்கள் சுதந்திர போராட்டங்களை பலவேறு நிலைகளில் நடத்தினர். இலங்கைத்தீவிலே சிங்கள அரசுகளின் சின்னங்கள் பலநிலைகளில் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் தமிழரசுகளின் சின்னங்கள் பல அந்நியரால் சூறையாடப்பட்டமை மிக வருந்தத் தக்கதாகும். ஆங்கிலேயர் தமது ஆட்சியை உறுதிப்படுத்த பல அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்தினர்.

**ஆங்கிலேய அரசியல் யாப்புக்கள்:-**

1829ல் தமது இலாபநோக்கை வினைத்திறனாக்க இலங்கைத்தீவின் ஆட்சி முறையை சீர்செய்யவும் கோல்புறூக், கமறன், ஆகியோரைக் கொண்டு ஒரு அரசியல் அமைப்பை ஆங்கிலேய அரசு உருவாக்கியது. இதில் தேர்தல் முறை இல்லா விட்டாலும் பிரதிநிதித்துவ ஆட்சிமுறைக்கான அத்திவாரத்தை இட்டது. தொடர்ந்து 1910, 1924ஆம் ஆண்டுகளில் இலங்கைத்தீவு மக்களின் சுதந்திர உணர்வுகளை மழுங்கடிக்க யாப்பு சீர்திருத்தங்களையும் பிரித்தாழும் தந்திரங்களையும் ஆங்கில அரசம் அதற்கு துணை போன உயர்குலத்தினரும் பின் பற்றினர். இலங்கைத்தீவினரான உயர்ந்தோர் குலத்தினர் தமது சலுகைகளுக்காக பல தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டமை இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் பல கறைகளை ஏற்படுத்தயது.

தொடர்ந்து 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தம் அரைகுறை சுயாட்சி என்ற வகையில் அமுலாக்கப்பட்டு பின் சோல்பரி அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. ஆங்கிலேயர் ஆட்சியை விட்டு அகன்றனர். எனினும் தமிழ் - சிங்கள இனத்துவபிரச்சனை என்ற புற்று நோயையும் உருவாக்கி விட்டே அவர்களும் சென்றார்கள். தமிழர்கள் கல்விப் பொருளாதார வளர்ச்சிகளில் மிக எயர்வாக இருந்தனர். இந் நிலையில் சிங்கள மக்கள் இடையே இனத்துவசம் அற்ப அரசியல் லாபங்களுக்காக தூபப்பட்டது. 1958ம் ஆண்டு தென் பகுதிகளில் தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். உடமைகளை இழந்தார்கள் கோரமான இனக்கலவரம் நடை பெற்றது. இலங்கைத்தீவின் அரசியலில் இனப்பிரச்சினை தேசியவாத பிரச்சினையாக உருவெடுத்தது.

**தேசிய உருமைப்பாட்டுப் பிரச்சினைகள்:-**

இலங்கையின் தேசிய வாதம் தனக்கே உரித்தான பல வெளிப்படையான தனித்துவங்களைக் கொண்டுள்ளது. இவை சிங்கள பௌத்த இனவாதிகளின் தேசிய வாதம், தனித் தமிழ் தேசிய உணர்வுகள், உந்தல்கள், முஸ்லீம்களின் தேசிய எண்ணங்கள். மலையக மக்களின் கனவுகள்

எல்லாம் இலங்கைத்தீவின் தேசிய வாதப் பல்லனப்பிரிவுகளை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. இதற்கு இன்னும் பல காரண ங்கள் உ_ள்ளன.

1) பல்லின சமூகஇனத் தன்மைகள், அரசியலில் மதம், புவியியல் வாழிட அமைவுகள்
2) பெரும்பான்மையோர் ஆதிக்க உணர்வும் சிறுபான்மையோர் தாழ் உணர்வுகளும் நம்பிக்கையினங் களும்.
3) அரசியல் திட்ட முரண்பாடுகள் (1972, 1978 யாப்புக்கள்.)
4) பிரதிநிதித்துவ முறையும் அதன் குறைபாடுகளும், தேசிய அடிப்படை யில் அமைய முடியாத கட்சிகள், சுயலாப நோக்கம் கொண்ட அமுக்கக் குழுக்கள்.
5) மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வளங்களும், கல்விமுறைக் குறை பாடுகளும் வெகுசன தொடர்பு சாதனங்களின் பக்கச்சார்புகள்.

இவ்வாறான மிகப்பல காரணங்களின் விளைவாக இனவாத வன் முறைகள் 1970ம் ஆண்டிலிருந்து விரி வடைந்து 1977,1979,1981 விசேடமாக 1983 கறுப்பு யூலை வரை இனக்கலவரங்கள் தமிழ ருக்கு எதிராக விஸ்வரூபம் எடுத்தன. 1972ன் பின் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஏனைண கட்சிகளின் நிலைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. 1983ம் ஆண்டைத் தொடர்ந்து தமிழின தனி நாட்டை ஏற்படுத்த பல விடுதலை இயக்க ங்கள் போராட்டங்களை பரந்த அளவில் விஸ்தரித்தன. 1987ம் ஆண்டு இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்க்க இந்தியாவின் நேரடித் தலையீடு தோல்வியடைந்தது தொடர் ந்து முதலாம், இரண்டாம், மூன்றாம் ஈழப்போர்களின் ஊடாக பல அரசியல் படிப்பி னைகள், யுத்த நெருக்கடிகளுக்கு இலங்கை த்தீவு உட்பட்டது.

தற்போது தமிழ் அரசியல் கட்சிகள் , மக்கள் ஓரணியில் இணைதல் மிக அவசிய தேவையாக உள்ளது. அதற்கான சந்தர்ப் பங்கள் நெருங்கி வருகின்றன. சிங்கள மக்க ளும் தற்போதைய ரணில் விக்கிரம சிங்க தலைமையில் சமாதானத்துக்கான முன்னெ டுப்புக்களில் ஆர்வம் காட்டிச் செயற்படத் தொடங்கியுள்ளனர். இந்த நல்ல அரசியல் சூழல் தொடரப்பட அனைவரும் உழைக்க வேண்டும். இல்லையேல் இலங்கைத்தீவில் தொடர் ந்து இரத்த ஆறு ஓடுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விடும்.

**யுத்தம் நிலவும் சந்தர்ப்பங்களில் சட்டம் மௌனமாகி விடுகிறது.**
**~ சிசைரோ~**

உங்கள் நாவுக்கு சுவையான
உணவுகளை செய்து தருவதில்
தனித்துவம் பெற்றவர்கள்



## சாஸ்வதி விலாஸ்



பருத்தித்துறை வீதி,
கோப்பாய் சந்தி,
கோப்பாய்.

---

சகல விதமான
பட்டுப் புடவைகளையும் பெற்றுக்
கொள்ள



## வளர்மதி ரெக்ரைல்ஸ்



இல: 258, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

---

## தேவன்

அரைக்கும்
ஆலை





கைதடி மானிப்பாய் வீதி,
கோப்பாய் சந்தி,
கோப்பாய்.

---

## சந்திரன்
## சைக்கிள் வேக்ஸ்

சகல விதமான சைக்கிள்
வேலைகளும் திறம்பட
செய்து கொடுக்கப்படும்.




பருத்தித்துறை வீதி,
கோப்பாய்ச்சந்தி,
கோப்பாய்.

## லக்கி தையல் அகம்



பருத்தித்துறை வீதி,
கோப்பாய்ச்சந்தி,
கோப்பாய்.


## ஜெயராசா
### மோட்டார் சைக்கிள் திருத்தகம்



உரிமையாளர்:மா.ஜெயராசா


பருத்தித்துறை வீதி,
கோப்பாய்ச்சந்தி,
கோப்பாய்.

உங்கள் வீட்டு கொண்டாட்டங்களில்
அலங்கார சோடனை, மின் ஒளியூட்டல்
முச்சக்கர வண்டிச் சேவை (ஓட்டோ),
வீடியோ கசற் வகைகளுக்கு நீங்கள்
நாட வேண்டிய இடம்



செ.ஸ்ரீஸ்கந்தராசா (குட்டி)
M.P.C.S Lane,
கோப்பாய் வடக்கு.

## கல் உடைக்கும் ஆலை
### METAL CRUSHER



கைதடி ~ மானிப்பாய் வீதி,
கோப்பாய்

உரிமையாளர்:
பொன்னுத்துரை உதயகுமார்

# கோப்பாய்க் கோட்டை

க.இ. குமாரசாமி
(முன்னைநாள் அதிபர்)

ஈழ வள நாட்டின் வட பகுதியில் இருந்து தமிழரசிற்கு நல்லூர் இராச தானியாக இருந்தது இதுசிங்கைபுரம், நல்லைநகர்,யாழ் நகர் என்ற பெயர்களால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டன. தலைநகரில் பலமான கோட்டை இருந்தது. பாதுகாப்பிற்காகக் கோப்பாயிலும் வன்னிப் பிரதேசங்களிலும் கட்டப்பட்ட கோட்டைகள் இருந்தன. கோ- அரசன் பாய்- இருப்பிடம் கோப்பாய் என்பது அரசன் இருப்பிடம்எனவும்நல்லூர்மந்திரிமனைஅருகே தூர்ந்து காணப்படும் சுரங்கப் பாதை இங்கிருந்து உபதலை நகரமான கோப்பாய்க்குச் செல்ல உதவியதாகவும், ஆபத்துக்காலங்களில் தலை நகரில் இருந்து அரசர் இதன் மூலம் தப்பிக் கோப்பாய்க்குச் சென்றதாகவும் யாழ்ப்பாண ராச்சியம் எனும் நூலில் காணப்படுகிறது. யாழ்ப்பாண அரசில், ஆரியச்சக்கரவர்த்திமுதல் சங்கிலியன் இறுதியாக ஆட்சி செய்த விபரங்களை இலங் கைச் சரித்திரம் கூறுகிறது. சிங்கள அரசினால் காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட படை எழுச்சிகள் முறியடிக்கப் பட்டுத் தமிழரசு நிலைத்து நின்றது. 1505ல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேசர் தென்னிலங்கையின் கரை யோரப் பகுதிகளை வசப்படுத்தி ஆண்ட போதும்யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எடுத்த படை எழுச்சிகள் பல தோற்கடிக்கப்பட்டன. மீண்டும் 1924ல் புரட்டாதியில் காக்கை வன்னி யன் என்பான் சூழ்ச்சியுடன் பறங்கிப் படை வழமை போல் கொழும்புத் துறையில் இறங்காது பண்ணை யில் இறங்கி, நல்லூரை நோக்கி நகர்ந்தது. அன்று விஜய தசமியின் ஆயுத பூசை யில் தமது ஆயுதத்தினைப் படையினர் வைத்து வழிபாடு செய்து கொண்டிருந்த போது திடீரென நுழைந்த பறங்கிப் படைகளின் குண்டுமாரிக்கு எதிர் கொள்ளத் தமிழ் வீரர் ஆயத்தமான போது காக்கை வன்னியன் தோன்றிச் செய்த சூழ்ச்சியினால் சங்கிலியனை அகப்படுத்தி சிறைப்படுத் தினர். சங்கிலியன் சிறைக் கூடத்திலிருந்து சுரங்கப் பாதை வழியாகத் தப்பி வெளியேறிக் கோப்பாய் கோட்டைக்குப் பின் வாங்கினான். பறங்கியர் நல்லூர்க்கோட்டையைக்கைப்பற்றிக்கொண்டு கோப்பாய்க் கோட்டையை நோக்கி வந்தனர். பறங்கியர் வருகையை அறிந்த சங்கிலியன் இரவோடு இரவாய் வன்னிக் கோட்டையை நோக்கிச்செல்லும்வழியில் காக்கைவன்னியன் உதவியுடன் ஆனையிறவுச் சந்தியில்வைத்துச்சங்கிலியனை இலேசாக அகப்படுத்திய தாகச் சரித்தரம்கூறியது.

பறங்கியர் நல்லூர்க் கோட்டையைஇடித்துப்பண்ணையில்கோட்டையைக் கட்டினர்.கோப்பாய்க்கோட்டையையும்முற்றாக இடித்துக் குறித்த தரைமட்டமாக்கப்பட்ட கோட்டையின் மேற்குப் புறமாய் வீதியிலிருந்த நுழை வாயிலில் பழைய கோட்டை (OLD

CASTLE) என்று எழுதப் பட்டிருந்த கட்டிடம் சில காலத்தின் முன்னரே இடித்து அழிக்கப் பட்டது தெரியும். குறித்த கோட்டை வளவில் செங்கற்களாலான உறுதியான சுவர்களை யுடைய விசாலமான பழமையான வீடு ஒன்று இன்றும் உண்டு. தற்போது பல வீடுகள் கட்டப்பட்டுள்ள போதும், செங்கல் குவியல்கள் வெளிப்படுகின்றன. குறித்த கோட்டையிருந்த இடத்திலுள்ள குடியிருப்பாளர் உறுதிகளிலும் கோட்டை வாய்க்காலும் பழைய கோட்டையும் என்றே எழுதப் பட்டிருப்பதுவும், அகழும் போது காணப்படும் செங்கற் குவியல்களும் நல்லூர்க் கோட்டைக்கு யமுனா ஏரி போல கோப்பாயக் கோட்டைக்கு குதியடிக்குளம்நீச்சல் தடாகமாக அமைந்திருந்ததும், குறித்த கோட்டை வளவிற்குத் தெற்கு எல்லையில் செல்லும் கோட்டை வாய்க்காலும் கோப்பாய்க் கோட்டையை நினைவு படுத்தும் சின்னங்களாக இன்றும்உள்ளன.

குறித்த குதியடிக் குளம் 1955ம் ஆண்டளவில் கிராம முன்னேற்றச் சங்கக். கோரிக்கையின் படி அரச செலவில் ஆழமாக்கப்பட்டுக் குறித்த குளத்தைச் சுற்றியுள்ள அரை சாந்தால் கட்டப்பட்ட அகலமான சுவர்கள் இடிக்கப்பட்ட போது தென் மேற்கு மூலையில் 62 அடி வரையுள்ள ஓர் குழி காணப்பட்டது. அதற்குள் சாம்பல் போன்ற உக்கிய அசேதனப் பொருட்கள் காணப்பட்டன. பண்டைய வழக்கப்படி தடாகம் பூரணமாக் கப்பட்ட வேளை கொடுக்கப்பட்ட நர பலியின் சேதனப் பொருட்களாய் இருக்கலாம் என்ற அபிப்பிராயம் பல அனுபவார்த்தைகளினாலும் கூறப்பெற்றது.

" யுத்தத்தின் முடிவை இறந்தவர்களே கண்டுள்ளனர் "

~ பிளேட்டோ~

" யுத்தம் மனிதனின் அபகீர்த்தி நிலையாகும் "


~ ஹொரமிசன் ~


" உடற்பலத்தை உயர்ந்த அளவில் பயன்படுத்தப்படும் விளையாட்டான யுத்தம் மிலேச்சத்தனம் கொண்டவர்களின் விளையாட்டாகும்

~ நெப்போலியன் பொனபாட்~

எல்லா வகையான மாபிள் வகைகள்,
எஸ்லோன் பைப்புக்கள்,
பிற்றிங்ஸ், நீர் இறைக்கும் மோட்டார் பம்புகள்,
குழாய்க்கிணறு பம்புகள், பெயின்ட் வகைகள், சுண்ணாம்பு,
கலர் காவி, யாவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்


# நியூ கமல் செரமிக்ஸ்






37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 2085

மோட்டார் சைக்கிள் மொத்த சில்லறை விற்பனையாளரும்,
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளருமான அருள்
விநாயகர் ரேடர்ஸ் க்கு விஜயம் செய்யுங்கள்.





# அருள் விநாயகர் ரேடர்ஸ்



106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# WOOD SONS






631, K.K.S Road
Jaffna.
T.P- 021- 2480

`புத்தம் புதிய மோட்டார் சைக்கிளா?
றீக் கொண்டிசன் மோட்டார் சைக்கிளா?
குபோட்டா (Kuboto) யப்பான் லான்ட் மாஸ்டரா?
அஸ்பெஸ்ரஸ் சீற் வகைகளா?
மற்றும் மோட்டார் சைக்கிள் பற்றரி வகைகளா?
எதுவாயினும் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## யசோ மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயர்ஸ்





இல: 163.165 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
உரிமையாளர்: ச.யசோதரன்

# ஐக்கிய நாடுகளின் உதவி நிறுவனங்களின் செயற்பாடுகள்

ஐ. சிவலோகநாதன்

எமது நாட்டில் குறிப்பாக யாழ் குடா நாட்டில் கடந்த பல வருடங்களாகத் தொடர்ச்சியான யுத்த நிலமையினால் நாட்டின் வளங்கள் பெருமளவு அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் பாரிய அழிவை ஏற்படுத்தி உள்ளது. இந்த அழிவுகளை ஈடுசெய்வதற்குப் பல சர்வதேச நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இந் நிறுவனகள் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவை மட்டுமன்றி மேலும் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு நாட்டை முன்னேற்றுவதில் தமது பங்களிப்பை நிலைநாட்டி உள்ளன. இந் நிறுவனங்களின் அயரா முயற்சியினால் யாழ் குடாநாடு பெருமளவு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தற்போது நாட்டின் பல செயற்பாடுகள் இந் நிறுவனங்களிலேயே தங்கி இருக்கும் நிலைமை தோன்றியுள்ளது.

இந்த வகையில் UNDP , UNHCR , UNICEF, ACTIONFAIM, CARE,GTZ போன்ற நிறுவனங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை மக்கள் பங்களிப்புடனேயே தமது சேவையை ஆற்றி வந்துள்ளன. இதனடிப்படையில் குறிப்பிட்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் செயற்பாடுகளை நோக்குவோம்.

### (1) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒழுங்கமைப்பு

UNITED NATION DEVELOPMENT PROGRAMME ( UNDP)

இது உறுப்புரிமை நாடுகளிடையே சீரான திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான தொழில் நுட்ப அறிவு நடத்தைகளின் அபிவிருத்திக்குக் கடன் வசதிகள் வழங்குவதற்கான ஐக்கிய நாடுகளின் அமைப்பாகும். இந்த வகையில் கைத்தொழில் முயற்சிகளுக் கெனப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக் கூடாக ( கிராமிய) சிறிய கடன் வசதிகளை அளித்துள்ளது. பல அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தி உள்ளது.

(1) மாவட்ட விவசாய பயிற்சி நிலையம்
(2) கால்நடை அபிவிருத்தி நிலையம்
(3) யாழ் போதனா வைத்தியசாலை புனரமைப்பு
(4) தொழிற் பயிற்சிகள்
(5) கணணி பயிற்சி நிலையம்

மேலும் இந் நிறுவனம் மக்கள் மத்தியில் சமூகப் பொறுப்புணர்ச்சி பற்றிய

விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாகத் தாமும் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அணிதிரட்டல் முயற்சியினையும் மேற்கொண்டனர். இவ்வாறு பொது மக்களை விழிப்படையச் செய்ததன் மூலம் பொதுச் சொத்துக்கள் மீது அவர்கள் பொறுப்புணர்ச்சி அதிகரித்துள்ளதையும் அனுபவ ரீதியாகத் தெரிந்து கொண்டனர். இவற்றை விடத் தொழிற் திறன் விருத்தி என்ற வகையில் யுவதிகளுக்குத் தையற் பயிற்சி அளித்துள்ளது.

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம்:-**

United Nution High Commissi oner For RE FUGEES (UNHCR)

இந் நிறுவனம் அகதிகளுக்கான பல்வேறு புனர்வாழ்வு புனர் நிர்மாண நடவடிக்கைகளைக் காலத்துக்கு காலம் நிறைவேற்றும் ஐக்கிய நாடுகளின்ஒரு அமைப்பாகும். ஆரம்பத்தில் இந் நிறுவனம் சேதமடைந்திருந்த வீடுகளைத் திருத்திக் கொடுக்கவும், வீதிகள், பொது இடங்கள் என்பவற்றைப் புனருத்தாரணம் செய்யவும் முன்வந்து அப் பணிகளை மேற்கொண்டது. இச் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10,000 ரூபா பெறுமதியான வீட்டுக் கூரைத் தகடுகளையும் வழங்கியுள்ளது.

மேலும் இந் நிறுவனம் நீர்ப்பாசன வசதிகள் பலவற்றையும் செய்து கொடுத்தது. கிணறுகள் திருத்தியமைக்க உதவியதுடன் மழை வெள்ளம் வடிய வாய்க்கால் அமைப்புக்களையும் செய்து கொடுத்தது. மற்றும் சனசமூக நிலையங்களைப் புதுப்பித்தல், பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் பங்கெடுத்தது. மீளக் குடியமர்ந்த மக்களின் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி அளிக்கும் பொருட்டு இந் நிறுவனம் பாடசாலைத் திருத்த வேலைகளையும் மேற்கொண்டுள்ளது. மீள் குடியேற்றத்தின் ஆரம்ப செயற்பாடுகளில் இந்நிறுவன நுண்கருதிப் படங்கள் மூலம் முக்கிய பங்காற்றியுள்ளது.

**ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகளின் அவசர கால நிதி:-**

United Nation Internatiunal Children's Emergency Fund (UNICEF)

இந் நிதி நிறுவனமானது மலேரியா, சலரோகம் என்பவற்றை அழித்தல், உணவு, உடை, மருந்துவ வசதிகளை வழங்கிச் சிறுவர்களின் நலன்களை விருத்தி செய்தல்என்பவற்றைப் பாராமரிக்கும் ஐக்கிய நாடுகளின் அமைப்பாகும். இலங்கையில் சத்துணவுத் திட்டங்களுக்கு இது நிதியுதவி வழங்குகின்றது. கிணறுகள், மலசல கூடங்களைத் திருத்தியமைப்பதுடன் புதிய கிணறுகள் மற்றும் மல சல கூடங்கள் போன்றவற்றைப் புதிதாகவும் நிர்மாணித்துக் கொடுத்துள்ளது.

இவற்றை விட மக்கள் பாவனைக்குத் தேவையான சமையலறைப் பாத்திரங்கள் மற்றும் பிளாஸ்ரிக் பாய்கள் போன்றவற்றையும் விநியோகிக்கின்றது.

**பட்டினிக் கெதிரான நிறுவனம் (ACTION FAIM)**

இது வறிய மக்களின் தேவைகளை ஈடுசெய்யும் நோக்குடன் உருவாக்கப் பட்ட நிறுவனமாகும். உணவு உற்பத்திகளை மேம்படுத்தி, மக்களின் உணவுத் தேவையைச் சீராக்குகின்றது. மேலும் இந் நிறுவனம் பழ மர ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப் படுத்திப் பல கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்களுக்குப் பழ மரக் கன்றுகளை கிருமி நாசினி விசிறலையும் மேற்கொண்டது. விவசாய உற்பத்திப் பொருட்கள் பதனிடும் பயிற்சியையும் சில கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொண்டது.

**ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம்:- (GTZ)**

இந் நிறுவனம் குடாநாட்டில் புனர்நிர்மாண புனரமைப்பு வேலைகளை மேற்கொள்கின்றது. பிரதேசச் செயலர் பிரிவில் உள்ள வருமானம் குறைந்த வறுமையிலும் வறியோரைத் தெரிவு செய்து ஒரு லட்சம் ரூபா செலவில் வீடமைத்துக் கொடுக்கும் நோக்குடன் வீடுகள் புனர்நிர்மான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும் குடி நீர்வசதியற்ற கிராமங்களுக்குக் குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. மற்றும் பாடசாலைகளுக்கு மலசல கூட வசதிகள் செய்வதுடன் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கும் பணியையும் மேற்கொள்கிறது.

" செல்வந்தர்கள் புரிந்த போது இறப்பது ஏழைகளே

~ ஜீன் போல் சாஸ்திரே

" ஐயோ! யுத்தமாகிய நீ, நரகத்தின் புதல்வனாவாய்

~ வில்லியம் ஷேக்ஸ்பியர் ~

நன்மையான யுத்தமோ மோசமான சமாதானமோ
உலகத்தில் என்றுமே ஏற்பட்டதில்லை

~ பெஞ்சமின் பிராங்ளின் ~

# நாவலர் வழியில் இந்துபோட் சு. இராசரத்தினம் அவர்கள்

தி. சுப்பிரமணியம்
முன்னாள் செயலாளர்,
பா.அ.ச.

இலங்கையில் முதன் முதல் சைவப்பாடசாலையயை அமைத்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் க. ஆறுமுக நாவலர் அவர்கள். சைவப்பிள்ளைகள் சைவப்பாடசாலையிலேயே கற்க வேண்டும் என்ற நோக்குடன் 1848 இல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் நாவலர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையே சைவப் பிரகாச வித்தியாசாலையாகும். சைவ சமய அபிவிருத்தியின் பொருட்டு பிரசங்க முறையை ஆரம்பித்து வைத்த அபருமையும் நாவலர் பெருமான் அவர்களையே சாரும்.

நாவலர் வழியில் அரசியலில் புகுந்தவரான சேர். பொன்னம்பலம் இராமநாதன் தலமையில் ஸ்தாபிக்கப்பட்டது சைவவித்தியா விருத்திச் சங்கம். வைச வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக இருந்து உழைத்தவரே சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள். நியாயவாதியான திரு.சு. இராசரத்தினம் அவர்களை சைவபாரம்பரிய முயற்சிகளில் ஈடுபட வைத்தவர் காரைநகர் அருணாசல வாத்தியார்அவர்கள் தான் என்பது சரித்திரம்.

நாவலர் பெருமான் அவர்களைப்போல திரு. இராசரத்தினம் அவர்களும் சைவப் பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவினார். திரு. இராசரத்தினம் அவர்கள் அப்பொழுது அரசாங்க சபைப் பிரதி நிதியாக இருந்தமையால் கல்விப்பணி, சமயப்பணியில் ஈடுபடவும் சந்தர்ப்பங்கள் நன்கு கிடைத்தன. அதனால் சைவப் பாடசாலைகளை நிறுவுவதில் அவர் பெரும் வெற்றி கண்டார். சைவப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு சைவாசிரியர்கள் தேவை இருந்தது அதன் பொருட்டுத் திருநெல்வேலியில் சைவாசிரியர் கலாசாலையை நிறுவினார். சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் இருதய ஸ்தானமே சைவாசிரிய கலாசாலை. சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பணி செய்து மக்கள் பாராட்டை அமோகமாகப் பெற்றார்கள்.

பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கென ஓர் அநாதைசாலையை நிறுவினார் இராசரத்தினம் அவர்கள். குறித்த அநாதசாலையிற் சேர்க்கப்பட்ட பிள்ளைகள் உண்டியும் உறையுளும் பெற்றதுடன் சிறந்த கல்வியையும் கற்றார்கள்.

175ற்கு மேற்பட்ட சைவப் பாடசாலையையும் சைவாசிரிய கலாசாலை



கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய
பவளவிழா மலர் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்!

# வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ சங்கம், நீர்வேலி.

சகல விதமான நுகர்வுத் தேவைகளுக்கும் மொத்த சில்லறை விற்பனை நிலையங்கள் அச்செழு,கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி, ஊரெழு

**வங்கிச் சேவைகளுக்கு:** கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி கிராமிய வங்கிகள்

**விவசாய உபகரணங்கள், கனரக பொருட்களுக்கு:**
இரும்பு விற்பனை நிலையம்,உரும்பிராய், நீர்வேலி.

**சிறுவர், ஆடவர், பெண்களின், துணிவகைகள், பாடசாலை உபகரணங்கள்,அலங்காரப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்:** மாதிரி விற்பனை நிலையம் -நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய்

**வாகன சேவைக்கு :** நீர்வேலி மொத்த விற்பனை நிலையம்,
**வாடகைக் கதிரைக்கு:** நீர்வேலி மொத்த விற்பனை நிலையம்.

**எரிபொருள் தேவைக்கு:** கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம்.
கட்டடப் பொருட்களுக்கு: இரும்பு விற்பனை நிலையம், உரும்பிராய்.
உப்பு விளைவித்தலும் அதற்கான முகவரும்

**தொலைபேசி சேவைக்கு:** நீர்வேலி
உள்ளூர்: 070-212337, 070-213020
வெளியூர்: 094-070-212337, 094-070-213020

**நிழல்பிரதி சேவைக்கு:** நீர்வேலி
பல்பொருள் விற்பனைக்கு: நீர்வேலி, உரும்பிராய்.

மக்கள் சேவைகளே வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ சங்கத்தின் தேவை


கூட்டுறவே நாட்டுயர்வு

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய
பவளவிழா மலர் புதுப் பொலிவுடன் வெளிவர வாழ்த்துகின்றோம்!


# வினோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்

அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.



185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



T.P/Fax: 021-2824

உரிமையாளர்:
சடாச்சரம் புவிச்சந்திரன்

யையும் சைவஅநாத சாலையையும் நிறுவி நாவலர் வழியில் பெரும் தொண்டு புரிந்தார். சைவப் பெரியார் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் "நாவலருக்குப் பின் நமக்கோர் காவலா" என்று நாம் அவரை அழைப்பது சாலவும் பொருந்தும்.

சைவ அநாத சாலை இப்பொழுது சைவச்சிறுவர் நிறைவாழ்வு இல்லம் என்ற பெயரில் திருநெல்வேலியில் நன்கு இயங்குகின்றது. சைவப் பெரியார் திரு. சு. இராசரத்தினம் ஐயா அவர்களை என்றும் நினைவுகூரும் வகையில் அன்னாரது உருவச்சிலை அங்கு நிறுவப் பெற்றிருப்பது நன்றி மறவாத செயலாகும்.

இந்து போட்.சு.இராசரத்தினம் அவர்கள் முயற்சியால் ஸ்தாபிக்கப்பெற்ற கல்வி நிறுவனங்களில் ஒன்று தான் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை. கோப்பாயில் பல்லாண்டு காலம் கல்விப் பணி ஆற்றிவரும் குறித்த ஸ்தாபனம் அபருவிழா எடுத்து மலரும் வெளியிடுவது கண்டு பழைய மாணவன் என்ற வகையில் யான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"கல்வி அழகே அழகு"

**அழகு என்றும் ஆபத்தானது**
**நீ பழகு ஆனால் எதையும்**
**பறி கொடுத்துப் பழகாதே.**

**அன்பைக் காட்டு உயர்**
**பண்பைப் பெறு அதற்காய்**
**என்றும் இதயத்தைக் கொடு**
**அன்புக்கு அடிமையாகிவிடாதே.**

# சரவணபவானந்தாவின் மூத்த விசுவாச மைந்தன்

யாழ் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மூத்த மாணாக்கர்களில் அமரர் இளையதம்பி சுப்பையா அவர்கள் குறிப்பிடத் தக்க ஒருவர் ஆவார். இவர் கோப்பாய் வடக்கு கிராம வரலாறுகள், ஆலய வரலாறுகள், குடும்ப ரீதியான வரலாறுகளை மணிக்கணக்காகச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர். இவர் குடா நாட்டில் மட்டுமல்லாது இலங்கையில் உள்ள பல சைவ ஆலயங்களைத் தரிசித்து அருள் பெற்ற பெருமைக்குரியவர்.

தந்தையாரை மிகவும் இளமைப்பருவத்திலேயே இளந்துவிட்ட போதிலும் தாயாரின் அரவணைப்பில் சகோதரர் சரவணமுத்துவுடன் வாழ்ந்து வந்தார். சகோதரர் சரவணமுத்து அவர்கள் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட போது இவர் விவசாயத்தை தனது விருப்புக்குரிய தொழிலாக ஏற்றுக்கொண்டிருந்தார். துரதிஷ்ட வசகாகத் தாயாரும் இறைபதம் அடைந்த பொழுது இராமர்க்கு பரதர் போல இருவரும் இணைபிரியாச் சகோதரர்களாக வாழ்ந்து வந்தனர். ஊரில் இராமர் சுப்பையா என்றும் இவர்களை நாசுக்காக அழைப்பதுண்டு.

இவர்கள் இருவரும் மாசுமறுவற்ற நைஷ்டிகப் பிரமச்சாரிகளாக, இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு வாழ்ந்து வந்தனர். பூரணமான வளங்கள் இருந்தும் கலவீடு கட்டி வாழ்வதையோ விலையுயர்ந்த உடுபிடைவைகள் உடுப்பதனையோ தம்மளவில் விரும்பவில்லை. தமது உழைப்பில் சேமிப்பாகக் கிடைக்கும் தொகையைச் சேர்த்து சித்திர வேலவர் பணிகளிலும் கோப்பாய் வடக்குச் சனசமுக நிலைய வளர்ச்சியிலும் பங்கீடு செய்துள்ளார்.

தனது சகோதரர் சரவணமுத்துவின் பிற்காலத் தேவை கருதி வங்கியிலும் ஒரு தொகையை இட்டு வைத்தார். தம்பியார் சரவணமுத்து அவர்கள் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டு 06.10.1998ல் இவ்வுலகை நீத்தார். அதன் பின்பு சுப்பையா அவர்கள் தமது இருப்பிடத்தை மாற்றிச் சித்திர வேலவர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள ஒரு வீட்டில் குடியமர்ந்தார். இக்காலத்தில் தன் இயலாமையோடும் சித்திர வேலவரைத் தினமும் தரிசிக்கத் தவறுவதில்லை. இக்காலத்தில் தனது சகோதரர் ஞாபகர்த்தமாகக் கோப்பாய் வடக்கு சனசமுக நிலையத்திற்கும் எமது பாடசாலைக்கும் ஒரு தொகைப் பணத்தை நல்கி உதவியுள்ளார்.

பாடசாலைக்கு வழங்கப்பட்ட பணம் நிலையான வைப்பில் இடப்பட்டு முத்தமிழில் திறமைச்சித்தி பெறுவோர்க்கு வருடம் தோறும் பரிசில்கள் வழங்கப்பட வேண்டுமென்பது இவரது பேரவாவாகும்.

கோப்பாய சரவணபவானந்த வித்தியாலய ஞாபகார்த்தா தினத்தை அதன் ஆரம்ப இடமாகிய சித்திர வேலவர் ஆலயத்தில் நவராத்திரி தினத்தன்று விசேடபூசை வழிபாடு நடாத்த வேண்டும் என்ற சிந்தனை உடையவர். சுரவணபவானந்த வித்தியாலயத்தில் கோலாட்டம் பற்றியும் இவர் நடித்த நாடகங்களில் உள்ள பாத்திரங்களின் தன்மை பற்றியும் பலர் கூறக் கேட்டுள்ளேன். கோலாட்டம் பற்றி ஒரு கட்டுரையை எழுத வேண்டுமென திரு. ச. குணசிங்கத்துடன் தொடர்பு கொண்ட போதிலும் காலச் சூழ்நிலை காரணமாக அது

நிறைவெய்தவில்லை. இத் தருணத்தில் சுப்பையா அவர்கள் 29.01.2002ல் இறைபதம் அடைந்து விட்டார். இதனால் மேற்படி குறையைத் திரு. ச. குணசிங்கம் அவர்கள் இப் பவளவிழாவில் மாணவர்களைப் பழக்கி அன்றைய தினம் கோலாட்டத்தை மேடையேற்றவுள்ளார் என்பது வரவேற்கத்தக்கது.

அறப்பணிகள் தொடரச் சித்திர வேலவர் திருவருளை வேண்டி நிறைவு செய்கிறேன்.


ஓர் அன்பர்



“முத்த விசுவாச மைந்தன்” என்ற கட்டுரையில் குறிப்பிடப்படும் அமார் திரு. இ. சுப்பையா அவர்களின் சகோதரர் இவர் ஆவர். இவருடைய ஞாபகார்த்தமாகத் திரு. சுப்பையா அவர்கள் ஞாபகார்த்த பரிசு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இளையதம்பி சரவணமுத்து

# பாடசாலைக்கு வித்திட்டவர் பற்றி ..



**வடகோவைச் சரவணபவானந்த வித்தியாலய முன்னாள் ஸ்தல மனேஜரும் (1928 - 1960 ஆவணி வரை) பெற்றார் ஆசிரியர் சங்கப் போஷகரும் ஸ்தல தர்மகர்த்தாவுமாகிய திருவாளர் சின்னத்தம்பி பொன்னையா அவர்கள்**

கோப்பாய் வடக்கிலே சைவ வித்தியா விருத்திச் சங்கத்தார் சரவணபவானந்த சிரேஷ்ட பாடசாலையைத் தாபிக்க முன் வந்த போது தர்ம சீலராகிய சின்னத்தமிபி பொன்னையா சகோதரர்கள் ஆகிய சின்னத்தம்பி மார்க்கண்டு, முருகர் கந்தர் ஆகியோரும் ஆரம்பத்தில் காணி நன்கொடையாக தரும சாதனஞ் செய்து கொடுத்தார்கள். பின்னர் ஒழுங்கைக்கு மேற்குப் பக்கமாக திருவாளர் நாகலிங்கம் அம்பலவாணர் நன்கொடையாக தரும சாதனஞ் செய்து கொடுத்தார்.

# Importance of English

S.Navaratnam,
Retired Teacher.

In the dawn of the New Millennium, we should think of the importance of English, because it plays a major role in the fast moving world.

Language is the means for communication and an exchange of views and ideas. There is a necessity for a common language to communicate. Because of its success in spreading, English Language had become and international language. The British Empire had ruled many countries and they spread English language all over the world. The spreading of the Christianity is also another means of developing English.

Out of all the numerous language of the world. English is the most widely used language. Indisputably, it is the vehicle for most of the international communications, Today English is the closest thing to a link around the Globe. English is the official language in many countries in the world. Radio programmes are broad casted in English in many countries.

Every nation which uses English follows different tone, colour and quality to that language. Some nations like United Kingdom and Australia have English as the state language and some have it as the first language. Anyway English is the lingue franca around the world. It has replaced French in the sphere of diplomacy and German in the sphere of science. English is the dominant language of the medicine, electronics, space technology international business, computer technology and mass media.

The importance of English could be understood by some statements of great men. Nehru told that "English is a window to the world". Really we many look the world through that window. "English is the door way for gaining Knowledge". As such, if we learn English, we may gather much knowledge through that language. English is supposed to be a language of international brother hood and understanding. It is a growing language in the world and it occupies a unique place in the world. An investment in learning of English pays the best interest.

So, we should assess the importance of the Language. The knowledge of English has become not only valuable, but also an absolute necessity of course. It is undoubtedly an international language. It is indispensable in the commercial world. It is believed that the media will never let English down as Latin did.

# யாழ் குடாநாட்டின் பாடசாலை நூலகங்களும் அவை எதிர் நோக்கும் பிரச்சினைகளும்

திருமதி. ச. ஞானசேகரம்
பழைய மாணவி
(யா/ ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி
நூலக உதவியாளர்)

இன்றைய கல்வி முறையில் மாணவர்களிடையே பெரிதும் தேவைப்படுத்தப் படுவது வாசித்தல், தேடிப் பெறுதல் என்ற கல்விக் கோட்பாடே ஆகும். வாசித்தல் முறையில் மாணவர்கள் நாளாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடன் அறிந்திருக்கப் பெரிதும் உதவுவன பத்திரிகைகளே. ஆயினும் மாணவர்கள் அவற்றைப் பெற அல்லது அவற்றைப்பற்றி அறிந்து கொள்ளக் கூட முடியாத நிலையே காணப்படுகிறது. இன்ரநெற், கணனி என தகவல் ஊடகங்கள் வளர்ச்சி அடைந்திருந்த போதிலும் மாணவர்களின் வாசிப்புத் துறையை மேம்படுத்துவதற்கான புதினப்பத்திரிகைகள் பயன் தரும் நூல்கள் ஆகும்.

"தேடிப் பெறுதல்" என்ற முறையில் மாணவர்கள் பெரிதும் பயன் படுத்தத் தேவைப்படுவது நூல்நிலையங்களே ஆகும். மாணவர்களிடம் ஒப்படை என்ற பகுதிக்குப் பல்வேறு விதமான தலையங்கங்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அத்தலையங்கங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கு பல்வேறு வகையான நூல்கள் அவர்களுக்கு தேவைப் படுகிறது. அவற்றை அவர்கள் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. அண்மைக்கால அனர்த்தங்களினால் பொது பாடசாலை நூல்நிலையங்களில் இருந்த நூல்கள் யாவும் அழிந்து போனமையே காரணம். அரும் பெரும் பொக்கிசமாகப் பாது காத்துப்பேணி வந்த நூல்கள் அழிந்தமை எமது மாணவ சமுதாயத்திற்கு ஓர் பாரிய பின்னடைவு என்பது தெளிவு.

அநேகமான பாடசாலைகளுக்கு நூல் நிலையம் அமைக்கப்படவில்லை. கல்லூரிகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு நூல்நிலையங்கள் அமைக்கப் படாதது பெரும் குறையாக உள்ளது. நூல்நிலையங்கள் ஆண்டு 3ல் இருந்து பயன் படுத்தத் தொடங்க வேண்டும். இதற்கான முன்னெடுப்பாக சில பாடசாலைகள் பழைய மாணவர்கள் உதவியோடு நூல் நிலையங்களை அமைத்து வருகின்றன.

பாடசாலை நூலகத்திற்கு தேவையான கட்டட வசதிகள் இல்லாதது பெரும் குறைபாடே ஆகும். அநேகமான கல்லூரிகள், வித்தியாலயங்கள் இப்பிரச்சனையை எதிர் நோக்குகின்றன. மிகச் சிறிய அறைகளை நூல்நிலையங்களாகப் பயன்படுத்துவதனால் மாணவர்கள் வாசிக்கக் கூடிய வெளிச்சம், காற்றோட்டம் என்பன இல்லை. அத்துடன் நூல்நிலைய அமைப்பு,முறையில் அமைக்கப் பட்டதாக இல்லை. அத்துடன் இருக்கை வசதிகள் அற்ற நிலை காணப்படுகின்றது.

இந் நிலையை ஈடுசெய்யும் முகமாகக் கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப்பிரிவு இலவசமாக நூல்களை வழங்கி வந்த போதும் அவை மாணவர்களின் தேவையின் ஒரு சிறிய பகுதியையே பூர்த்தி செய்கின்றது. அத்துடன் ஒரு தொகுதி இருக்கை வசதிகளையும் வழங்கி வருவது வரவேற்கதக்க ஒன்றாகும்.

எனினும் இந்நிலை மாணவர்களின் நிலையைப் பூர்த்தி செய்ய போதுமானதல்ல. ஆகவே மாற்றீடாக எமது சமுதாயம் விழிப்படைய வேண்டும். அமைப்புக்களாகச் சேர்ந்து செயற்பட்டுப் பாடசாலை நூலக வளத்தினை மேம்படுத்த முயல வேண்டும். நூலகம் வளர்ச்சியடையும் போது எமது மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாடு அடையும் என்பது உறுதி.

# இணைப்பாட விதானச் செயற்பாட்டு நடைமுறை ஓர் ஆய்வு

திருமதி. யசோதாமுரளிதரன் B.A. Dip. in Edu.

அமெரிக்க கல்வியியலாளரான டோன் டுயி கல்வி என்பது சமூக புனர மைப்பு சாதனம். அது பயனள்ளதாக அமைய வேண்டும் எனக் கூறுகின்றார். தனியே சமூகத் தைப் புனரமைத்து விட முடியாது. மாணவரி டத்தில் காணப்படும் பலவேறு ஆளுமைக் கூறுகளையும் துலங்கச் செய்ய வேண்டும். ஒரு சமூக நிலை மைக்கு ஒருவருடைய அகம் கொண்ட உடல் உள்ளத் தூண்டற் பேறுக ளின் அருமையான அமைப்பே ஆளுமை. இவ் வாறான ஆளுமையை விருத்தி செய்வதற்கு இணைப்பாட விதான செயற் பாடுகள் பெரிதும் உதவி புரிகின்னறன.

பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய பாடங்களை கற்ப தற்கு ஒழுங்கு செய்வது அப் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவக் கூடிய பாடப் புறச் செயல்கள், இணைப்பாடச் செயல்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தல் போன்ற செயலகளுக்கூடாக பள்ளிக் கூடம் கல்வியின் அடிப்படைகளை வழங்குகின்றது.

ஒரு பாடசாலையானது அரசு, அதிபர், ஆசிரியர், மாணவர், பெற் றோர், நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகவே காணப்படுகின்றது. எனவே பாடசாலை வளங்கள் என்ற கருப் பொருள் பற்றி சிந்திப்போமேயானால் மூன் றாம் உலக நாடுகளைப் பொறுத்த வகையில் அரசு தனது பங்களிப்பை இயன்ற வரை செய்கின்றது. இதற்கு மேலாக இடையிடையே சர்வதேச அமைப்புக்கள் உபகரணங்களை வழங்கல் போன்ற வகைகளில் உதவுகின்றது. இவற்றை பாடசாலையில் ஒருங்கிணைத்துச் செயற்படுத்த வேண்டிய கடமை அதிபரைச் சார்ந்ததாகும். அரசாங்கத்தினால் வழங் கப்படும் மேலதிக சேவைகள் நிறைவா னதாக இல்லாதவிடத்து சமுதாயத்தில் நிதி வசதி படைத்தோர், பரோபகாரிகள் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பைப் பெற்று பாடசாலை என்ற ஓடத்தை சரியான வழியில் இயங்கிச் செல்லக் கூடிய ஆற்றல் அதிபரி டத்தில் காணப்பட வேண்டும். பல பாடசா லைகளில் பழைய மாணவர் சங்கம் பேருதவி புரிந்து வருகின்றது.

இணைப்பாட விதான செயற்பாட்டில் ஆசிரியரின் பங்கு மிக இன்றி யமையாதது ஆகும். இவ்விடத்தில் ஆசிரியர் அர்ப்பணிப்பு மனப்பாங்குடன் செயற்பட வேண்டும் இவ்வாறாக ஆசிரியர் களைப் புறங்

கூறுவோரும் உள்ர். எனினும் மனந்தளராது அவர் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். அதற்கு தேவையான பயிற்சிகளை ஒழுங்கு செய்து கொடுக்க வேண்டி யது கல்வித் திணைக்களத்தின் தவிர்க்க முடியாத கடமை யாகும். ஏனெனில் பொதுவாக பாடசா லைகளில் குறித்த துறையில் போதிய பயிற்சி பெறாதவர்களும் வேநு பாடத்து றையைச் சேர்ந்த ஆசிரியர்களுமே கூடுத லான பாடசாலைகளில் இணைப்பாட விதான செயற்பாட்டை செயற்படுத்துகின்றனர். எனவே கல்வித் திணைக்களம் இவ்விடயத்தில் கூடிய அக்கறை எடுக்கவேண்டும்.

பாடசாலைகளில் சில ஆசிரியர்கள் தமக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையைத் தவிர மற்றவற்றில் கருசனை கொள்ள மாட்டார்கள். அதேவேளை இணைப் பாட விதான செயற்பாடு களில் பங்களிக் கவோ, ஒத்துழைக்கவோ, விரும்புவதில்லை. இன்நிலை பல பாடசாலைகளில் காணப் படுகின்றது. இதனால் இணைப்பாட விதான செயற்பாட்டு ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் மனத் தாங்கல் ஏற்படுகின்றது. ஆனால் இந் நிலை தற்போதைய ஆசிரியர் சேவைத் திட்டத்தின் மூலம் மாறக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஆசிரியரின் பங்க ளிப்பு, மேலதிக நேரவேலை, அவர் தமது கடமையைச் செய்ததற்காக கிடைத்த விருது/ பரிசு போன்ற விபரங்கள் படி தாண்டலுக்கு உதவக் கூடியனவாக காணப்படுகின்றன. இத்திட்டத்தினால் பல ஆசிரியர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

அடுத்து இணைப்பாட விதான செயற்பாட்டுக்கு மாணவர்களது ஒத்துழைப்பு மிக இன்றியமையாதது ஆகும். கல்வியின் பயனைப் பெற விளையும் எவரும் அதில் முளுமையான அர்ப்பணத்துடன் ஈடுபட வேண்டும். மாண வர்கள் இணைப்பாட விதான செயற்பாடு களில் நாட்டமுள்ளவர்களாக காணப் பட்டாலும் மாணவர்கள் அதில் நிறைவாக ஈடுபடக் கூடிய புறவயக் காரணிகள் தடுக் கின்றன. பெரும்பாலான மாணவாகள் பகுதி நேர தொழில் புரிபவராகவும் காணப்படுகின்றனர். அதாவது விவசாய அல்லது குடிசைக் கைத்தொழிலில் பெற்றோருக்கு உதவி செய்வார்கள். அது மட்டுமன்றி ஏனையோர் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்லுதலும் மாயவா களை இணைப்பாட விதான செயற் பாட்டிலிருந்து அந்நியப்பட வைக்கின்றது.

பாடசாலை நேர சூசி யில் இணைப்பாட விதான செயற்பாட்டுக்கு இடம ளிப்பதுடன் இணைப்பாட விதான ஈடுபாட் டிற்காக மாணவர்களுக்கு வழுங்கப்படும் சான்றிதழ்களுக்கு பல்கலைக் கழக அனு மதியோ அல்லது தொழில் வாய்ப்புக்களிலோ குறிப்பிட தக்க மதிப்பைவழங்குவதன் மூலம் மாண வர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்ய முடியும்.

மாணவர்களின் போசா க்கு குறைபாடும் மாணவாகள் இணைப பாட விதான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு தடையாக அமைந்து விடுகின்றது. எனவே மாணவருக்கான இலவச போசாக்கு உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவ தோடு அதில் இடம் பெறும் ஊழல்களை தவிர்க போதிய கண்காணிப்பு நடவடிக்கை களையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

சில பாடசாலைகளில் குறிப்பிட்ட மாணவாகளே இணைப்பாட விதான செயற்பாட்டில் பங்கு பற்ற அனுமதிக் கப்படுகின்றனா். இது ஏனைய மாணவாகளின் ஆற்றல்களை வெளிப்படுத்த தடையாக அமைந்துள்ளது. எனவே அத்தகய ஆசிரியா் கள் இத்தகைய மனப்போக்கை மாற்றி பாடசாலைகளில் ஆர்வமுடைய எல்லா மாண வா்களுக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய வகை யில் மாணவாகளை அனுமதிக்க வேண்டும்.

இணைப்பாட விதான செயற்பாடுகள் யாவும் சகல ஆசிரியா் களுக்கும் பகிா்ந்து வழங்கப்பட வேண்டும். ஒவ்வோா் ஆசிரியருக்கும் இச் செயற் பாட்டிற்காக வழங்கும் நேரம் போதுமா னதாக இருக்க வேண்டும். இது மட்டு மன்றி இதில் ஈடுபடுவதன் ஊடாக பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக ஆசிரியா் சேவையாற்ற வேண்டி உள்ள தாலும் இதனால் அவரது சொந்தக் கடமைகள் புறக்கணிக்கப் படுவதால் ஏற்படும் விளைவை ஓரளவுக்காவது நிவா்த்தி செய்யும் செயற்பாடடில் ஈடுபடும் ஆசிரியருக்கு ஊக்குவிப்பு படியும் மேலதிக நேரப்படியும் வழங்க வேண்டியது அவசியமாகும். இணைப் பாட விதான செயற்பாடுகளை சிறப்புற மேற் கொள்ள பெற்றோா் பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவா் சங்கம், என்பவற்றின் பங்களிப்பு மிக அவசியமானதாகும். தனது பிள்ளையின் கல்வி முன்னேற்றத்தில் பள்ளிக் கூடத்திற்கு தான் வழங்கக் கூடிய ஒத்து ழைப்பு அனைத்தையும் வழங்கவேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். இணைப்பாட விதான செயற்பாட்டிற்கு தேவை யான மேலதிக நிதியை வழங்குவதில் இவ் அமைப்பு முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

இணைப்பாட விதான போட்டிகளில் பங்குபற்றுவதற்கான உடை கள், போக்குவரத்து ஒழுங்கு, அவற்றுக் குத் தேவையான உபகரயங்களை வாங்குதல் என்ற வகையில் மேற்படி அமைப்புக்களின் உதவி மிக அவசியமாகின்றது. சில பாடசா லைகளில் வெளியிலிருந்து அழைககப்பட்ட பயிற்சி ஆளாகள் குறிப்பிட்ட செயற் பாடுகளின் போது பயிற்சி அளிக்கின்றனா். அவா்களுக்கு வேண்டிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் மேற்படி அமைப்புக்களின் உதவி அவசியமானது ஆகும்.

எனவே இவற்றின் செயற் பாடுகளில் அதிபரின் பங்களிப்பு சிறப்பிடம் பெறுகின்றது. ஏனைய உற்பத்தி காரணி களை ஒருங்கிணைக்கும் முயற்சியாளா் (முகாமையாளா்) என்ற ஒரு பாத்திரத்தை அதிபா் வகிக்க வேண்டியவராக இருக்கி ன்றாா்.

இவ் வகையில் இணைப பாட விதான செயற்பாட்டு நடைமுறையை யும் அதில் ஏற்படும் சிக்கல்களையும் அதிலி ருந்து விடுபடுவதற்கான வழிமுறை யையும் இனம் காணமுடியும்.

முற்றும்.

# தகவல் தொடர்பு செய்முறையும் அதன் பரிணாம வளர்ச்சியும். ஒரு நோக்கு.

**திரு. N.S. தவநடராஜா**
**ஆசிரியர்,**

**யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்,**
**கோப்பாய்.**

இன்று வளர்ந்து வருகின்ற விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் தகவல் தொடர்பு என்பது ஓர் இன்றியமையாத செயற் பாடாகக் கருதிக் கொள்ளப்படுகின்றது. இன்று நாடுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுகின்ற அல்லது ஒன் றில் ஒன்று தங்கிக்காணப்படும் நிலைமை வெகுவாகக் காணப்படுகின்றது. இத்தகைய வர்த்தக உலகில் தகவல் தொடர்பு என்பது மிகமிக இன்றியமையாத ஒரு அம்சமாக கருதிக் கொள்ளப்படுகிறது. ஆரம்ப காலத்தில் மிக குறைவான வசதிகளுள் தோற்றம் பெற்ற தகவல் தொடர்பாடல் செய்முறையானது இன்று ஒரு உள்ளங்கைக்குள் உலகைக் கொண்டு வந்து நிறுத்தக் கூடிய அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்றால் அதனை மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடி யாது. இத்தகைய தகவல் தொடர்பு செய் முறையின் வளர்ச்சியும் அவ்வளர்ச்சி ஏற்பாட் டிற்கான காரணங்களையும் இனி நோக்கு வோம்.

தொடர்பாடல் என்பது ஒரு வரால் அல்லது ஒரு குழுவினரால் அல்லது ஒரு கட்சியினரால் இன்னொருவருக்கு அல்லது சம்மந்தப்பட்ட தொடர்புடையவர் களுக்கு செய்திகள், தகவல்கள், ஆலோச னைகள், உணர்ச்சிகள், என்பவற்றை பேச்சு மூலம் அலலது எழுத்து மூலம் அல்லது சைகை மூலம் பரிமாறிக் கொள்ளகின்ற செயற்பாட்டினைக் குறிக்கின்றது. இத்தகைய தொடர்பாடல் செய்முறையானது ஆரம்ப காலத்தில் மிகமிக குறைவான வசதிகளுடன் மேற் கொள்ளப்பட்டதை கண்டு கொள்ள முடிகின்றது. ஆட்களின் ஊடாக தகவல் களைப் பரிமாறல், புறாக்களைக் கொண்டு தூது அனுப்பல், அம்புகளால் கடிதங்களை எய்துவிடல், முரசு அறைதல், ஒலியினை எழுப்புதல், தூது மூலம் செய்தியினை அனுப் புதல், போன்ற முறைகள் ஊடாக செய்யப் பட்டது. இத்தகைய தொடர்பாடல்கள் உள் நாட்டிலோ அல்லது வெளிநாட்டுடனோ மேற் கொள்ளப்பட்டன. ஆனால் காலம் சிறிது செல்லச் செல்ல சர்வதேச ரீதியில் பொரு ளாதாரம் வளாச்சி அடையத்தொடங்கியது. விவசாயத் துறையின் நவீன அபிவிருத்தி களை மேற்பொண்டிருந்தனர். இத்தகய கைத்தொழில் தொழில்நுட்ப, தொழில் நுணுக்க வளர்ச்சியும் வர்த்தக ரீதியில் நாடுகளுக்கு இடையேயான தொடர் புகள் அதிகரிப்பும் தகவல் தொடர்பு செய்முறைத் தொழில்நுட்பத்தில் ஒரு வளர்ச்சியை ஏற்படுத் தத் தொடங்கியது. இதன் காரணமாக நாடுகள் இடையே கடித மூலமான தொடர் புகள் வலுப்பெறத் தொடங்கின. 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்

தொழில் புரட்சி அதனைத் தொடர்ந்து நாடுகளில் ஏற்பட்ட தொழினுட்ப, தொழில்நுணுக்க முன்னேற் றங்களும் சர்வதேச வர்த்தகத்தை (International trade) நாடுகளுக்கிடையே தூண்டிவிட்டன. இதன் காரணமாக சர்வ தேச வர்த்தகம் உலக நாடுகள் எங்கும் பரவத் தொடங்கியது. இச் சர்வதேச வர்த்தகச் செயற்பாடுகளை மிகவும் திறமையாக மேற் கொள்ளுவதற்கு தகவல் தொடர்பாடலே அறி முகம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அது மட்டுமன்றி கல்வித்துறையின் வளர்ச்சி கருதி மக்கள் வெளிநாடுகளில் கல்விகற்றல் தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக தகவல் தொடர்பு செய்முறை துரித கதியில் படிமுறைவளர்ச்சியடையத் தொடங் கியது.

இத்தகய படிமுறை வளர்ச்சியின் பயனாகவே தொலைபேசிப் பாவனை சிறப்புப் பெற்று அமைந்தது. ஆரம்ப காலத்தில் கேபிள்கள் மூலம் தகவல்கள், கருத்துக்கள் போன்றன உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி பரிமா றப்பட்டன. ஆனால் பிற்பட்ட காலங்களில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்கள் ஊடாக வானலை ரீதியான (International Network System) திட்டத்துக்கு அமைவாக புதியரகத் தொடர்பாடல் சாதனங்கள் அறி முகம் செய்யப்பட்டன. அவ்வகையில்

1) பதிலளிக்கும் இயந்திரங்கள் பொருத் தப்பட்ட தொலைபேசிகள்.
   (Answer ing machine telephones)
2) பதிலைப்பதிவு செய்யும் இயந்திர ங்கள் பொருத்தப்பட்ட தொலை பேசிகள்
   (Answer Recordingmachine telephones)
3) பேபோன் அட்டையின் உதவியுட னான தொலைபேசிகள்
   (Pay phones)
4) செலுலர் தொலைபேசிகள் [Cellular phones] (வலைப் பின்னல் செய்முறைகளுக்கு ஏற்ப கேபிள் தொடர்பு இன்றி)
5) வானலைகள் மூலம் செய்திகளை பரிமாற உதவும் தொலைபேசிகள் போன்றவற்றை செய்துகொள்ள முடிகின்றது.

அத்துடன் இவை மட்டுமன்றி இன்று முகாமைத்துவம் என்பது சர்வதேச ரீதி யாக சிறப்புப் பெற்று வளர்ச்சியடைந்தது மட்டு மன்றி வாத்தக நிலையங்களின் வளர்ச்சியும் உச்ச நிலைமையை அடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இதன் அடிப்ப டையில் உள்ளகத் தொடர்பாடல் தொலை பேசி (Intercom) வசதிகளும் இன்று சிறப்புப் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளமை குறிப்பிட்டு கூறக்கூடியது ஒன்றாகும்.

இன்று சர்வதேச ரீதியில் மிலேனிய உலகில் மேலும் பல தொடர் பாடல் சாதனங்கள் அறிமுகம் செய்யப்பட் டுள்ளன. இதுவரை தகவல்களை வாய்மொழி மூலம் பரிமாறக்கூடிய நவீன சாதனங்கள் பற்றி அறிந்தோம். அத்துடன் தகவல்களை வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமா கவும் கிடைக்கக் கூடிய பல்வேறுபட்ட சாத னங்கள் அறிமுகம் செய்யப்பட்டு நடை முறைப்படுத்தப் படுகின்றன. அவ்வகையில் (Telax) பக்ஸ் (Fax) வசதிகள் இன்ரநெற் (Internet) வசதிகளைக் கூறிக்கொள்ள முடியும். செய்திகளை குறியீட்டு எழுத்து வடி வில் பரிமாறிக்கொள்ளக் கூடிய சாதனமாக இவ்ரெலக்ஸ் (Telex) காணப்படுகின்றது. அதுபோன்றே கடிதங்கள், ஆவணங்கள், வரைபுகள் என்பவற்றை வடிவத்தன்மை மாறாது புகைப்படப் (Photocopies) பிரதி

களாக வரைவு செய்துகொள்ளக் கூடிய வகையில் வானலைகள் மூலமான தொடர் புகள் ஊடாக இவ் பக்ஸ்(Fax) இயந்திர ங்கள் காணப்படுகின்றன. இவ் இயந்திரங்கள் ஊடாக தொடர்பாடல் மூலம் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் இலகுவாக துரிதகதியில் மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒன்றாகும்.

இன்று நவீன முறையில் மிக விரைவாக மக்களிடம் தகவல் பரிமாற்றம் செய்ய புதிய பாதையை வகுத்துக் கொடுக்கும் வகையில் பலரா லும் பேசப்படும் தகவல் தொடர்பு பரிமாற்றச் செய்முறை இன்ரநெற்( Interenet) ஆனது 1960களில் அமெரிக்க இராணுவத் துறையில் அறிமுகம் செய்யப்பட்ட கணணிப் பொறிக ளின் ஊடான வலைப் பின்னல் செய்முறை யான இவ் இன்ரநெற் (Interenet) 1992ல் உலகளாவிய ரீதியில் புதிய பரிமாணம் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளது.

உலகில் எந்த ஒரு மூலை முடுக்கிலும் நடைபெறும் நிகழ்வுகள் செய்தி வடிவில் மறுகணமே சர்வதேசம் முழுவதும் சென்றடையக் கூடிய தன்மையினை இவ் இன்ரநெற்றின் ஊடாக இன்று நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது என்று கூறிக் கொள்ள முடியும். குறிப்பாக கல்வி, மருத் துவம், பொறியியல், போன்ற எண்ணிலட ங்காத பயன்பாடுகளை இன்ரநெற் ஆனது தன்ன கத்தே கொண்டுள்ளது. இவ் இன்ரநெற் வலைப்பின்னல்களுக்கு உட்பட்டதாகத் தான் மின்அணுத் தகவல் பரிமாற்றம் (E. mail) தகவல் தொடர்பு, வலைப்பின்னல் தொலை பேசி ஆகியவை தொழிற்படுகின்றன. இன்று பெருமளவிற்கு அபிவிருத்தி அடைந்த நாடு களே மேற் கூறப்பட்ட தகவல் தொடர்பு செய் முறை தொழில்நுட்பத்தில் முன்னணி வகுப் பதை கண்களினூடாக காணமுடிகின்றது. அரசியல், பொருளாதார, வர்த்தக செயற் பாடுகளில் இந்நாடுகள் இத்தகைய தொழில் நுட்பத்தை பிரயோகிப்பதன் மூலம் வெற்றி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜப்பான், அவுஸ் ரேலியா, ஜேர்மனி, பிரான்சு, சோவியத் ரசியா, பெரிய பிரித்தானியா போன்ற நாடுகளும் இத் தகவல் தொடர்பு தொழில் நுட்ப வளர்ச்சியில் முன்னணி வகுப்பதை காணமுடிகின்றது.

அதேவேளை அபிவி ருத்தி அடைந்து வரும் நாடுகளும் இன்று ஓரளவிற்கு தகவல் தொடர்பு செய்முறைத் தொழில்நுட்பத்தில் முன்னேற்றங் கண்டுள் ளன. புதிய கைத்தொழில் பரவலாகி வரும் நாடுகள் (New Industrial countries) என்று தரப்படும் சிங்கப்பூர், தாய்வான், தென் கொரியா, கொங்கொங் போன்ற நாடுகளிலும் தென்னாசிய வலையத்துள் இந்தியாவிலும் மேற்தரப்பட் தகவல் தொடர்பு வளர்ச்சி பெற்று காணப்படுவதாக குறிப்பிட்டுக் கூற முடியும். சுருக்கமாகக் கூறின் மேற்கூறப்பட்ட தகவல் தொடர்பு முறையின் வளாச்சியானது என்றென்றும் ஆக்கப்பாதையில் மட்டும் வேரூன்றி செல்லுமாக இருப்பின் அது போற் றுதற்குரிய தொன்றாகவே அமையுமென்றால் அது மிகையாகாது.

# கேத்(ந்)திர கணிதம்

த. குமாரதாசன்
(ஆசிரியர்)

இம் மலரின் இதழ்களில் கணித வாசனையும் வீச வேண்டும் என்பது அதிபரது பேரவா. இதனால் இப்பணி எனக்குரியதானது. அனுபவக்குறைவு பயமுறுத்தியது. ஆனாலும் எனக்கு அறிவூட்டிய ஆசான்களை மனக்கண்ணில் நிலைநிறுத்தினேன் இக்கட்டுரைக் குழந்தை பிறந்தது. இது ஆணா அல்லது பெண்ணா என்பதல்ல பிரச்சினை. ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

கணிதம் ஒரு வாழ்வியற்கலை; விஞ்ஞானத்தை விளங்க வைக்கும் மொழி, வாழ்வியற்பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு கருவி. ஏனைய பாடங்களைக் கற்பதற்கும் அதன் விருத்திக்கும் உறுதுணையானது. நீண்ட வரலாற்றைக் கொண்டது. இவ்விஞ்ஞான மொழியாகிய கணிதத்தின் கேந்திரமாய் அமைவது இக்கேத்திர கணிதமாகும்.

### கேத்திரகணித வரலாறு.

"கேத்திர கணிதம் மனிதனை உண்மையை நோக்கிக் கூட்டிச் செல்வதோடு காட்சியை உயிரோட்டமாகவும் அமைக்கிறது" என கி.மு. 380 களில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் அறிஞர் கூறினார். இதிலிருந்தே இதன் தொன்மை விளங்கும். எகிப்து, கிரேக்கம், போன்ற நாடுகளில் வாழ்ந்த கணிதவியலாளர்களால் இது வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. பிரதானமான கட்டடங்கள், கலை மாதிரிகள் அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டது. இன்று வரை முற்றாக அழிந்து போகாமல் இருக்கம் உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான எகிப்திய பிரமிட்டுக்கள் கேத்திர கணித பயன்பாட்டுக்கு மிகப் பொருத்தமான ஆதாரமாகும். பின்னர் கி.பி 300 களில் வாழ்ந்த 'யூக்கிலிட்' போன்ற அறிஞர்களால் மேலும் மெருகூட்டப்பட்டது.

### கேத்திர கணிதத்தின் பண்பு.

தரப்பட்ட தரவுகளுக்கேற்ப வெளிப்படை உண்மைகளைப் பயன்படுத்தித் தர்க்கரீதியான முடிவுக்கு வருவதே இதன் முக்கிய பண்பாகும்.

**அன்றாட வாழ்வியல் கேத்திர கணிதம்.**

கட்டடத் தொழிலாளர், தச்சுத் தொழிலாளர் ஆகியோர் தமது தொழிலில் கேத்திர கணித அம்சங்களைப் பயன்படுத்துவதைக் காணலாம்.விளையாட்டுத்துறையிலும் இதன் பயன்பாடு அதிகம். சுவடு வரைதல், பரிதி வட்டம் வீசுதல் போன்ற பலவிடயங்களில் இவற்றை அவதானிக்கலாம்.

**மாணவர்களும் கேத்திரகணிதமும்.**


யாழ்ப்பாண மாணவர்கள் கணிதத் துறையில் முன்னணியில் திகழ்பவர்கள் என்பது பொதுவான அபிப்பிராயம். இது உண்மையும் கூட ஆனாலும் இங்கும் பல மாணவர்கள் கணிதம் பற்றிய அடிப்படை அறிவே இல்லாமல் திண்டாடுகின்றார்கள் என்பது வருத்தத்தோடு ஒப்புக்கொள்ளப்பட வேண்டியவிடயம் ஆதலால் கேத்திர கணித அறிவு பற்றி சொல்லவே தேயைில்லை.

கேத்திர கணித பாடத்தைக் கண்டு பின்வாங்கும் மாணவர்களே நாம் அடிக்கடி சந்திக்கின்றோம். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம் ஆனாலும் மாணவாகள் மத்தியில் காணப்டும் தன்நம்பிக்கையீனம் மயக்கம் (தெளிவின்மை) என்பன பிரதான காரணங்களாகக் கூறலாம். 'கஸ்ரமான பாடம்' என்று முத்திரை குத்திவிட்டுப் புறந்தள்ளி விடுவார்கள். ஆனாலும் இதுவே சுவையானதும் சுலபமானதுமுான பகுதியாகும்.

**கேத்திரகணித அறிவைப்பெற மாணவர்களுக்கு வழி என்ன?**

தள கேத்திரகணிதம், திண்ம கேத்திர கணிதம் என இருவகைப்பட்டாலும் முதலாவது விடயமே க. பொ. த. (சாதாரணம்) வரை முன்னெடுக்கப்படுகிறது. புதிய பாடத்திட்டத்தை பாசீலனை செய்தால், ஆரம்பப்பிரிவுகளிலேயே கேத்திரகணித வடிவங்கள் அறிமுகமானாலும் எண்ணக்கரு தரம் ஆறில் தளஉருவங்களில் ஆரம்பித்து முக்கோணி, வட்டம், வட்டமையம் வரை செல்கிறது. தரம் ஏழில் மேலும் கோணங்கள், சமாந்தரக்கோடுகள் எனும் பகுதியை உள்வாங்குகிறது. தரம் எட்டில் புள்ளிக் கோணங்கள், நாண், விட்டம் பற்றி விதந்துரைக்கிறது. தரம் ஒன்பதில் சமாந்தரக்கோடுகள் தொடர்பான கோணங்களை இனங்காண்கிறது. தரம் பத்தில் தான் மாணவாகள் தேற்றம் என்னும் சொற்பிரயோகத்தை அறிகிறார்கள். தரம் பதினொன்று வரை அது வளர்ந்து செல்கிறது ஆதலால் இதுபற்றிய அறிவைப் பெறவிழையும் மாணவர்கள் தரம் ஆறிலேயே சுதாகரித்துக் கொள்வது நல்லது. தரம் 6 - 9 வரையுள்ள எண்ணக்கருக்களில் தெளிவு பெற்றால் தரம் 10, 11 களிலுள்ள தேற்றங்கள் உங்களைப் பயமுறுத்தாது. மேலும் சிலருக்குள்ள சிக்கல்:- எண்ணக்கள் பற்றிய போதிய அறிவிருந்தும் நிறுவல் ஒன்றுக்கு படிமுறைகளுடன் கூடிய விடைக்காண முடியாமை.

உதாரணமாக, A B C D ஒரு இணைகரம் அதில் DF= EB எனின் AECF ஒரு இணைகரமெனக் காட்டுக என்பது வினாவாயின்




அடுத்தகட்டமாக இணைகரமாவதற்கு நாற்பக்கலொன்று கொள்ளவேண்டிய திறன் அவசியம். இந்நிபந்தனைகளின் தரவுகளுக்குப் பொருத்தமானவற்றைத் தோ்ந்தெடுக்க வேண்டும். அதன் பிறகு விடை எழுத முயல வேண்டும். இங்கு சாத்தியமான நிபந்தனை "ஒரு சோடி எதிர்ப் பக்கங்கள் சமனும் சமாந்தரமுமான நாற்பக்கல்" என்பதாகும். ஆகவே இங்கு சிந்திப்பதற்குக் கூடிய நேரமும் விடையெழுதக் குறைந்த நேரமும் தேவை. இப்படியாகப் பல்வேறு உதாரணம் காட்டலாம். கேத்திரகணித நிறுவல் போலவே கேத்திரகணித அமைப்பு என்னும் பகுதியும் பாடத்திட்டத்தில் கூட வருவதை மாணவர்கள் கவனத்திலிருப்பது நன்று.

கேத்திரகணிதத்தில் மாணவரின் ஈடுபாட்டை அதிகரிக்கப் புதிய பாடத்திட்டத்தில் (தரம் 8, தரம் 9) தெசலாக்கம் என்னும் கலையுணர்ச்சி மிக்க அலகும் புகுத்தப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் அடிப்படை எண்ணக்கரு பற்றிய தெளிவான அறிவு, அழகுணர்ச்சி, பயிற்சி என்பன கேத்திரகணிதத்தை இலகுவாக்கும்.

"நீங்கள் நேசிக்கும் வரை கேத்திர கணிதம் உங்கள் காதலன் அல்லது காதலி வெறுத்தால் கனவிலும் வந்து மிரட்டும் விரோதி".

பிறர் நம்ப நீ நட
யாரையும் நம்பி நடவாதே.

பணமுள்ளவரை
சொந்தங்கள் ஆயிரம் அது
பறந்து விட்டால்
துன்பங்கள் ஆயிரம்.

# ஈழத்தில் விநாயகர் வழிபாடு.

எஸ். உதயபாலன் B.A. (Hons)

இந்தியாவில் இமயம் முதல் குமரி வரை சிறப்புடன் பரந்து காணப்படும் விநாயக வழிபாடு கடல் கடந்து இலங்கை தொடக்கம் ஜப்பான் வரையுள்ள தெற்காசியா நாடுகளிலும் காலப்பபோக்கில் பரவியது. ஈழத்தில் விநாயகர் வழிபாடு தனித்த வழிபாடாக இன்றிச் சைவத்தின் ஒன்றிணைந்த வழி பாடாகத் திகழ்கின்றது. இருப்பினும் ஏனைய வழிபாட்டு நெறிகளை விடச்சிறப் புற்று விளங்குவதை ஊர் தோறும் பரவலாகக் காணப்படும் விநாயகர் ஆல யங்கள் எடுத்தியம்புகின்றன.

இலங்கையில் இவ்வழி பாடு பற்றி அறிவதற்கு இலக்கியம், தொல்லியல், சின்னங்கள் முதலிய பல மூலங்கள் உள்ளன. இவைகூடப் பல முற்றுமுழுவதாகக் கிடைக்கவில்லை. எனினும் பௌத்தம் இங்கு பரவுதற்கு முன்னரேயே விநாயகவழிபாடு நிலவியி ருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இலங்கையில் விநாயக வணக்கம் கிறிஸ் துவிற்கு முற்பட்ட காலந் தொடக்கம் நிலவிவருதலைப் பிராமிச்சாசனங்களா லும் மிகுந்தலையிலுள்ள கந்தக சேதிய விகாரையிலுள்ள சிற்பங்களாலும் அறியப் படுகின்றது. இங்கு கிடைக்கப்பட்ட சிற்பங் களில் ஒரு தந்தத்துடன் உட்காந் திருக்கும் யானைமுகத் தெய்வத்தை இரு மருங்கிலும் கணங்கள் செபிப்பது போன்ற ஒரு சிற்பத்தை "பரணவிதான" எனும் அறிஞர் பிள்ளையார் வழிபாட்டின் முன் னோடி வடிவம் எனக் கருதுவார். இவ்வடி வத்தின் துதிக்கை இடப்பக்கமாக வளை ந்து வக்கிரதுண்ட விநாயகரை நினைவு படுத்துகின்னறது. எவ்வாறாயினும் இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய கண பதி சிற்பங்கள் இவையே ஆகும். இவ் வகையில் தனிச் சிறப்புள்ளவையாய் விளங்கும் இவற்றின் காலம் பற்றி ஆரா ய்ந்த பரணவிதான, எல்லவில என்பவரும் கி. மு. 2 தொடக்கம் கி.பி. 1 வரையுள்ள காலத்தவை எனக் கூறியுள்ளனர். மேலும், இச்சிற்பங்கள் பௌத்தவழிபாட்டு இடங் களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையை நோக்கும் போது இவ்வழிபாடு அக்காலத் திலோ அல்லது அதற்கு முன்போ பௌத்

தா் மத்தியில் இன்று போல நிலவியி ருக்கலாம் என்பதனை எடுத்துக் காட்டு கின்றது.

எனவே, கி.பி முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கை பௌத்த தூபிகளில் இடம்பெறுகின்ற இத்தெய்வம் இந்தமத வழிபாட்டினை உடைய தமிழ் மக்கள் மத்தியில் கூடிய செல்வாக்கைச் செலுத்தியிருக்கலாம் என் பதில் ஐயமில்லை. கதிா்காமத்திலிருந்து திஸ்ஸாமஹ ஈராம வரையுள்ள பிரதே சங்களில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளின் போது மிகப்பழமை வாய்ந்த நான்கு பிள்ளையாா் விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கந்தரோடை யில் இருந்து வெண்கலத்தால் ஆன கணபதி சிற்பம் ஒன்றும் கண்டெடுக்கப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இச் சிற்ப அமைதியைப் பொறுத்த மட்டில் கிறிஸ்து சகாப்த முதல் இரு ஆண்டு களாக கொள்ளமுடியும்.

தமிழ் நாட்டில் கூட இவ் வளவு புராதனமான விநாயகா் சிற்பங்கள் கண்டு பிடிக்கப்பட்டமை இங்கு கவனிக் கத்தக்கது ஆகும். இவற்றைக் கொண்டு பாா்க்கின்ற போது இவ்வழிபாடு தமிழகத் தினூடாக இல்லாமல் பௌத்த சமயத் தினூட இங்கு நிலவியிருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

அநுராதபுர காலத்திலே இந்துக்களாலும் பௌத்தா்களாலும் தொடா்ந்தும் விநாயகா்வழிபாடு கைக் கொள்ளப்பட்டு வந்தது. அநுராதபுரத்தி லுள்ள வெள்ளரசு மரத்தின் வடபால் பௌத்தா்கள் வழிபட்டு வரும் பிள்ளை யாா் விக்கிரகம் உண்டு. இதன் காலம் தெளிவில்லை. புராதன அநுராதபுரத்திற்கு அருகிலுள்ள பசவாக் குளத்திற்கு அண் மையில் விநாயகருக்குரிய ஆலயம் ஒன்று இருந்தது. நுவரலீவா குளக்கரையில் பழைய பிள்ளையாா் கோவில் ஒன்று உண்டு. மேற்படி ஈழத்தில் மகாயான பௌத்தத்தின் வளா்ச்சி இந்து சமயத்தின் வளா்ச்சி என்பன பிள்ளையாா் வழிபாடு பரவக்காரணம் எனலாம்.

கி. பி. 10ம் நூற்றாண்டின் முடிவில் இலங்கையில் ஏற்பட்ட சோழப் பேரரசின் அரசியல் தலையீடு ஏற்கனவே இங்கு நிலவிய இந்து சமயம் மேலும் எழுச்சிபெற உதவியது. இலங்கையில் சோழரின் புதிய தலைநகராகிய பொலநறு வையில் பிள்ளையாா் வழிபாடு நிலவி யதற்கு கல்லினாலும் வெண்கலத்தி னாலும் செய்த உருவங்கள் கிடைத்துள் ளமையை உதாரணமாக்க் கூறலாம். இவற்றுள் இன்று கொழும்பு நூதன சாலையில் உள்ள சிறிய வெண்கலப் பிள்ளையாா் சிலை குறிப்பிடத்தக்கது. அடுத்ததாகப் பொலநறுவையில் கண்டு பிடிக்கப்பட்ட அநுராதபுரத் தொல்பொருட் காட்சி அகத்தில் வைக்கப்பட்டுள்ள நோ்த் தியா விநாயகா் திருவுருவம் குறிப்பிடத் தக்கது. இவ்விக்கிரகம் தனியாக 23 அங்குல உயரமுடையது. பிள்ளையாரின் இடது கையில் மாங்கனி உள்ளது. மேலும், இது பொலநறுவையில் சோழா்

களால் அமைக்கப்பட்ட சிவன் கோவிலில் வைத்து வழிபட்ட உற்சவ மூர்த்திகளில் ஒன்றாக இருக்கலாம். ஏனெனில், இதன் கீழ்ப்பீடத்தில் இதனைத் தூக்கிச் செல்வ தற்கான துவாரங்கள் உள்ளன.

மேலும் சில மரபுகளின் படி கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கையின் கிழக் கில் சம்மாந்துறையிலுள்ள காட்டுப் பகுதியில் பிள்ளையார் வழிபாட்டுத் தலம் ஒன்று இருந்தமை கூறப்படுகிறது. இக்காடு பிள்ளையார் முனைக்காடு என அழைக் கப்படலாயிற்று. இப்பிள்ளையார் முனைக் காடு பலவேறு வரலாற்றுக் கட்டங்களை கடந்ததாகக் கூறப்படுகிறது. மற்றும் சீர்பாத வரன்முறைக் கல்வெட்டுக்கள் கூறும் சம்பவங்கள் இங்கு கவனிக் கத்தக்கது. யாழ்ப்பாண வரலாற்றுடன் சம்பந்தப்பட் உக்கிர சிங்கனுக்கும் மருதப்புரவீக வல்லிக்கும் பிறந்த வால சிங்கன் எனும் இளவரசன் கண்டியைக் கைப்பற்றி ஆளும் போது ஒரு சோழநாடு சென்று இளவரசி சீர்பாததேவியைக் திருமணம் முடித்துக் கண்டி ஏகினான். பின் சீர்பாததேவி தன் கணவன் வாலசிங்கனுடன் சேரும்பொருட்டு தன் குடிகள், சிலருடனும் பணியாட்களுடனும் பிரயாணம் செய்யும் போது சித்தன் என்பான் ஓடத்தில் திருகோணமலை கடலைக் கடந்ததும் மேலே செல்லாது ஓடம் நின்று விடவும், சித்தன் ஒடத்தின் கீழ்ச்சென்று பார்த்தபோது பிள்ளையார் திருவுருவம் இருக்கக் கண்டான். அதனை சீர்பாத தேவி ஏற்றுவித்து வந்தபோது படகு சம்மாந்துறையை அடைந்தது. அரசியும் பிள்ளையாருக்கு அங்கு கோயில் எடுத்துப் பிள்ளையாரைப் பிர திஸ்டை செய்தாள் என கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

மேலும், பிற்காலச் சோழர் ஆட்சியில் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் பிள்ளையார் வழிபாடு சிறப்புற்று இருந்த மைக்கு ஆதாரங்கள் உள்ளன. பிற் காலச் சோழ மன்னரில் ஒருவரான முத லாம் குலோத்துங்கனின் தளபதியான கருணாகரத் தொண்டமானால் அமைக் கப்பட்டதே உரும்பிராயிலுள்ள கருணா கரப்பிள்ளையார் கோவில் ஆகும். தற்போது யாழ் நூதனசாலையில் வைக்க ப்பட்டுள்ள நல்லூரில் கிடைத்துள்ள விநாயகர் கற்சிலை பெரும்பாலும் சோழப் பேரரசு காலத்திற்குச் சற்றுப்பிந்தியது எனக் கூறப்படுகிறது. இது நல்லூரைச் சேர்ந்த சட்டநாதர் ஆலயத்தைச் சேர்ந்த தாகும். இவ்வாறு கி. பி. 13ம் நூற்றா ண்டில் எழுச்சி பெற்ற யாழ்ப்பாண இராட் சிய காலத்தில் இங்கு விநாயகர் வழிபாடு பரவலாகக் காணப்பட்டது என்பதை அக்காலத்தில் அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயங்கள் பல எடுத்துக் காட்டுகின்றன. ஆரியச்சக்கரவர்த்திகள் அமைத்த காவல் தெய்வங்களில் விநாயகர் ஆலயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலும், ஆரியச் சக்கர வர்த்திகள் நல்லூர் இராஜஸ்தானியை நிறுவ முன்னும் நான்கு கோவிலை நிறுவினான் என்று யாழ்ப்பாண வைபவ

மாலை கூறுகின்றது. கிழக்குத் திசைக்குக் காவலாக அமைக்கப்பட்டதே வெயிலுகந்தப்பிள்ளையார் ஆலயம் ஆகும். பரராசசேகரன் என்னும் மன்னனின் மைத்துனனான அரச கேசரி என்பவனால் அரசகேசரிப்பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட்டது எனக் கூறப்படகிறது. இவ்வாலயம் பற்றி ஓர் கர்ண பரம்பரைக் கதையும் கூறப்படுகிறது. ஆரியச் சக்கரவர்த்தியின் மந்திரியாக அரசகேசரி விளங்கிய போது இராஜவீதியில் ஒரு விசேட தீர்த்தம் இருப்பதாகக் கனவு கண்டார். பின் அத்தீர்த்தத்தைக் கண்டு பிடித்து அவ்விடத்தில் அமைக்கப்பட்ட ஆலயமே அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் ஆகும். யாழ்ப்பாண அரசின் (சிம்மாசனப் பெயர்களில்) விருதுப் பெயர்களில் ஒன்றான பரராசசேகரன் எனும் பெயரில் இணுவிலில் பரராசசேகரப் பிள்ளையார் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும். இணுவிலில் ஆரியச் சக்கரவர்த்தி காலத்திடன் ஏற்பட்ட வேளாள குடியேற்றத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் இவ் ஆலயம் இவர்களின் ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. பறாளை விநாயகர் ஆலயமும் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திற்கு உரியதாகும். இவ் ஆலயத்தினைப் போர்த்துக்கேயர் இடிக்க வந்த போது காக வடிவில் தளபதிக்குக் கண்ணைக் கொத்தவும், அவர்களை அவ்வாறு செய்யவிடாது தடுத்ததால் கண்ணைக் கோதிக் காக்கைப்பிள்ளை யார் என கூறப்படுகிறது. மருதடி விநாயகர் ஆலயமும் போர்த்துக்கேயர் இங்கு வந்த போது சிறப்புற்றுச் காணப்பட்ட ஆலயம் ஆகும்.

எனவே, கணபதி வழிபாடு ஈழத்தில் எவ்வாறு வளர்ச்சி பெற்றுத் திகழ்ந்துள்ளமை மேலே கூறப்பட்ட சான்றுகளின் மூலம் தெளிவாகின்றது. ஒரு தொன்மையான காலத்தோடு தொடர்புடைய வழிபாட்டு நெறியாக ஈழத்தில் விளங்கி வந்துள்ளது. யாழ்ப்பாணத் தமிழரசர்கள் மட்டுமன்றிச் சோழவம்சத்து அரசர்களுடன் பௌத்த அரசர்களும் கணபதியைச் சிறப்பாக வழிபட்டமையும் இன்றும் ஈழத்தில் "கணபதிதெய்யோ" எனப் பௌத்த மதத்தினர் மத்தியில் விளங்கி வருதலை நோக்கும் போது அன்று தொட்டு இன்றுவரை விநாயகர் வழிபாடு ஈழத்தில் சிறப்புடன் காணப் படுகின்றது என்று கூறுலாம்.ஏனைய தெய்வ வழிபாட்டோடு சேர்த்துப் போற்றப் படும் வகையில் சிறப்பிடம் பெற்றுப் பிதிர்க்கடன் ஆற்றும் தீர்த்தங்களைக் கொண்டும் ஈழத்தில் விநாயகர் ஆலயங்கள் விளங்குதலை நோக்கும் வகையிலும் இவ்வழிபாடு தனக்கே உரிய தனித்தன்மையோடு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றமையை விளங்கிக் கொள்ள முடியும்.

# “மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

செல்வி. விஜிதா குமாரசாமி
ஆசிரியை
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

நம்சைவ வாழ்க்கை அறத்தில் தொடங்கி மெய்யுணர்வு வெளிப்படுவதை முடிவாக உடையது. கன்ம வினைகளுக்கு ஏற்பவே பிறவிகள் வாய்க்கின்றன. நாம் முன்பு செய்த நல்வினைப் பயன் காரணமாகவே கிடைத்தற்கரிய மானிடப்பிறவி வாய்த்திருக்கின்றது. இவ் வாய்ப்பை பயன்படுத்தி உரிய பயனை அடைய முயல வேண்டும். மனிதனால் மட்டுமே சிந்தித்து ஆராய்ந்து உட் பொருள் பற்றி அறிய முடியும். எனவே சைவநெறி முறைகளைக் கடைப்பிடிப்பது நமது கடமையாகும். சைவ நாயன்மார்கள் சைவ நெறிமுறையில் நின்று வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள். இறைவனால் அருளப்பட்ட வேதமும், ஆகமமும் எமக்குச் சமயக்கருத்து, அறக்கருத்து, தத்துவக்கருத்துக்களைக் கூறுகின்றன.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாகிய சிவனை முழு முதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம். ஐசவ நெறியை அன்பு நெறி எனவும் கூறலாம் சைவநெறியைப் பாடசாலையில் மாணவர்கள் கற்பதால் அன்றாட வாழ்க்கையை வளம் படுத்திக் கொள்வதற்கு உதவும். அத்துடன் சமய அடிப்படைத் தத்துவங்களை அறியவும், சமயப்பாரம்பரியச் சிறப்பை மாணவர்கள் உணரவும், சமயப் பழக்கவழக்கங்கள், சமயாசாரங்களைப் பேணவும், உதவுகின்றது. சமயக் கல்வியானது அறிவையும், திறனையும் வளர்ப்பதிலும் விட மாணவர்கள் மத்தியில் மனப்பாங்கினையே விதைப்பதாக இருக்க வேண்டும்.

சைவ சமயமானது ஆன்மா ஈடேற்றம் அடைவதற்கு பல வழிமுறைகளை கூறுகின்றது. அதில் கூறப்படும் திருவுருவ வழிபாடானது மனித உணர்வலைகளை ஆன்மீகத்தின்பால் ஈடுபடச் செய்யும் முயற்சியின் ஒரு படியாக அமைகிறது. இவற்றை விடச் சிவசின்னம் அணிதல், திருவைந்தெழுத்து ஓதுதல், சமயாசாரங்களை பின்பற்றல் என்பன முக்கியமானதாக கூறப்படுகின்றது. சைவர்களுடைய வாழ்க்கை; சிவத்தோடு தொடர்புபடுத்தி இறைவனை அடைவதே நோக்காகக் கொண்டிருந்தது.

ஆனால் இன்று புத்தாயிரமாம் ஆண்டில் விஞ்ஞானம் வளர்ச்சி பெற்று காணப்படும் காலகட்டத்தில் இந்துப் பண்பாடு பற்றி நோக்குவோமேயானால் மிகவும் சீரழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆலய வழிபாட்டினை எடுத்துக் கொண்டால் ஆன்மீக நெறியாளர் ஒருபுறம், பொழுதுபோக்க வருபவர்கள் இன்னொரு புறம், சமயாசார உடையணிகின்றனார்களா? சிவசின்னங்கள் தரிக்கப்படுகின்றதா? சிலர் ஆலயங்களைக் கூடக்

களியாட்டு நிலையங்களாக மாற்றுகின்றார் கள்.

மக்கள் தமது பேரையும் புகழையும் வெளிப்படுத்துவதற்காக ஆலயங் களுக்கு அன்பளிப்புக்களை வழங்குகின்றனர். "மண்டபம் கட்டி மங்கம்மா உபயம் எனப் பெயர் போடுங்கள் நாம் பணம் தருகின்றோம்" என்பவர்கள் அனாதைச்சிறுவர் இல்லத் துக்குக் கொடுத்தால் அநியாயம் பணம் என்கி றார்கள். முன்னர் இந்து இல்லமொன்றில் சிவனடியார் ஒருவருக்கு உணவு கொடுத்துத் தாம் உண்ணக்காத்திருப்பார்கள். இதற்கு சிறுத்தொண்ட நாயனார், அப்பூதியடிகள், ஏன்காரைக்கால் அம்மையாரைக்கூட உதார ணமாகக் குறிப்பிடலாம்.

வேதங்கள் ஆகமங்கள் என்பன கிரியை முறைகளை விரிவுபடக் கூறுகின்றன. இவற்றைக் கற்றுத் தேர்ந்த அந்தணர்களே கிரியை ஆற்றக் தகுதியா னவர்களாகின்றனர். ஆனால் இன்று வீடியோப் படப்பிடிப்பாளர்களே கிரியைக்கான கட்ட ளையை அந்தணர்களுக்கு விதிக்கின்றனர். அத்துடன் சுப நேரத்தில் நடைபெறும் கிரியைகள் கூட மின்சாரம் தடைப்பட்டால் இராகு காலத்தில் நடக்கின்றன. திரையிட்டுச் செய்யும் கிரியைகள் கூட வீடியோப் படங்க ளுக்கு தப்புவதில்லை.

சைவ சமயத்தவர் இறை நாமம் ஒலிக்க வேண்டும் என்பதற்காகத் தம்முடைய குழந்தைகளுக்கு தெய்வப் பெயர்களையே இட்டு அழைத்தனர். சரவ ணன், ஐங்கரன், அபிராமி, துர்க்கா எனும் மங்கள நாமங்களே இட்டனர். ஆனால் இன்று அந்நியக் கலாசார மோகம் தமிழ் தொழி யிலும் ஊடுருவி கஜிந், அஜித்,துஷா போன்ற அரைகுறை நாமங்களை இட்டு அழைக் கின்றனர்.

தமக்கென ஒரு பண்பாட்டி னைப் பேணிக்காத்த மக்கள் புலம் பெயர்ந்து உலகநாடுகளுக்குச் செல்கின்றனர். அங்கே அந்நிய கலாசாரங்களைப் பின்பற்றத் தொடங்குகின்றனர். பொருளீட்டச் சென்ற வர்கள் கூடவே தீராத நோய்களையும் அல் லவா எமக்கு அன்பளிப்பாக வழங்குகின்றனர். எங்கே? போய்க்கொண்டிருக்கின்றது சைவப்பாரம்பரியங்கள் எனச் சிந்திக்கத் தூண்டுகின்றது.

எனவே வாழ்க்கையின் முடிவான பயனாகிய சிவப்பேறு அடைய வேண்டுமாயின் வேதங்கள் ஆகமங்கள் வைத் திருமுறைகள், சாஸ்திரநெறி முறைகளைப் பின்பற்றி காமிகக் கிரியைகளிலும் பார்க்க நித்திய நைமித்தியக் கிரியைகளுக்கே முத லிடம் கொடுக்கவேண்டும். தற்போது தகவல் தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்து கொ ண்டு செல்கின்றன. எனவே மாறிக் கொண் டிருக்கும் உலகிற்கு ஏற்ப எம்மை மாற்றிக் கொள்ள வேண்டியது உண்மையே; ஆனா லும் அடிப்படை உண்மைகள், நெறிமுறை கள், என்றும் மாறுவதற்கில்லை. ஆவை "மண்ணில் நல்ல வண்ணம் வாழ" பின்பற் றப்பட வேண்டியவையே. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

# பவளவிழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டியில் பரிசில் பெற்ற கட்டுரைகள்

## கல்வியின் சிறப்பு

கல்வியை விடச் சிறந்த செல்வம் உலகில் வேறு இல்லை. கொடுக்கக் கொடுக்கக் குறைவடையாதது கல்வி. கல்வியைக் கற்குஞ் தோறும் அறிவு வளர்பிறையாக வளர்கிறது. அறிவைத்தருகின்ற கல்வியே ஒருவருக்கு உண்மையான கண். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது ஆன்றோர் வாக்கு.

கல்வி கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கல்வி கற்கும் போது கருத்துடன் கற்க வேண்டும். இளமையில் இருந்தே கற்றால் தான் சிலையில் எழுத்தாய் மனதில் படியும். கல்வியினால் ஏற்படும் பயன்கள் இப்பிறவியில் மட்டுமன்றி ஏழு பிறவியிலும் மனிதனுக்குத் துணைபுரிகிறது. திருவள்ளுவரும் பத்துக் குறள்களிலே கல்வியின் சிறப்பை அழகாகக் கூறியுள்ளார். சிறுவர்கள் ஆகிய நாம் கல்வி கற்று நற்பயன் பெறுவோமாக.

ச. பானுஜா

தரம்- 3

தூரத்தில் பார்க்கும் போது
பல பொருட்கள் மின்னவோ
இருட்டவோ செய்கிறது
நிலமையுணர கிட்டசென்று பார்.

இருட்டிய பொருள் பிறரால்
மறைக்கப்பட்ட தங்கமாகலாம்
மின்னிய பொருள் கண்ணாடி
ஆகலாம்.

# விஞ்ஞான வளர்ச்சியின் பயன்கள்

கல்லையும் கல்லையும் உரசித் தீயைக் கண்டு பிடித்ததிலிருந்தே மனிதனின் கண்டுபிடிப்புக்கள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து இன்றுவரை விஞ்ஞானம் வானளாவி வளர்ந்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே விந்தைகள் செய்து கொண்டிருக்கின்றது. விஞ்ஞானத்தின் வளர்சியால் எமக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

மனிதன் கருவிலே தோன்றியதிலிருந்து அவனது ஆயுள் முடிந்த பின்பும் விஞ்ஞானத்தின் பணி தொடர்வதைக் காண்கின்றோம். மருத்துவத் துறையில் நோய்களைக் கண்டுபிடிப்பதற்கும் கண்டுபிடித்த பின் அவற்றைக் குணப்படுத்துவதற்கும் விஞ்ஞானம் பெரிதும் உதவுகின்றது. கொடிய நோய்களில் இருந்து மனிதன் பாதுகாக்கப்படுவதால் இறப்புக்கள் குறைந் தன. மக்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. வருமுன் காப்பது சிறந்ததல்லவா? இதற்கும் விஞ்ஞான தொழில் நுட்ப கண்டுபிடிப்புக்களும் மருத்துவ ஆராய்ச்சிகளும் அவற்றின் முடிவுகளும் உதவுகின்றன.

கல்வித் துறையில் இன்று விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பரியது. தொலைக்காட்சி, வானொலி மட்டுமன்றி கணணியின் உபயோகம், கல்விக்கான உபகரணங்கள், மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் யாவும் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகளே ஆகும்.

போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கும் விஞ்ஞானம் ஆற்றி வரும் சேவை குறிப்பிடக் கூடியது. பரந்த உலகம் இன்று சுருங்கியது போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாலே ஆகும். உலகின் எப்பக்கத்தில் இருந்தும் நினைத்த இடத்திற்குச் செல்லக் கூடியதாய் இருப்பது விரைவான போக்குவரத்து வசதிகளாலேயே ஆகும். விண்வெளிப் பயணங்களும், கோள்கள், வான மண்டலம் பற்றிய ஆராய்ச்சிகளும் விஞ்ஞானத்தின் விருத்தியாலேயே ஆகும்.

விவசாயத்துறையில் நவீன முறைகள் புகுத்தப்பட்டதால் விளைச்சல் பெருகி இருக்கிறது. இயற்கை அழிவுகள் முன்கூட்டியே அறியப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத் தவிர்க்கப் படுகின்றது. விளை பொருட்கள் விளைந்த பின் நவீன முறையில் அறுவடை செய்யப

படுவதுடன் நீண்ட நாட்கள் கெட்டுப் போகா மல் நவீன முறையில் பாதுகாக்கப்படு கின்றன.

சமையலிலும் இன்று அடுப்புக்கள் மின்சாரத்தினால் இயங்கும், இடிக்கும், அரைக்கும் கருவிகள் எனப் பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப் படுகின்றன. விளையாட்டுத் துறையிலும் பொழுது போக்குத்துறையிலும் இன்று நவீன மயம் புகுந்துள்ளது. மக்களது பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இன்று பெருமள விற்கு விஞ்ஞானத்தின் உதவியால் விரைவா கவும் இலகுவாகவும் செய்து முடிக்கப் படுவதுடன் பொருட்களின் உற்பத்தியும் தரம் உயர்ந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் நன்மை புரிந்து வரும் விஞ் ஞான வளர்ச்சி சில சந்தர்ப்பங்களில் மனித னின் அழிவுக்கும் காரணமாகி விடுகின்றது. போர் ஆயுதங்கள், அணு ஆயுதங்கள், யுத்த விமானங்கள், யுத்தக் கப்பல்கள், ஏவுக ணைகள் என மனித குலத்தின் பேரழிவிற்கு வழிவகுக்கும் இவையும் விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புக்களே. இவை இன்று உலகில் பல்வேறு பகுதிகளிலும் அழிவை ஏற்படுத்தி வருவதை வேதனையுடன் கண்டு வருகி ன்றோம். அன்னப் பறவை நீரைத்தவிர்த்துப் பாலை அருந்துவது போல நாமும் தீயவற்றை விடுத்து நல்லவற்றைப் பகுத்தறிந்து விஞ் ஞானம் தரும் நன்மைகளைப் பயன்படுத்தி நன்மை பெற வேண்டுமே அன்றித் தீயவற் றுக்கு இடம் கொடுக்கக் கூடாது. விஞ்ஞான வளர்ச்சியின் பயன்கள் மனித குலத்தின் மேம்பாட்டுக்காகவே அமைய வேண்டும்.

**சி. சாரங்கன்,**

**தரம்-4**

---

**யுத்தம் இடம் பெறுவது மனித குழமத்தினாலாகும். சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது மனித மனங்களிலாகும்.**

**~ யுனெஸ்கரவ ~**

**அமைப்புப் பலம் இருக்குமளவுக்குச் சமாதானம் நீண்ட நாள் நிலைக்கும்**

**~ டெக் ஹமர்ஷஸ்~**

**யுத்தம் என்பது அரசியலை வேறு வழியில் கொண்டு செல்லும் ஒரு மார்க்கமாகும்.**

**~ காஸ்டொப் க்லவ் சவ்டாய்~**

# செல்லப் பிராணி

எனது செல்லப்பிராணி பஞ்சுத்திரள் உயிர் கொண்டெழுந்து. துள்ளித்திரிவது போல் என்னையே எப்போதும் வளையவரும் வெண்ணிறப் பூனைக் குட்டியாகும். அன்று சுத்தமாய் வெண்மையாய் மறுவற்று இருந்த போதிலும் அனாதையாய்த் தெரு வோரத்தில் நின்ற அதனைக் கண்டதும் நகர மனமின்றி இந்தப் பூனைக் குட்டி எனக்கு சொந்தமாயிருந்தால் இப்படித் தெருவோரத்தில் விட்டு விடுவேனா? என எண்ணிக் கொண்டேன். சுற்று முற்றும் பார்த்தேன் யாரும் அங்கில்லை. வேகமாய் வந்தும் போயும் கொண்டிருந்த வாகனங் களைப் பற்றி எந்த விதமான பயமுமின்றித் துள்ளித் துள்ளி இங்குமங்கும் பாய்ந்தும் பதுங்கியும் விளையாடிக் கொண்டிருந்தது.

சிறிது நேரம் அதன் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்த நான் மனமின்றி அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். என்ன அதிசயம் பூனைக் குட்டியும் என் பின்னாலேயே நடந்தும் ஓடியும் வந்து கொண்டிருந்தது. என் கால்களில் தன் உடலைத் தேய்த்து உரசியபடி சுற்றிச் சுற்றி வந்தது. ஓ! நெடுநேரம் அதன் அருகில் நின்று விட்டு நான் நகர்ந்ததும் தானும் என் பின்னே வருகிறது என உணர்ந்து கொண்டேன். நான் வீட்டினுள் நுழையும் போது தானும் என்னுடன் நுழைந்து கொண்டது. அன்றிலிருந்து என் செல்லப் பிராணியாகியது.

அது எனக்கு என்றுமே பிரியமானதாலும், அதனை என்றுமே பிரிய எனக்கு மனமில்லாததாலும் என் செல்லப் பிராணிக்கு பிரியா எனப் பெயரிட்டேன். பிரியாவுக்குப் பால் குடிப்பதென்றால் கொள் ளைப் பிரியம். தினமும் பாடசாலைக்குப் போகும் முன் நானே ஊட்டி விடுவேன். பாடசாலை செல்லும் போது வாசல் வரை வந்து வழியனுப்பி விட்டுக் கூடத்தினுள் இருக்கும் கதிரைகளில் ஒன்றில் ஏறி உறங்கி விடும். மதியம் நான் வரும் நேரம் எனக்காக வாசலில் காத்து நிற்கும். தொலைவிலேயே என்னைக் கண்டதும் துள்ளி ஓடிவந்து கால்களை வளைத்துக் கொள்ளும். புத்தகப் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு பிரியாவைக் கையில் எடுத்துக் கொண்டு வீடு வருவேன்.

என் அம்மா என்னைக் கண்டதும் வாடா ராஜா! நான் சாப்பாடு போட்டும் சாப்பிடாது வாசலில் வந்து உன்னைப் பார்த்துக் கொண்டிருக்குதுபிரியா என்பாள். எனக்குப் பிரியாவை எண்ணிப் பெருமையாக இருக்கும். பிரியாவுக்கு ஊட்டி விட்ட பின்பே நான் உண்பேன். தினமும் மாலையில் சிறு பந்து ஒன்றை வைத்துப் பிரியாவுடன் விளையாடுவேன். பந்து விளையாடுவதில் பிரியாவுக்கு மிகவும் விருப்பம். இரவில் நான் உறங்கும் போது எனது கட்டிலின் கீழ் பிரியாவும் உறங்கும். சில சமயம் என்னோடு தானும் கட்டிலில் உறங்கும்.

ஒரு தடவை நான் கடும் சுகவீனமுற்று மூன்று நாள் படுக்கையில் இருந்தேன். பிரியா என்னை விட்டு பிரியாமல் என்னையே பார்த்தபடி சேகமாக என் அருகிலேயே இருந்தது. அப்பா, அம்மா அதற்கு உணவை வைத்தும் உண்ணவேயில்லை. இந்த சம்பவத்தை இன்று நினைத்தாலும் என் விழியில் நீர் துளிர்க்கும். என் செல்லப் பிராணியின் மேல் எனக்கு அன்பிருப்பது போலவே அதற்கும் என்மீது கொள்ளைப் பிரியமுண்டு.

**சி. அஜந்தன்**
**தரம் 5**

# எனது கிராமம் கோப்பாய்

எனது கிராமத்தில் முன்னொரு காலத்தில் இலங்கையின் கடைசித் தமிழ் மன்னனான சங்கிலியன் யுத்தம் செய்து விட்டுத் திரும்பிப் போகும்போது பாய்விரித்துத் துயில் கொண்டதாகவும் "கோ" அதாவது மன்னன் பாய் விரித்துத் துயில் கொண்டதால் "கோப்பாய்" என்ற பெயரைக் கொண்டு விளங்குகின்றது என்பது ஐதீக் கதையாகும். இக் கிராமத்தின் எல்லைகளாக வடக்கே நீர்வேலியும் கிழக்கே கைதடியும் தெற்கே இருபாலையும் மேற்கே உரும்பிராயும் விளங்குகின்றன.

இது நீர் நில வளங்களைக் கொண்ட சொர்க்க பூமியாகும் . இது விவசாய பூமியாக இருக்கின்ற போதிலும் உலகின் போக்கிற்கு ஏற்பத் தொழில் நுட்ப வளர்ச்சியில் மிகவும் உன்னத வளர்ச்சி அடைந்துள்ளது. ஆரம்பத்தில் துலா, பட்டை கொண்டு நீர் இறைத்த விவசாயிகள் இன்று மின் பம்பிகள் மூலம் நீரிறைக்கின்றார்கள். கால்நடைகளைக் கொண்டு செய்கின்ற வேலையை இயந்திரங்களினால் செய்கின்ற அளவுக்கு எனது கிராமம் வளர்ச்சியடைந்து விட்டது. மக்களின் பிரதானமான தொழில் விவசாயமாக இருந்தாலும், அரசாங்க செயலகங்களில் வேறு பல துறைகளிலும் மக்கள் தொழில் புரிகின்றார்கள்.

பூத்துக் குலுங்கும் வயல்களும், புதுமணப் பெண்போல் தலையைக் குனிந்து கொண்டிருக்கும் வாழைகளும், மஞ்சள் ஆறு ஓடுவது போலச் சணல் மரங்களும் எனது கிராமத்திற்கு அழகு சேர்க்கின்றன. ஜாதி மத பேதமின்றி, ஏழை பணக்காரர் வித்தியாசமின்றி, ஏற்றத்தாழ்வு இன்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். கற்றறிந்த பண்டிதர் தொடக்கம், பாமரர் மக்கள் வரை யாவரும் சந்தோசமாகவே வாழ்கின்றனர். எனது கிராம மக்கள் வெள்ளை உள்ளம் கொண்டவர்கள். அத்துடன் இவர்கள் சமய நம்பிக்கை கொண்டவர்களாகவும் பஞ்ச சீலக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். கையை ஏந்தி வருபவர்களுக்கு இல்லை யெனாது வாரி வழங்கும் கொடைச் சிறப்பு மிக்கவர்கள்.

இராணுவ நடவடிக்கைகள் ஏற்பட முன்னர், எமது கிராமத்தில் வானளாவ வளர்ந்த தென்னை மரங்களும், பனை

மரங்களும் நிறைந்து காணப்பட்டன. எமது முன்னோர்கள் பனையின் பயனை முழுவதும் துய்த்தவர்கள். இராணுவ நடவடிக்கைகளால் இந்த வளங்கள் தற்போது அருகிவிட்டன எனினும் மக்களது ஊக்கத்தினால் தென்னைகள் வளர்க்கப்படுவதைக் காண முடிகிறது. வளவுகளில் மா, பலா, தோடை, மாதுளை, போன்ற கனிதரு மரங்கள் பயிரிடப் படுகின்றன. நெல், சாமி, குரக்கன் போன்றன பிரதான உணவுப் பொருட்களாகவும் கிழங்கு வகைகள், கீரை வகைகள், காய்கறி வகைகள், வெங்காயம், புகையிலை, போன்றனவும் பயிரிடப்படுகின்றன.

எமது கிராமத்தில் நெடுஞ் சாலைகளாக "இராச வீதி" எனப்படும் புரதான வீதியும், பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியும், சாவகச்சேரி- மானிப்பாய் வீதியும் கோப்பாயை ஊடறுத்துச் செல்கின்றன.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்கப் பல கோயில்களையும், மக்கள் அமைத்து வழிபடுகின்றனர். வரலாற்றுப் புகழ் பெற்ற கண்ணகை அம்மன் கோவில், சித்திர வேலாயுத சுவாமி கோவில், முத்து மாரி அம்மன் கோவில், கிருஷ்ணர் கோவில் என்பன குறிப்பிடதக்கவை. கிறிஸ்தவ தேவாலயமும் உண்டு.

அன்றாட அலுவல்களை ஆற்றுகின்ற பணிமனைகள் எமது கிராமத்தில் உண்டு. நோய் தீர்க்கும் ஒரு பெரிய அரசினர் மருத்துவமனையும், வலிகிழக்குபட பிரதேசச் செயலகமும் கிராமத்தின் மையத்தில் அமைந்துள்ளன. அத்துடன் தபாற்கந்தோர், உப தபாற்கந்தோர், கிராமிய வங்கி என்பனவும் அமைந்துள்ளன. இவை எமது கிராமத்தவர்க்கு மட்டுமன்றி அயல் கிராமத்தவர்க்கும் சிறந்த சேவை ஆற்றி வருகின்றன. கோப்பாய்க் கிராமம் கோப்பாய் வடக்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் தெற்கு என மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் சிறப்புற நடைபெறப் பொலிஸ் நிலையமும் உண்டு. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்விக் கல்லூரி, என்பன அமைந்திருப்பதும் கிராமத் தின் சிறப்பாகும்.

கிராமத்தில் கிறிஸ்தவ கல்லூரி, சரவணபவானந்த வித்தியாலயம், நாவலர் வித்தியாலயம், றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, என நான்கு பாடசாலைகள் உள்ளன. மக்களுடைய நன்மை கருதிப் பல சனசமூக நிலையங்களும் உள்ளன. உப்பாறு என்ற கடனீரேரி ஒன்றும் உள்ளது. இத்தனை செல்வங்களும் நிறைந்துள்ள எமது கிராமம் பூலோக சொர்க்கம் என வர்ணிக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**ஞா. சுஜிதரன்**

**தரம்- 6**

# பவள விழாக் காணும் பாடசாலை

2002ம் ஆண்டு பவள விழாக் காணும் எனது பாடசாலை முருகன் துணை கொண்டு ஆரம்பிக்கப்பட்டமையால் சரவணபவானந்த வித்தியாலயம் எனப் பெயர் பெற்றது. இவ் பாடசாலை கோப்பாய் வடக்கில் கல்வி வழங்கும் நிலையமாக விளங்கி வருகிறது. ஒரு சிறிய கட்டிடத்தில் ஒரு ஆசிரியருடனும் சிறு தொகை மாணவருடனும் ஆரம்பமான இப் பாடசாலை படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று நகர்ப் புறப் பாடசாலை போல் விளங்குகின்றது. இது சைவசமய பாரம்பரியங்களைப் பேணி வருகிறது.

எனது பாடசாலையில் ஐந்து பெரிய கட்டிடங்கள் உள்ளன. இப் பாடசாலையின் முதலாவது அதிபர் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களின் நினைவாகத் திறந்த வெளி அரங்கு ஒன்று அமைந்துள்ளது. பாடசாலை அலுவலகம் முன் புறத்தில் தோட்டம், கிணறு புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மைதானம் என்பன அமைந்துள்ளன. பாடசாலைச் சுற்று மதில் உண்டு முன்புறத்தில் கண்ணைக் கவரும் பூஞ்செடிகளும் ஆங்காங்கே நிழல் விருட்சங்களும் காணபடுகின்றன.

இங்கு ஏறக்குறைய 300 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். 25 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். ஆண்டு ஒன்று தொடக்கம் க.பொ.த. சாதாரணம் வரை வகுப்புக்கள் நடை பெறுகின்றன. அதிபரும் ஆசிரியர்களும் மாணவரது கல்வி வளர்ச்சியிலும் ஒழுக்கத்திலும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். கோட்ட, வலய, மாவட்டப் போட்டிகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று வருகிறது. ஆண்டு தோறும் கலை விழா, இல்ல மெய்வல்லுனர் போட்டி, நவராத்திரி விழா, என்பன சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. கல்வியிலும் விளையாட்டிலும் எனது பாடசாலை ஆர்வம் காட்டி வருகிறது. இங்கு தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் இசை, நடனம், சித்திரம், விஞ்ஞானம், வர்த்தகம், விவசாயம், ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இங்கு பெரிய கல்லூரிகளில் இருப்பது போன்று மனையியற் கூடம், விஞ்ஞான ஆய்வு என்பனவும் உண்டு. மாணவரது கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஒரு நூல் நிலையமும் அமைந்துள்ளது.

இப் பாடசாலையில் சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சங்கத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபையினர், ஆகியோரின் முயற்சியால் எனது பாடசாலை சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு, கோப்பாய் கிராமத்திற்கு ஒளி விளக்காகத் திகழ்ந்து பவள விழா கொண்டாடுகிறது.

**த. சுபைதா**

**தரம் 8**

## சூழல் மாசடைதலும் அதனைத் தடுக்கும் வழி முறைகளும்

நாம் வசிக்கும் சுற்றாடலே சூழல் எனப்படுகின்றது. பௌதீகச் சூழல், பண்பாட்டுச் சூழல், எனும் இரு அம்சங்களை உடையது. நிலம், மண், நீர், தாவரம், பிராணிகள், வளிமண்டலம் என்பன இயற்கைச் சூழலைச் சேரும். மனிதன் தனது சேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கியுள்ள சுற்றாடல் பண்பாட்டுச் சூழல் ஆகும். சமயம், கலைப் படைப்புக்கள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், ஆகியனவும் கட்டடங்கள், வீதிகள், தொழிற்சாலைகள், சமூக நிறுவனங்கள், ஆகியனவும் பண்பாட்டுச் சூழலைச் சாரும்.

சூழல் எனப்படும் தொகுதியில் ஒரு புறம் தாவரங்கள், விலங்குகளும், மறுபுறம் சூழலுக்குமிடையே காணப்படும் அன்னியோன்னியத் தொடர்பு சூழற் சமநிலை எனப்படும். சூழற் தொகுதியின் நிலைபேறு இச் சமநிலையிலேயே தங்கியுள்ளது.

பூமியில் வாழும் மனிதன் தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்தும் பொருட்டு மனித வாழ்க்கைக்கு பொருத்தமான சூழற் சமநிலை ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். சூழலின் சமநிலை குழம்புதல் சூழல் மாசுறுதல் எனப்படுகிறது. இயற்கைக் காரணிகளைப் போலவே மனிதனால் சூழலின் சமநிலையைப் பாதிக்கின்றன.

மனிதன் சூழலில் மேற்கொள்ளும் பலவேறு நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் பல்வேறு மாற்றங்களின் படி இயற்கைச் சூழலும் மாற்றமடைகிறது. இலங்கையில் உலர்வலயக் காடுகளை அழித்த பின்னர் மேற்கொள்ளப்படும் சேனைப் பயிர்ச் செய்கையும் தென் கரையோரங்களில் சுண்ணாம்புக் கல்லகழ்தல், மணல் சேகரித்தல், போன்ற செயற்பாடுகளால் ஏற்படும் கடலரிப்பும் உதாரணங்கள் ஆகும். நீர்ப்பாசன முறைகள், சேற்று நிலங்களை நிரப்புதல், தொழிற்சாலைகளையும் நகரங்களையும் நிர்மானித்தல், எரிபொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அகழ்வுகளை மேற்கொள்ளல் போன்றன இயற்கைச் சூழல் மாற்றமடைவதற்குரிய பிற காரணிகளாகும். இக் காரணிகளின் பிரதி பலிப்பாக நிலம், நீர், காற்று ஆகியன அசுத்தமடைகின்றன.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் முன்னேற்ற மடைந்த நாடுகளிலே வளி பெரிதும் மாசுறுகின்றது. பெற்றோலியம் மூலம் ஓடும் வாகனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் இருந்து வெளியேறும் புகையுடன் வாயு மண்டலத்தில்

கலக்கும் ஈயத்துணிக்கைகள் போன்ற அசுத்தப் பொருட்களின் மூலம் வளி மாசடைகின்றது. இம் மாசுப் பொருட்கள் பெரும்பாலும் அடர்ந்த புகைப் படலமாக இருப்பதால் சூரிய ஒளி பூமியில் விழாது தடை செய்யப்படுகிறது. நியூயோக், ரோக்கியோ, போன்ற பெரிய நகரங்களில் மோட்டார் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை காரணமாக நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள ஒட்சிசன் வீதம் பெரிதும் குறைகின்றது. வளி மாசுறுவதற்கு நல்ல உதாரணமாக 1985ம் ஆண்டு "போபால்" தொழிற்சாலை ஒன்றிலிருந்து வெளியேறிய நச்சு வாயு காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தமையைக் குறிப்பிடலாம். மிக வேகமாக உயரத்திற் பறக்கும் மீயொலி விமானங்கள், ரொக்கெட்டுக்கள் முதலியவற்றிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களால் வளி மண்டலத்தின் மேற்படலமாக அமைந்துள்ள ஓசோன் படலம் பாதிக்கப்படுகின்றது. ஓசோன் படலம் பாதிக்கப்படுவதால் உயிரினங்களுக்கு ஆபத்து உண்டாகும்.

அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படும், அணுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் போதும் உண்டாகும் கதிர்த் தொழிபாடுடைய சாம்பர் படிவதனால் வளி மாசடைகிறது. மற்றும் விண்வெளிக் கப்பல்களை அனுப்பும் போது உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்துவதால் வளி மாசடைகிறது. ஆபத்தான வளியைச் சுவாசிப்பதனால் தொண்டை நோய், சுவாசப்பை நோய், புற்று நோய், போன்றன வளி மாசடைவதால் ஏற்படும் ஆபத்தான நோய்கள் ஆகும்.

நீர் மனிதனுக்கு இன்றியமையாதது. நீர் பல வழிகளில் மாசுறுகிறது. இரசாயனத் சேர்வைகள், அமில வகைகள், சாயங்கள் விவசாய இரசாயனப் பொருட்கள், எண்ணெய் போன்றன நீருடன் கலப்பதனால் நீர் அசுத்தமாகிறது. சனச் செறிவு மிக்க நகரங்களில் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் பெரும்பாலும் நீர்த் தேக்கங்களை அடைகின்றன.

மற்றும் தொழிற்சாலைகள் பெரும்பாலும் கழிவுப் பொருட்களைக் குறைந்த செலவில் அகற்றுவதற்காக நீர் நிலைகளில் இடப்படுகின்றன. இதனால் நீர் மசடைகிறது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், இரசாயனத் தொழிற்சாலை ஆகிய வற்றில் இருந்து வெளியேறும் கழிவுகளால் நீர் மாசடைகிறது.

1972ல் யப்பானின் மினிமாட்டா குடாவில் பிடிக்கப்பட்ட மீனை உண்டவர்களைப் பாதித்த மினிப்பாட்டா நோயை உதாரணமாகக் கூறலாம். விவசாய நிலங்களின் ஊடாக ஆறுகள் ஓடும் போது நீருடன் கலக்கும் நைத்திரேற்று, பொஸ்பேற்று, போன்ற இராசயனப் பசளைகளால் நீர் அசுத்தப்படுகின்றது. நைத்திரேற்று படிப்படியாக மண்ணில் இறங்கி நீருடன் கலப்பதால் நீர் அசுத்தம் ஆகின்றது. கடல் மாசடைவதால் மீன், சிப்பி, கடற்பறவைகள், ஆகியவற்றுக்குத் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. அவ்வாறான பிரதேசங்களில் பிடிக்கப்படும் மீனை உண்ணும் மக்களும் பாதிக்கப்படுகின்றனர்.

விவசாய அபிவிருத்தியின் பொருட்டுப் பயன்படுத்தப்படும் புதிய முறைகள் பெரும்பாலும் தரைச் சூழல் மாசுறுவதற்கு ஏதுவாக இருக்கின்றன. உணவுப் பயிர்ச் செய்கைகளிலே கிருமி நாசினி, களைகொல்லி, பங்கசுக் கொல்லிகள் ஆகியன இப்போது அதிகளவில் பிரயோ

கிக்கப்படுகின்றன. அத்துடன் அறுவடையைப் பெருக்கு வதற்காக இரசாயனப் பசளை வகைகளும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான இரசாயனப் பொருட்கள் தெளிக்கப்பட்ட பழ வகைகள் முதலியவற்றை உண்ணுவதால் உடலைப் பாதிக்கும் பல நோய்கள் ஏற்பட இடமுண்டு.

நகரப் பகுதிகளிலே ஆங்காங்கு குவிக்கப்படும் கழிவுப் பொருட் களும் சூழலை மாசுபடுத்துகின்றன. வீடுகளில் சேரும் குப்பை, வெற்றுப் பெட்டிகள், பொலித்தீன் உறைகள், சிரட்டைகள் இத்துப் போவதனால் துர்நாற்றம் ஏற்படுகின்றது. அத்துடன் மழைக் காலங்களில் நுளம்புகள், வேறு பூச்சிகள், உண்டாகின்றன. இவற்றால் தரை மாசுறுகிறது.

சூழலை மாசுபடுத்தும் காரணிகளுள் அண்மையில் ஏற்பட்ட ஒன்று ஒலி இன்று தோன்றியுள்ள கைத்தொழில் பகுதிகளில் இருந்து வரும் ஒலி, ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் வாகன்ங்கள், புகையிரதங்கள், ஆகாயவிமானங்கள், ஆகியவற்றின் ஒலிகள் மிகவும் தொல்லை தருவனவாகும். ஒலி டெசிபல் எனப்படும் அலையினால் அளக்கப்படுகிறது. 50 டெசிபல்லுக்கு மேற்பட்ட ஒலி மனிதனுக்குக் கேடாகும். அதிக ஒலியால் செவி பாதிக்கப்பட்டுச் செவிடாகக் கூடும். நவீன உலகிற்குக் குறிப்பாக இளஞ் சந்ததியினரிடையே பிரபலமடைந்திருக்கும் உயர்ந்தரக இசைக் கருவிகள், ஒலி பெருக்கிகள், ஆகியவற்றின் தொல்லைதரும் ஒலிகளாலும் சூழல் மாசடைகின்றது. பெரிய சத்தம் மனிதனுடைய நரம்புத் தொகுதியைப் பாதிக்கின்றது.

விகாரப்படாமலும், அழியாமலும், மாசுபடாமலும் ஒரு சூழலைப் பேணுவதே சூழற் பாதுகாப்பு எனப்படும். தொழிற் சாலைகள் போன்றவற்றில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களுக்கு மருந்திட்டுத் தீங்கற்ற முறையில் வெளியேற்றுவதனால் வளி, நீர், நிலம் ஆகியன மாசுறுவதைப் பெருமளவு தடை செய்யலாம். கைத்தொழிற் சாலைகளில் கழிவுப் பொருட்கள், குப்பை கூளங்கள் ஆகியவற்றை ஆறுகள், நீர் நிலையங்கள் போன்றவற்றிற் படிய விடாது குழிகள் தோண்டி அவற்றைப் புதைத்து விடுவதன் மூலம் சூழல் மாசுறுவதைத் தடுக்கலாம். தொழிற்சாலைகளில் இருந்து அப்புறப்படுத்தப்படும் கழிவுப் பொருட்களை மனிதனுக்குத் தீங்கற்ற முறையில் சுத்திகரித்து வெளியேற்ற வேண்டும் என சில நாடுகளில் சட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளன. மோட்டார் வாகனங்களில் இருந்து வெளியேறும் வாயுக்களில் மனித உயிருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தப் பொருளும் இருக்கக் கூடாது என சில நாடுகள் இப்போது சட்டங்கள் இயற்றி உள்ளன.

எமது நாட்டிலும் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளிற்காகத் தொழிற்சாலைகளில் இருந்து வரி அறவிடுவதற்கும், அழுக்குப் பொருட்களை வெளியே தள்ளி விடுவதைத் தடுப்பதற்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஒலி மாசுறுவதை இரு வழிகளிலே தடுக்கலாம். சத்தத்தை உண்டாக்கும் இயந்திர சாதனங்களில் இருந்து வரும் சத்தத்தைக் குறைக்க வழி செய்வது ஒன்று. இரண்டாவது தொழிலாளருடைய காதுகளுக்குக் கவசங்கள் இடுதல். இவற்றில் இயந்திர சாதனங்களின் ஒலியைக் குறைப்பதே சிறந்த வழியாகும். அமெரிக்காவுக்கு 90

டெசிபல்களுக்கு மேல் அதிகமான ஒலி கேட்கக் கூடாது எனவும் நெதர்லாந்தில் 70 டெசிபல்களுக்குமேல் ஒலி கேட்கக் கூடாது எனவும் சட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளன.

விவசாய இரசாயனப் பொருட்களைப் பிரயோகிக்கும் போது ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்த்தற் பொருட்டு அவற்றைக் கையாளும் முறை, தெளிக்க வேண்டிய முறை, களஞ்சியப் படுத்தும் முறை, மருந்து தொளிப்பதற்கான காலம் போன்ற விடயங்கள் பற்றி விவசாயி களிடத்தே கூறவேண்டும்.

காப்பு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மண் தின்னலைச் சுலபமாகத் தடை செய்யலாம். முடியுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் இயற்கைத் தாவரங்களைப் பாதுகாத்தல், மண் பாதுகாப் பிற்கேற்பத் தாவரங்களைப் பயிரிடல், கான்க ளையும் கற்சுவர்களையும் அமைத்தல், நில த்தை உமி, தும்பு, வைக்கோல் என்பவற்றால் அணைகளை அமைத்தல் போன்றவற்றின் மூலம் மண்ணரிப்பைத் தடுக்கலாம்.

சுண்ணாம்புக் கல் பெறுவ தற்காகக் கடற்கரை யோரங்களை அண்டிய பகுதிகளில் முருகைக் கற்பாறை உடைக் கப்படுகிறது இது தடைசெய்யப்பட வேண்டும். இப் பாறைகள் உடைக்கப்படுவதால் தரை நேரே கடலைகளால் தாக்கப்படுகின்றது. இதனால் கடலரிப்பு உண்டாகிறது. இதைத் தடுப்பதற்குக் கரையோரப் பாதுகாப்புச் சட்ட த்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிருகங்கள் கட்டுப்பாடி ன்றிப் புல் மேய்வதையும் தவிர்த்தல் வேண் டும். சூழல் தொகுதியின் சமநிலையைப் பாதுகாப்பதன் பொருட்டு அருகி வரும் பிராணிகளையும், தாவரங்களையும் அழிப் பது முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும். முடியுமான அளவு புதிய காடுகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

சூழல் மாசுறுவதன் தீய விளைவுகள் பற்றியும் சூழலை பாதுகாக்க வேண்டியதன் முக்கியம் பற்றியும் மக்கள் நன்கு விளங்கிக் கொள்வது அவசியம்

ஆகவே நாம் அனைவரும் சூழற்தீங்கு விளைவதைத் தடுத்துச் சூழற் பாதுகாப்பை ஏற்படுத்துவோம்.

**பா. ஜீவராசா**

**தரம் 10**

**எந்த ஒரு முறையிலாவது சமாதானம் யுத்தத்தை விட உயர்ந்ததாகும்.**

**~ ஜோன் கென்னத் கஸ்பிறேக் ~**

**சமாதானம் அபிவிருத்தியின் அத்திவாரமாகும் .**

**~ அன்ரூ ஜெக்சன்**

மாணவர் பக்கம்

# வேட்டைக்காரன் உடு உரு

விஞ்ஞானத் துறைகளுள் விண்ணியல் மிகவும் தொன்மை வாய்ந்தது. புராதன மக்கள் திறந்த வெளிகளிலும் இருளிலும் தினமும் பல நட்சத்திரங்களையும் ஏனைய விண்மீன்களையும் வானில்கண்டு வியந்தனர். மணிக்கூடு இல்லாத காலத்தில் பகலில் சூரியனைக் கொண்டும் இரவில் விண்மீன்களைக் கொண்டும் திசைகளையும் நேரத்தையும் அறிந்தனர். கிரேக்கர்கள், எகிப்தியர், பமிலோனியர், சீனர், இந்தியர் இவ் விண்மீன்களை அவதானிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். உடுக்கோலங்களின் உருவங்களிற்கு ஏற்ப அவற்றிற்குப் பெயர் சூட்டினர்.

இவற்றுள் வெற்றுக் கண்ணிற்கு மிகத் தெளிவாகப் புலப்படும் கூட்டங்களுள் ஒன்றாக வேட்டைக்காரன் திகழ்கின்றது. இவ் உடுக் கூட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒறியன் (ORION) என்ற பெயர் கிரேக்கப் பழங் கதைகளில் வரும் ஒரு வேட்டைக்காரனைக் குறிககும். தனது இடுப்பு வாரிலே வாள் ஒன்றை ஏந்திய வேட்டைக்காரன் ஒருவனின் உருவத்தை இவ் உடுக் கூட்டம் பிரதிபலிப்பதாக முன்னோர் கருதியதாலேயே இதற்கு இப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. வேட்டைக்காரனில் பிரகாசமான ஏழு உடுக்களைக் காணலாம். ஒறியன் கூட்டத்தில் உள்ள மிகப் பிரகாசமான உடு பீற்றல் கியூஸ் (BETELGEUSE) இது செந்நிறம் உடையது. வேட்டைக்காரனின் வலது தோளைக் குறிக்கின்றது. வேட்டைக்காரனின் இடது காலைக் குறிப்பது RIGEL (ரிஜெல்) என்னும் உடு ஆகும். BELLATRIX பெலற்ரிக் உடு வேட்டைக்காரனின் இடது தோளைக் குறிக்கும். AL-NILAM எனும் உடு வேட்டைக்காரனின் இடுப்பு வாரில் உள்ள மூன்று உடுக்களுள் நடுவில் உள்ள உடு ஆகும்.

கு. சுபாசினி
தரம்- 11

# எமது பிரதேசத்தில் பெண்கள் மீதான அடக்கு முறைகள்

"குடும்பச் சிறையில் குரல் வளையைச் சிக்கவைத்துக்
கூவாமல் போன ஊமைக்குயில்களின் வாய்ப்பூட்டுக்குத்
திறவு கோலாய் விடுதலை பாடினான் பாரதி"

இன்றந்த விடுதலைப் பாடலைப் பாடுதற்கும் சுதந்திரமில்லா தந்திரங்களால் கண்ணீர் நதிகளில் வாழ்க்கைப் படகைச் செலுத்தும் காரிகையர் எத்தனை! எத்தனை!

ஆம்! அன்றந்தப் பாரதி பெண் சுதந்திரம் பெண் விடுதலை என முழங்கிவிட்டுப் போனான். ஆனால் இங்கு எமது பிரதேசத்திலோ பெண்கள் மீதான அடக்கு முறைகளும் கொடுமைகளும் பலவாறாக திகழ்ந்துகொண்டிருக்கின்றன.

சீதனம் பெண்களை அடக்கி ஒடுக்குவதில் முதலிடம் பெறுகின்றது. பெண்களானவள் தன் இளமைக்காலத்தில் எத்தனையோ இனிய கற்பனைகளுடன் தனது திருமணத்தை எதிர் நோக்கியிருப்பாள். ஆனால் அவள் வீட்டுச் சூழ்நிலையில் அவளுக்குரிய சீர்வரிசையை அதாவது மாப்பிளைக்குரிய விலையைக் கொடுக்க முடியாவிடத்து அவளின் கற்பனைக் கோட்டைகள் தகர்ந்து விட அப்பெண்ணுக்கு மனதிலே ஒரு வெறுமை தோன்றி விடுகின்றது. இதுவும் ஒரு பெண்ணை அடக்கி ஒடுக்குதல் தானே? இந்தக் கொடுமை தம் பிரதேசத்தில் பல இடங்களில் இருந்தும் அதைப் புரிந்தும் புரியாதது போலல்லவா காட்டிக் கொள்கிறத இந்தச் சமுதாயம்.

இது மட்டுமா? மாப்பிளைக்குரிய விலையைக் கொடுத்து அப் பெண்ணைப் புகுந்த வீட்டிற்கு அனுப்பினால் பின்பாவது அவளுக்கு அங்கே மரியாதை இருக்கிறதா? எனச் சிந்திப்போம். ஆனால்அங்கேயும் பல இன்னல்களை எதிர் கொள்கிறாள் அந்தப் பெண். தன் விருப்பு வெறுப்புக்களைத் தனக்குள்ளே மூடிவைத்துக் கணவன் வீட்டு யந்திரமாக வாழவைக்கிறது! நம் சமுதாயம்.

"அரசையே ஆண்டாலும் அதிகாரத்தில் இருந்தாலும் சந்தேகத் தீ கொண்டு கண்ணகியரை எரிக்கின்ற சிலிண்டர்களின் வெடிப்புத் தொடரல்கள். நம் பிரதேசத்தில் வரலாறு படைக்கின்றன"!

பெண்கள் எந்தப் பட்டப்படிப்புப் படித்தாலும், பெரிய அதிகாரத்தில் இருந்தாலும், ஏன் அரசையே ஆண்டாலும் கூட அவள் வாழ்விற்குச் சுதந்திரம் கொடுக்க மறுக்கின்றது இந்தச் சமுதாயம். பெண் தனக்கு விரும்பியவனைத் தேர்ந்தெடுக்க உர்மையில்லை ஆனால் பெண்பார்க்கும் படலமென்று எத்தனை கூட்டம் அவள் வீட்டிற்குச் சென்று "பெண்ணை பிடிக்கவில்லை" என்று கூறிவிட்டுச் சென்றிருக்கும். ஆம்! அந்த ஆடவனுக்குப் பெண்ணைப் பிடிக்கணும்; பெண் அழகாய் இருக்கணும். ஆனால் அதையே ஒரு பெண் திருப்பிச் சொல்ல முடியாது. இந்த ஆணாதிக்கத்தால் பெண்ணானவள் படும் வேதனைகளும் அவமானங்களும் தான் எத்தனை! எத்தனை!

ஒரு பெண், பெண் குழந்தையைப் பெற்று விட்டால் பார்க்கவேண்டுமே நமது சமுதாயத்தை! பெண்ணைப் பெற்றதில் அவளுக்கு மட்டுமே பொறுப்பு மாதிரி, அவளை என்னமாய்ப் பாடுபடுத்துவார்கள். அத்துடன் விடுவார்களா? அந்தக் குழந்தைக்கும் பிறந்ததிலிருந்தே கட்டுப்பாடுகள் அது இதென்று அவள் சாகும் வரையில் அப்பப்பா எத்தனை கொடுமைகள். ஆனால் பிறந்தது ஒரு ஆண்குழந்தை எனில் அந்தப் புகழ் அக் குழந்தையின் தகப்பனுக்குச் சென்று விடுகிறது. தகப்பன் பெயர் சொல்ல வந்த, வம்சத்தைத் தழைக்கச் செய்ய வந்த ஆண்வாரிசு என என்னமாய்த் தூக்கி நிறுத்து விடுகின்றார்கள் இவையெல்லாம் நம் பிரதேசத்தில் நடக்கின்ற பெண்கள் மீதான அடக்கு முறை என்று சொல்லாமல் என்ன செய்வது .........?

ஒரு ஆடவன் ஒருத்தியை நேசித்துப் பின்னர் அவளைப் பிடிக்கவில்லையோ அல்லது வேறு காரணத்திற்காகவோ அவளை விட்டு விட்டு இன்னொரு பெண்ணுடன் வாழலாம். அதை ஒன்றுமே கூறாமல் ஏற்றுக் கொள்கிறது எமது சமுதாயம். ஆனால் அவனால் நேசிக்கப்பட்ட பெண்ணைப்பற்றி நம்மவர்கள் நாக்கிலே நரம்பில்லாது என்னமாய்த் தூற்றி விடுகிறார்கள். இதனால் அவளுடைய எதிர்காலம் கேள்விக்குறியாய் ஆவது பற்றி எவருமே சிந்திப்பதில்லை.

"சீதை தவறே செய்யாவிடினும் அவளை தீக்குளிக்க வைத்துவிடும்
நமது சமுதாயம் - ஆடவர்களும் இராமனாய் இருக்கவேண்டும்
எனச் சிறிதும் எண்ணுவதில்லையே" ஒவ்வொரு பெண்ணினதும் உணர்வுகளையும் அவர்களின் உரிமைகளையும் மதித்து நமது சமுதாயம் புரிந்துணர்வுடன் நடக்கும் காலம் வந்தால் தான் அன்றந்தப் பெண்விடுதலை பற்றிப் பாடிய பாரதிக்கும் நமது பெண்களுக்கும் பெண் சுதந்திரம் என்பதில் ஒரு சிறு வெற்றியையாவது எதிபார்க்கலாம்.

செல்வி. லதாயினி சண்முகலிங்கம்
தரம் 10

# My Pet

My Pet is a cat . She is eight months old. Her name is "LUCKY". She plays with me. When eat in the mornings, she tries to join me. She never comes to eat with me in the nights. She does lot of work at that time. She cat chees rats and eat them happily.

P. Makilrathy.
Grade - 4

# My Garden

I have a garden in my home. It is a beautiful one. There are many flower plants. Such as rose, jasmine sunflower and crotons too. I water the plants every evening. My flower garden looks very nice and pretty.

S. Dharanya
Grade - 5

# My Birthday

My birthday is on may 05th Last year I got a parcel from my uncle and a greeting card from my friend on my birthday. That parcel was a shirt as the birthday present. My elder brother gave a bicycle to me as the present. My mother made the birthday cake and some short eats and sweets. I wore new dresses in the evening and had a party. My friends attended the party and they presented many things, I served cake, biscuits, short eats and tea. Then we danced and sang songs till 6.30 P.M and after it they left for their houses.

T. Thanikasalam
Grade - 6

## Good Habbits

- Always wash your hands before eating
- Bathe daily ;wear clean clothes
- Eat nutritious food
- Do not eat fruits that are decayed
- Wash fruits before you eat them
- Clean your teeth in the mornings and in the nights
- Cut your nails daily
- Learn to be clean and of course to be healthy

S.karthika
Grade 7

## My School

The name of my school is J /kopay Saravanapavanantha vithiyalayam. It is in Kopay joined there in 1995. My name is Pavithra I am studying in Grade 8. My father also studied in this school. He thinks that this is the best suitable school for me to develope my abilities and my personality. I love my school very much it is like a home for me. Our principal is Mr. shanmugaratnam. He is very kind and motivates us to study well Our teachers are also very nice. My school has a big play ground, a computer room and a library also . There are classes from grade one up to eleven it was built in 1926. It is a mixed school and it is developing now .

T.Pavithra
Grade 8

# பவள விழா

யா/ கோப்பாய் சரவணபவ வித்தியாலயம் தனது பவள விழாவைக் கொண்டாடுவதையிட்டு இப்பாடசாலையின் பழைய மாணவனும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும் என்ற வகையில் யான் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு இப்பாடசாலை 75வது ஆண்டு நிறைவடைந்து பவளவிழாக் கொண்டாடும் காலத்தில் அதன் செயற்பாடுகள் மேன்மையுற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

முன்னைய காலங்களில் கல்வி கலாச்சாரம் போன்றவை ஆலயங்களை மையமாக வைத்தே வளர்க்கப்பட்டன. இப்பணியில் எமது பாடசாலையும் சித்திர வேலவன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு "சரவணபவ" என்னும் பெயரைத்தாங்கி நிற்கின்றமை பெருமைக்குரிய தொன்றாகும்.

இக்கல்விச் சாலையானது எமது கிராமத்தவர்களுக்குக் குறிப்பாக ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். சிறுவர் உரிமைகளிலே பாடசாலைகளின் தேவைப்பாடுகள் சட்ட மூலம் உணர்த்தப்பட்டிருப்பினும் இவ்வகையான ஒரு பாடசாலை இல்லாதிருப்பின் எத்தனையோ பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். இக்குறைபாடு நீக்கப்பட்டுள்ளமை விதந்து குறிப்பிடத் தக்கதொன்றாகும். அததோடு இவ்வகையான அறப்பணிகளைச் செய்த நம் முன்னோர்களின் பணிகள் நினைவுகூரத்தக்கவையாகும்.

மேலும் இப்பணிகள் தொடர்ச்சியான வகையில் இன்றைய பெரியோர்களாலும் எதிர்காலச் சந்ததியினராலும் கட்டியெழுப்பப்படல் வேண்டுமென அன்பாக கேட்டுக்கொள்வதோடு, எனது பதவிக்காலத்தில் வித்தியாலய வளர்ச்சிப் பணியில் முக்கிய பங்காற்றிய பாடசாலைப் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், நலன் விரும்பிகள் யாவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஐ. சிவலோகநாதன்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் பேனாவிலிருந்து ........

இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எம் முன்னோர்களால் சைவமும் தமிழும் தழைக்க வேண்டும் என்ற பேரவாவால் ஸ்தாபிக்கப்பட்டதே சித்திர வேலவர் பெயரைத் தாங்கி நிற்கும் இவ்வித்தியாலயமாகும். எனது பாடசாலைப் பருவத்தில் (1950 - 1960) 'ப' வடிவில் கிழக்கே ஒரு கட்டிடமும் மேற்கேஒரு சிறு கட்டிடமுமாக மட்டுமே அடிப்படை வசதிகளின்றிப் பல சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வந்த இப்பாடசாலை இன்று ஏழு தசாப்தங்களைத் தாண்டி படிப்படியாக வளர்சியடைந்து உங்கள் முன் பவள விழாக்காணும் பெரும் விருட்சமாகத் திகழ்கின்றதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

பாடசாலை வளர்ச்சியை நோக்கும் போது பழைய மாணவர் சங்கத்தின் சேவை குறிப்பிடத்தக்கதொன்றாகும். பாடசாலைக்கென ஒரு நூல்நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது பழைய மாணவர் சங்கத்தினாலேயே ஆகும். இதனை அமைப்பதற்கு பொறியியலாளரும் பழைய மாணவருமான திரு. க. ஸ்ரீஸ்கந்தராஜாஅவர்கள் அப்போது ரூபா 5000 கொடுத்து உதவியிருந்தார். வேறு பல பழைய மாணவாகளும் அன்பளிப்புச் செய்து அயராது பாடுபட்டு உழைத்தமை மறக்கக் கூடியதன்று.

பாடசாலைக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கும் வேலையை ஒப்பந்த அடிப்படையில் பெற்று இலாபப் பணத்திற்கு மேற்குக் கட்டிட விறாந்தையை நிர்மாணித்துள்ளது. பாடசாலை பரிசளிப்பு விழாக்களின் போது பழைய மாணவர் சங்க அறக்கொடை நிதியிலிருந்து பணம் வழங்குவதுடன் வருடாந்தம் நடைபெறும் இல்லமெய் வல்லுனர் போட்டிக்கு நிதியுதவி அளித்து சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்குகின்றது. வருடாந்தம் 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியுறும் மாணவாகளை கௌரவித்து பரிசில்களும் வழங்குகின்றது.

இவ்வித்தியாலயம் இன்று வரை பல கல்விமான்களை உருவாக்கியுள்ளது. இங்கு படித்து உயர் கலவி கற்று பட்டம் பெற்ற பின் இப்பாடசாலையிலேயே கற்பித்தல் தொழிலைச் செய்தவர்கள் தமக்கும் பாடசாலைக்கும் பெருமையை தேடிக்கொண்டார்கள். ஏழைவிவசாயிகளின் பிள்ளைகளே பெருமளவில் கல்வி கற்கின்றனர். இவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் ரூபா 500, 1000 பத்திரங்கள் மூலமும், வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர்களிடமிருந்தும் ஏறக்குறைய ரூபா 150 000 வரையில் நிதியைப் பெற்றுள்ளது.

இதன் வட்டிப்பணத்தில் ஏழைப்பிள்ளைகளுக்கு 2000ம் ஆண்டளவில் கற்றல் உபகரணங்களும், அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டது. நிதி சேர்க்கும் முயற்சியை முன்னெடுத்துச் செய்தவர் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. பொ. விக்னேஸ்வரலிங்கம் என்பவராவர்.

அண்மைக்காலம் வரை விளையாட்டு மைதானம் இல்லாத பெருங்குறை இருந்து வந்தது. மைதானத்துக்குரிய காணியைக் கொள்வனவு செய்தும், அன்பளிப்பாகப் பெற்றும் இக்குறையை நிவர்த்தி செய்ததும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தற்போது பவள விழாக் கொண்டாடுவதற்கும் மலர் வெளியிடுவதற்கும் தேவையான நிதியைச் சேகரிப்பதும் சங்கத்தின் பணியாகும். வெளிநாட்டிலுள்ள எமது பழைய மாணவாகள் சிலர் நிதி அன்பளிப்புச் செய்துள்ளார்கள். வசதி படைத்த தாராள சிந்தையுள்ளவர்களிடம் மேலும் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றோம். நாம் படித்த பாடசாலை நம் பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலை நமது சந்ததியினர் படித்துப் பயனடையப்போகும் பாடசாலை என்பதை கருத்தில் கொண்டு வாரிவழங்குவீர் என எதிர்பார்க்கின்றோம்.

எனது பதவிக்காலத்தில் பாடசாலை வளர்ச்சியில் தமது காணிகளை அன்பளிப்பாக வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் காணிகளைக் கொள்வனவு செய்யவும், கட்டிட விஸ்தரிப்புக்கும் பாடசாலை நிகழ்வுகளுக்கும் பணம், பொருள் உதவிகள் வழங்கிய அன்புள்ளங்களுக்கும், மற்றும் வித்தியாபகுதியின ருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைக் கூறிக்கொள்வதோடு இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் எதிர்காலத்தில் தங்கள் அன்பளிப்புகளையும் உதவிகளையும் நாடிநிற்கின்றோம்.

பவள விழா மலர் வெளியிடுவதற்கு ஆக்கங்கள் தந்து உதவிய மாணவச் செல்வங்கள், கல்விமான்கள் பழைய மாணவர்கள், விளம்பரதாரர்கள், மலரை வெளியிடுவதற்கு அயராது உழைத்து ஒத்துழைப்பு வழங்கிய மலர்க் குழுவினர் பழைய மாணவர்சங்கத்தினர், நலன் விரும்பிகள், மற்றும் யாவருக்கும் மலரை அச்சிட்டு உதவிய ஐங்கரன் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

திருமதி. பேரின்பராணி இரத்தினசிங்கம் B.A (Cey)
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

# கல்வி அபிவிருத்திக்கு நிதி வழங்கியோர்

| | |
|---|---|
| திரு. அ. சற்குணநாதன் | 1000.00 |
| திரு. ஐ. சிவலோகநாதன் | 500.00 |
| திருமதி. சி. சௌதாம்பிகை | 500.00 |
| திரு. மா. முருகேசம்பிள்ளை | 500.00 |
| திரு. சி. தவலிங்கம் | 500.00 |
| திரு. க. இ. சரவணமுத்து | 1000.00 |
| திருமதி. அ. நல்லையா | 1000.00 |
| செல்வி. ந. லோகேஸ்வரி | 500.00 |
| திருமதி. பே. இரத்தினசிங்கம் | 500.00 |
| திருமதி. விஜயராணி தயாளன் | 1000.00 |
| திருமதி. தவேஸ்வரி நல்லநாதன் | 1000.00 |
| திரு. பொ. சோமசுந்தரம் | 5000.00 |
| திரு. ஆறுமுகம் பிறேம்குமார் | 100FR |
| திரு. சி. உருத்திரலிங்கம் | 150FR |
| திரு. வீ. தயானந்தன் | 250FR |
| திரு. சி. கணேசலிங்கம் | 150FR |
| திரு. அ. தவக்குமார் | 150FR |
| திரு. அ. காசிப்பிள்ளை | 200FR |
| திரு. கா. ராகவன் | 100FR |
| திரு. து. இராசலிங்கம் | 100FR |
| திரு. க. சீலன் | 100FR |
| திரு. கு. தயாபரன் | 100FR |
| திரு. சு. சுரேஸ்குமார் | 200FR |
| திரு. த. வசந்தகுமார் | 200FR |
| திரு. ந. சண்முகலிங்கம் | 100FR |
| திரு. கு. ஆனந்தகுமார் | 100FR |
| திரு. வ. இந்திரலிங்கம் | 100FR |
| திரு. வ. செல்வசற்குருநாதன் | 100FR |
| திரு. சோ. பாலகுமார் | 100FR |
| திரு. ந. சிவலிங்கம் | 100FR |
| திரு. க. சுந்தரலிங்கம் | 50FR |
| திருமதி. ஜெகநாதன் சாந்தி | 100FR |
| திரு. சோ. பாஸ்கரன் | 50FR |
| திரு. சி. பகீரதன் | 50FR |
| திரு. இ. நிசாகரன் | 100FR |
| திரு. வே. சித்திரன் | 150FR |

| | | |
|---|---|---|
| திரு. இ. ஜெகதீசன் (அப்பன்) | 200FR | |
| திரு. இ. ஸ்ரீதரன் | 50FR | |
| திரு. செ. ரங்கன் | 100FR | |
| திரு. சீ. கிருஸ்ணகுமார் | 100FR | |
| | 3350FR | |
| கழிவு | 30FR | |
| 3320 x 42.55 | 3320 | 141,275.00 |
| திரு. க. பாலகுமாரன் | | 1000.00 |
| திரு. அ. செல்வம் | | 1000.00 |
| செல்வி. உமாராணி தம்பிஜயா | | 1000.00 |
| திரு. அ. தெய்வேந்திரலிங்கம் | | 1000.00 |
| திரு. க. மார்க்கண்டு | | 5000.00 |
| திரு. அ. ஜெயரத்தினம் | | 1000.00 |
| திரு. தி. சுரேஸ்குமார் | | 500.00 |
| திரு. ச. குணசிங்கம் | | 1000.00 |
| திருமதி ம.சிவனேசராசா | | 2000.00 |

## காணிக் கொள்வனவுக்கு நிதி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. கா. திருச்செல்வம் | 5000.00 |
| திரு. க.இ. குமாரசாமி | 1030.00 |
| திரு. சுகுமார் | 1000.00 |
| திருமதி. பே. இரத்தினசிங்கம் | 500.00 |
| திரு. ஐ. சிவலோகநாதன் | 1000.00 |
| திரு. மா. ஸ்ரீகாந்தன் | 100.00 |
| திரு. ச. குணசிங்கம் | 1000.00 |
| திரு. ஐ. சிவலோகநாதன் | 500.00 |
| திரு. சி. கைலைநாதன் | 500.00 |
| திரு. க. செல்வராசா | 1000.00 |
| திரு. நா. வேலாயுதபிள்ளை | 200.00 |
| திரு. வை. துரைராசா | 150.00 |
| திரு. ச. நவரத்தினம் | 1000.00 |
| திருமதி. புஸ்பராஜமணி கணேசன் | 5000.00 |
| திரு. இ. இந்திரகுமார் | 3000.00 |
| திரு. க. இராசதுரை | 200.00 |
| திரு. தெ. தவரத்தினம் | 500.00 |
| திரு. இ. பூரணலிங்கம் | 100.00 |
| திருமதி. அ. நல்லையா | 500.00 |
| திருமதி. ந. பறுவதம் | 300.00 |

| | |
|---|---|
| திரு. த. சிவராசா | 100.00 |
| திரு. பொ. சிவகுரு | 200.00 |

## காணி அன்பளிப்பு

திரு. சின்னத்தம்பி பொன்னையா
திரு. சின்னத்தம்பி மார்க்கண்டு.
திரு. முருகர் சுந்தர்
திரு. நாகலிங்கம் அம்பலவாணர்
திரு. சின்னக்குட்டி கதிரவேலு } ஞாபகார்த்தமாக திரு. மார்க்கண்டு
திரு. செல்லையா சிவலிங்கம் } விளையாட்டு மைதானம்

## அன்பளிப்பு

**பேசுவதற்கான பீடம் அமரர் திரு. சின்னத்தம்பி கந்தையா ஞாபகார்த்தமாக திரு.க.ஸ்ரீஸ்கந்தராஜாவின் அன்பளிப்பு.**

**சறுக்கீஸ் விளையாட்டு இடம்: திரு. தி. சுப்பிரமணியம்**

**முகப்புப் பெயர் வளைவு: திரு. க. சோமேஸ்வரன்**

## நிரந்தர வைப்பு நிதி வழங்கியோர்

**5ம் ஆண்டு புலமைப்பரிசில்**

| | |
|---|---|
| திரு. சி. துரைராஜா | 1000.00 |
| திரு. த. பரமானந்தராசா | 1000.00 |
| திரு. செ. தம்பிராசா | 1000.00 |
| திரு. சீ. க. சுப்பிரமணியம் | 1000.00 |
| திரு. செ. செல்வரத்தினம் | 1000.00 |

### G.C.E. O/L


உதவி மனேஜர் திரு. சி. பொன்னையா ஞாபகார்த்தமாக

| | |
|---|---|
| பொ. சதானந்தம் | 2000.00 |
| முத்தமிழ் விழா பரிசில்கள் திரு. இ. சுப்பையா | 10000.00 |

T.V டெக், றேடியோ, ஓடியோ கருவிகள், கசெற் வகைகள், மணிக்கூடுகள், பிலிம்றோல், மதிவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்

# இ.ச.பேரம்பலம் சகு நிறுவனம்





50, 52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பல வண்ண வண்ண ஆடைகளைத் தெரிவு செய்ய யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்

# ஜி.எஸ். லிங்கநாதன் அன்கோ




13- 14, பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம்.



கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய
பவளவிழா மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்!

# JEISHEBA AGENCY

General Hardware Merchants



டோக்கியோ,மிற்சுயி சீமெந்து,
எஸ்-லோன் பைப் வகைகள், **C.I.C** பெயிற் வகைகள்
போன்ற கட்டடப் பொருட்களின் மொத்த சில்லறை
வியாபார ஸ்தாபனம்.

T.P: 021 - 2407
Fax: 021 - 2140

**132, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்**

DATE..........
LIBRARY

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய
பவளவிழா மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்!

# செல்வன்
# டீசல் என்ஜினியேர்ஸ்




சகலவிதமான டீசல் இயந்திர வாகனங்கள்

மிகத் துரிதமாக

சிறந்த முறையில் திருத்திக்

கொடுக்கப்படும்.



**பருத்தித்துறை வீதி,**
**கோப்பாய்ச் சந்தி,**
**கோப்பாய்**

உரிமையாளர்: அ.குணம்

Cover Printed By: GURU Printers, Thirunelvely.

*Ingaran Computer Designer & Printers, A.G.A'S Office Lane, Kopay.*